

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | பிப்ரவரி 05, 2015 | புரட்சி 14 | முழக்கம் 4 | விலை: ரூ.3.00


## திருச்சியில் கோட்சே ஆதரவாளர்களைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

# காந்தி நினைவு நாளில் கழகத்தினர் கைது!

ஆக. 29ஆம் தேதி தொடங்கப்பட்டதுதான் விசுவ இந்து பரிஷத். ஆனால், அதை காந்தி நினைவு நாளில் தொடங்கப்பட்டதாக மாற்றிக் கொண்டார்கள். பார்ப்பனர்கள், சங்கராச்சாரிகள், சாமியார்கள் இடம் பெற்றுள்ள அமைப்பு விசுவ இந்து பரிஷத். பாரதிய ஜனதா கட்சி உருவாவதற்கு முன்பே 1964ஆம் ஆண்டிலே ஆர்.எஸ்.எஸ். தலைவர் கோல்வாக்கர் ஆலோசனை பெயரில் தொடங்கப்பட்ட இந்த அமைப்பு, அயோத்தியில் 'இராமன்', மதுராவில் 'கிருஷ்ணன்', காசியில் 'விசுவநாதன்' ஆகிய மூன்று மதக் கடவுள்களுக்கும் அங்கே அமைந்துள்ள மசூதிகளைத் தகர்த்துவிட்டு கோயில்கள் கட்டவேண்டும் என்று அறிவித்தது. பிற மதத்தினரை 'இந்து' மதத்துக்கு மாற்றுவதற்காகவே 'தர்ம பிரச்சார்' என்ற தனிப் பிரிவை, விசுவ இந்து பரிஷத் உருவாக்கியுள்ளது. 1966ஆம் ஆண்டு பசுவதை தடைச் சட்டம் கொண்டு வர வலியுறுத்தி, டெல்லியில் காமராசரை உயிரோடு கொளுத்த திட்டமிட்டு, அவரது வீட்டுக்கு தீ வைத்து, சங் பரிவாரங்களோடு சேர்ந்து விசுவ இந்து பரிஷத்தும் வெறியாட்டம் நடத்தியது.

இந்த விசுவ இந்து பரிஷத், திருச்சியில், 'ஜனவரி 30ஆம் தேதி' காந்தி கொலை செய்யப்பட்ட நாளில் பொன் விழா ஆண்டை கொண்டாட முடிவு செய்தது. இதற்கு காவல்துறையும் அனுமதி வழங்கியது. காந்தி கொலை செய்யப்பட்ட நாளில் காந்தி கொலையை நியாயப்படுத்தும் ஒரு அமைப்புக்கு அனுமதி வழங்கும் நிலைக்கு காவல்துறை - ஆர்.எஸ்.எஸ். அமைப்புபோல் செயல்படுவது வெட்கக்கேடானதாகும். இதைக் கண்டித்து, திருச்சி மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம், உடன்பாடுள்ள அமைப்புகளைத் திரட்டி, எதிர்ப்பை வெளிப்படுத்தியது. ஜனவரி 30 பகல் 11.30 மணியளவில் திருச்சி தெப்பக்குளம் அருகிலுள்ள காந்தியார் சிலைக்கு கழகத் தோழர்கள் மாலை அணிவித்தனர். மதவெறிக்கு எதிரான உறுதிமொழியை எடுத்துக் கொண்டு, 'விசுவ இந்து பரிஷத்' கூட்டத்துக்கு அனுமதித்த காவல்துறையைக் கண்டித்து, காந்தி சிலையின் கீழ் ஆர்ப்பாட்டம் நடத்தினர். மாலை அணிவிக்க வந்த காங்கிரசாரும் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர். தடையை மீறி ஆர்ப்பாட்டம் நடத்திய திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட செயலாளர் வே.கந்தவேல் குமார், தலைமைக்குழு உறுப்பினர் புதியவன், தோழர்கள் பழனி, முருகானந்தம், முத்து, தெய்வமணி, வழக்கறிஞர் சந்துரு, ஆதித் தமிழர் பேரவைத் தோழர்கள் மலர்மன்னன், ஆறுமுகம், அறிவழகன், மா.லெ. மக்கள் விடுதலைத் தோழர்கள் வழக்கறிஞர் சுரேஷ், செல்வக்குமார், த.ஓ.வி. தோழர் சம்பத் உள்ளிட்ட 15 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். இதேபோல புவனா சரவணன் தலைமையில் கோட்சே பட எரிப்புப் போராட்டம் நடத்திய தந்தை பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் 15 பேர் திருச்சி மத்திய பேருந்து நிலையம் பெரியார் சிலை அருகே கைது செய்யப்பட்டனர்.



# பெங்களூரில் மாநாடு போல் நடந்த பெரியார் அம்பேத்கர் நினைவு நாள்





பெங்களூர், சிவாஜி நகர், வேளாண்மை அறிவியல் நிறுவன அரங்கில் 'கற்பி ஒன்று சேர் ' அமைப்பின் தலைவர் ஜார்ஜ் ஒருங்கிணைப்பில் 26-01-2015 திங்கள் அன்று பிற்பகல் 3-00 மணி முதல் 8-00 மணிவரை பெரியார் அம்பேத்கர் நினைவு நாள் நிகழ்வு நடந்தேறியது.

நிகழ்ச்சி கர்நாடக மாநில ரிபப்ளிகன் கட்சி, சமதா சைனிக் தள் ஆகியவற்றின் தலைவராகிய முனைவர் வெங்கடசுவாமி தலைமையில் நடைபெற்றது.

நிகழ்வில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, ஓய்வு பெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி வெங்கட்டையா, சப்தகிரி மருத்துவக் கல்லூரி முதல்வர் டாக்டர் சுரேந்திரநாத், பெங்களூர் பல்கலைக் கழக சமூகவியல்துறை தலைவர் முனைவர் சமதா தேஷ்மானே ஆகியோர் பெரியார், அம்பேத்கர் ஆகியோரின் சமூகப் புரட்சிப் பணிகளை தமிழிலும், கன்னடத்திலும் விரிவாகப் பேசினர். கூட்டத் தலைவரும் கன்னட தலைவர்களும் பெரியாரைப் பற்றியும் அவரது போராட்டங்களைப் பற்றியுமே அதிகம் பேசினர்.

## பாடல் குறுவட்டுகள் வெளியீடு

நிகழ்ச்சியில் பெரியார், அம்பேத்கர் ஆகியோரை பற்றிய ஆறு, ஆறு பாடல்களைக் கொண்ட குறுவட்டுகள் தமிழ், கன்னட மொழிகளில் வெளியிடப் பட்டன. பாடல்களைத் கழகத் தோழர் சித்தார்த்தனும், பாடகி சுஜாதாவும் எழுதி, தோழர்கள் சுஜாதா, கோபிநாத் ஆகியோர் பாடியிருந்தனர்.

நிகழ்வின் தொடக்கத்தில் அம்பேத்கரைப் பற்றிய ஒரு தமிழ்ப் பாடலுக்கும் பெரியாரைப் பற்றிய ஒரு கன்னடப் பாடலுக்கும் மாணவர்கள் நடனம் ஆடினர். குறுவட்டு வெளியீட்டைத் தொடர்ந்து மேட்டூர் கருப்பரசன் கலைக் குழுவினரால் வீதி நாடகங்கள் நடத்தப் பட்டன. அவற்றை மக்கள் வெகுவாக வரவேற்றனர். குறிப்பாக மூன்றில் ஒரு பங்கினராக இருந்த கன்னட மக்களும், கன்னடத் தலைவர்களும் கைதட்டி ஆரவாரம் செய்து வரவேற்றது குறிப்பிடத்தக்கதாகும்.

# அதிகாரிகள் மதப் பிரச்சாரம் செய்யலாமா? சங்பரிவாரங்களின் இரட்டைவேடம்

அய்.ஏ.எஸ். அதிகாரிகள் மதப் பிரச்சாரம் செய்யக் கூடாது என்று தமிழக அரசின் தலைமைச் செயலாளர் அய்.ஏ.எஸ். அதிகாரி உமாசங்கருக்கு உத்தரவிட்டுள்ளார். மதச் சார்பற்ற ஒரு நாட்டில் அதிகாரிகள் மதப் பிரச்சாரகர்களாக மாறக் கூடாது என்ற கருத்து வரவேற்கப்பட வேண்டியதாகும். அதிகாரி உமாசங்கர், கிறிஸ்துவ சுவிசேஷப் பரப்புரையாளராக ஊர்தோறும் பயணம் செய்கிறார். தனது 'சுவிசேஷ'ப் பிரச்சாரத்தின் வழியாக பார்வையற்றவர்களுக்கு பார்வை பெற்றுத் தருவதாகவும் பேச இயலாதவர்களை பேச வைப்பதாகவும் கூறுவதும் அறிவியலுக்கு எதிரானது. நேர்மைக்கு புகழ் பெற்ற ஒரு அதிகாரி, கடும் மன உளைச்சலில் இப்படி ஒரு முடிவுக்கு வந்துவிட்டார் என்றே தெரிகிறது. ஆனாலும், அவரது மதப் பிரச்சாரம் ஏற்கவியலாது என்பதே நமது உறுதியான கருத்து.

அதே நேரத்தில், அரசு அலுவலகங்களில் கடவுளர் படங்களை மாட்டக் கூடாது என்ற அரசு ஆணைகள் மதிக்கப்படுவது இல்லை. காவல் நிலையங்கள், பஜனை மடங்களாக காட்சியளிக்கின்றன. தேர்தல் ஆணையர் நீதிபதி என்ற நிலையில் உள்ளவர்கள் பூணூல் மேனியோடு சங்கராச்சாரி காலில் வீழ்கிறார்கள். அதிகாரிகள் மேஜையில் மதத் தலைவர் படங்கள் அலங்கரிக்கின்றன. 'சபரிமலை' போகும் வேடங்களோடு அலுவலகம் வருகிறார்கள். அரசு வளாகங்களில் கோயில் கட்டுகிறார்கள். ஜெயலலிதா வழக்கு, பெங்களூர் நீதிமன்றத்தில் நடந்தபோது இந்து அறநிலையத் துறை ஜெயலலிதா வழக்கிலிருந்து விடுதலை பெற கோயில்களில் சிறப்பு பிரார்த்தனைக்கு உத்தரவிட்டது. பண்ணாரி அம்மன் கோயிலில் மாவட்ட ஆட்சித் தலைவர், காவல்துறை அதிகாரிகள் தீ மிதிக்கிறார்கள். நீதிபதிகளும், உயர் அதிகாரிகளும் 'இலக்கிய உரை' என்ற பெயரில் இராமாயணம், 'பகவத் கீதை', பக்தி இலக்கியங்கள் குறித்து பரப்புரை செய்கிறார்கள். இப்படி ஏராளம் பட்டியலிட முடியும். வீட்டிற்குள் மட்டுமே இருக்க வேண்டிய இந்த மத வழிபாடுகளை பொது விடங்களுக்குக் கொண்டு வருவதுகூட ஒரு பரப்புரைதான். இதற்கெல்லாம் ஏன் எந்தத் தடையும் இல்லை?

உமாசங்கருக்கு எதிராக போராடக் கிளம்பியிருக்கும் 'சங்பரிவாரங்கள்', அதிகாரிகளை தங்களின் மதச் செயல்பாடுகளுக்குப் பயன்படுத்தியதை ஏராளமாக பட்டியலிட முடியும். சான்றுக்கு சில:

- அரசு ஊழியர்கள், ஆர்.எஸ்.எஸ்.சில் உறுப்பினர்களாக இருக்கலாம் என்று அனுமதித்து, அதற்கான தடையை நீக்கி ஆணையிட்டது, குஜராத்தில் பா.ஜ.க. ஆட்சி. அப்போது முதல்வராக இருந்தவர் கேசுபாய் பட்டேல். இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட நாள் ஜன.3, 2000. அரசு ஊழியர்கள், அரசியல் கட்சிகளில் உறுப்பினர்களாக இருக்க தடை இருக்கும்போது ஆர்.எஸ்.எஸ்.சில் எப்படி உறுப்பினராகலாம் என்று எதிர்ப்புகள் வந்தன. அதற்கு பிரதமர் வாஜ்பாய், "ஆர்.எஸ்.எஸ். அரசியல் அமைப்பு அல்ல; அது ஒரு கலாச்சார அமைப்பு" என்று நியாயப்படுத்தினார். நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் இதை கடுமையாக எதிர்த்தன. 5 நாள்களில் 12 ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. அப்போது வாஜ்பாய் ஆட்சிக்கு நாடாளுமன்றத்தில் மெஜாரிட்டி பலம் இல்லை. கூட்டணி கட்சிகளின் தயவில் செயல்பட வேண்டியிருந்ததால் கட்சித் தலைவர் குஷாபாவு தாக்கரே வழியாக குஜராத் முதல்வர் கேசு பாயிடம் பேசினர். ஆர்.எஸ்.எஸ். ஆணையை திரும்பப் பெறக் கூடாது என்று பிடிவாதம் பிடித்தது. கடைசியில் கோவிந்தாச்சார் யாவும், வெங்கய்ய நாயுடுவும், குஜராத் முதல்வரிடம் மத்திய ஆட்சிக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை எடுத்துக்கூறி உத்தரவை திரும்பப் பெறச் செய்தனர்.
- 1948ஆம் ஆண்டு அயோத்தியில் பாபர் மசூதி வளாகத்துக்கு நள்ளிரவில் இராமன், சீதை சிலைகளைக் கொண்டு வந்து போட்டார்கள். இராமன், சுயம்புவாகத் தோன்றியிருக்கிறான்; இதுவே இராமன் பிறந்த இடம் என்றார்கள். மசூதி பூட்டப்பட்டது. பிறகு இராமனை வழிபட மசூதியை திறக்க வேண்டும் என்று வழக்குப் போட்டார்கள். நீதிபதியாக இருந்த பாண்டே, மசூதியை வழிபாட்டுக்கு திறந்துவிட உத்தரவிட்டார். இதற்காக அந்த நீதிபதியை நாடாளுமன்ற உறுப்பினராக்கியது பாரதிய ஜன சங்கம்.
- அயோத்தியில் பாபர் மசூதியை இடித்தபோது உ.பி. முதல்வராக இருந்தவர் பா.ஜ.க.வைச் சார்ந்த கல்யாண் சிங். 'கரசேவை' என்ற பெயரில் மசூதியை இடித்துத் தள்ள திட்டமிட்ட நிலையில், கல்யாண்சிங், பைசாபாத் காவல்துறை பொறுப்பில் டி.பிராய் என்கிற, மதவெறி அதிகாரியை பொறுப்பாக நியமித்தார். மசூதி இடிக்கப்பட்டபோது, அதைத் தடுக்க வந்த மத்திய ஆயுதப் படை போலீசை தடுத்து நிறுத்தி, 'கரசேவகர்கள்' மசூதியை இடிக்க அனுமதித்தார், டி. பிராய். மசூதி இடித்து முடிக்கப்பட்டப் பிறகு, தனது பதவியிலிருந்து விலகினார். அவரை பா.ஜ.க. நாடாளுமன்ற உறுப்பினராக்கி நன்றிக் கடன் தெரிவித்தது.
- பாபர் மசூதி இடிப்பைத் தொடர்ந்து மும்பையில் சங்பரிவாரங்கள், வன்முறையில் இறங்கின. இஸ்லாமியர்கள் குறி வைத்து தாக்கப்பட்டார்கள். கலவரங்கள் குறித்து விசாரணை நடத்த மகாராஷ்டிராவில் ஆட்சியிலிருந்த காங்கிரஸ் ஆட்சி, நீதிபதி சிறீ கிருஷ்ணா தலைமையில் விசாரணை ஆணையம் அமைத்தது. அதற்குப் பிறகு, 1996இல் மகாராஷ்டிராவில் ஆட்சிக்கு வந்த சிவசேனா-பா.ஜ.க. கூட்டணி ஆட்சி, இந்த ஆணையத்தை கலைக்க முடிவு செய்தது. கடும் எதிர்ப்புகள் காரணமாக தனது முடிவை திரும்பப் பெற்றுக் கொண்டது. காவல்துறை அதிகாரிகளே கலவரத்திலும், கொள்ளையிலும் ஈடுபட்டதற்கான ஆதாரங்களைத் திரட்டி சிரிகிருஷ்ணா ஆணையம் முன் வைத்ததோடு, நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய 31 காவல்துறை அதிகாரிகள் பட்டியலையும் வெளியிட்டது. இவர்கள் மீது பா.ஜ.க.- சிவசேனா ஆட்சி எடுத்த நடவடிக்கைகள் என்ன தெரியுமா? 10 அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்கியது. ஒரு அதிகாரி மும்பை மாநகர ஆணையராகவே நியமிக்கப்பட்டார். ஆணையம் குற்றம் சாட்டியிருந்த இதர 12 அதிகாரிகள் மீதான குற்றச்சாட்டை அரசே விலக்கிக் கொண்டது.
- அதிகாரிகளை மட்டுமல்ல, இராணுவத்தினரும் பா.ஜ.க. ஆட்சியில் வரம்பு மீறி மதவாத அமைப்புகளுடன் தொடர்பு கொண்டிருந்தனர். அதற்கு அரசும் அனுமதித்தது. 2000ஆம் ஆண்டு கார்கில் போர் நடந்தபோது, பா.ஜ.க. செயற்குழு கூடியது. அந்த செயற்குழுவில் இந்திய இராணுவ உயரதிகாரிகள் கலந்து கொண்டு கார்கில் போர் நிலவரம் குறித்து விளக்கமளித்துப் பேசினர். கலந்து கொண்ட அதிகாரிகளின் பெயர்- இராணுவ செயல்பாட்டுக்கான தலைமை இயக்குனர் எம்.சி. விஜ், உதவி ஏர்மார்ஷல் எஸ்.கே. மாலிக்.
- கார்கிலுக்கு அருகே ஒரு பகுதியில் ஆர்.எஸ்.எஸ். 'சிந்து தர்ஷன்' என்ற விழாவை நடத்தியபோது (1998) விழாவுக்கான ஏற்பாடுகளை செய்ததே, இந்திய இராணுவம்தான். லெப்டினன்ட் ஜெனரல் வி.எஸ். புத்வார் என்ற அதிகாரி, முன்னின்று ஏற்பாடுகளை செய்தார். கார்கில் போருக்குப் பிறகு, மீண்டும் இதே பகுதியில் 'வேதங்களை' ஓதி, ஆர்.எஸ்.எஸ். விழா நடத்தியபோது, இந்திய இராணுவ அதிகாரிகளும் படையினரும் விழாவில் பங்கேற்றனர். அமைச்சர்கள் வாஜ்பாய், அத்வானி உள்ளிட்ட அமைச்சர்கள் பலரும் கலந்து கொண்டனர். பல்வேறு பகுதிகளில் ஆர்.எஸ்.எஸ். நடத்தும் சிந்துதர்ஷன் விழாக்களில் இராணுவத்தினர் பங்கேற்பது வழக்கம். ஆனால், இராணுவமும் மதவெறியும் கைகோர்த்து நிற்கும் இந்த ஆபத்துகள் குறித்து கண்டனங்கள் எழுவது இல்லை.

அதிகாரிகள் மதப் பிரச்சாரம் செய்யலாமா என்று, உமாசங்கர்களைக் கேட்கும் சங்பரிவாரங்கள், மேலே நாம் பட்டியலிட்டுள்ளவைகளுக்கு என்ன பதிலை கூறப் போகிறார்கள்?

## விமானம் விட்ட கதை

ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே இந்தியாவில் விமானம் ஓட்டியதாக, பம்பாயில் நடந்த விஞ்ஞான காங்கிரசில் முன்னாள் விமான ஓட்டி ஒருவர் அறிக்கை வாசித்தார். இது குறித்து ஏற்கெனவே மறுப்புகள் வெளிவந்துள்ளன.

'முன்னோர்கள்' பற்றி கூறப்படும் பெருமைகளை அறிவியல் அடிப்படையில் நிரூபிக்கப்பட்டால் ஒழிய ஏற்றுக் கொள்ள முடியாது. இது பற்றி 'தமிழ் இந்து' நாளேட்டில் மற்றொரு மறுப்புக் கட்டுரை ஜனவரி 19இல் வெளி வந்திருக்கிறது.

"கலிலியோ இன்று கொண்டாடப்படுவதன் காரணங்களில் ஒன்று, அவர் அரிஸ்டாட்டிலின் கூற்று ஒன்று தவறு என்று நிரூபித்ததால்தான். இரு பொருட்களை உயரத்திலிருந்து கீழே போட்டால், பருமனான பொருள் முதலில் தரையில் விழும் என்று அரிஸ்டாட்டில் சொல்லியிருந்தார். இதைச் சரி என்று – அரிஸ்டாட்டில் போன்ற மாமேதை சொன்னதால் – இரண்டாயிரம் ஆண்டுகள் நம்பிக் கொண்டிருந்தார்கள். கலிலியோ, அரிஸ்டாட்டில் சொன்னது தவறு என்று நிரூபித்தார்.

நம்மிடம் விமானம் பற்றிய தொழில்நுட்பம் இருந்திருக்கலாம்; ஆனால் அழிக்கப்பட்டுவிட்டது என்றும் சொல்லப்படுகிறது. யார் அழித்தார்கள் என்ற கேள்விக்குப் பதில் கிடைக்காது. இந்தியாவில் முதல் அந்நியப் படையெடுப்பு நிகழ்ந்தது அலெக்சாண்டர் காலத்தில். அவர் விமானத்தைப் பார்த்திருந்தால் நிச்சயம் பதிவு பெற்றிருக்கும். அவரும் அன்றைய இந்தியாவின் மேற்குப் பகுதியைத் தாண்டி வரவில்லை. இங்கிருந்த தாகக் கூறப்படும் விமானம் எங்கே போனது?

சரி, நமக்கு விமானம் செய்யும் திறமை இருந்தது என்றே வைத்துக் கொள்வோம். நம்முடைய எதிரி நம்மை வென்றவுடன் அந்தத் திறமையைத் தனதாக்கிக் கொள்ள முயலவானா அல்லது அழிக்கப் பார்ப்பானா?

மேலும், விமானம் என்பது நாம் நினைப்பதுபோல இந்தியக் கலாச்சாரத்தின் தனிச் சொத்து அல்ல. நம்மைப் போன்ற பல புராதனக் கலாச்சாரங்களில் அதைப் பற்றி பேசப்பட்டிருக்கிறது.

நம்மில் சிலர் சொல்வதுபோல உலகத்தின் மற்ற இடங்களிலும் விமானம் எங்கள் சொத்து என்று சொல்லிக் கொள்கிறவர்கள் இருக்கிறார்கள்"

– என்று கட்டுரை அழுத்தமாக மறுப்பு தெரிவித்துள்ளது. எகிப்து, சீனா, கிரேக்கம் மற்றும் கொலம்பியா நாட்டின் புராணக் கதைகளிலும் விமானம் ஓட்டியது பற்றிய கற்பனைகள் இடம் பெற்றிருப்பதை கட்டுரை ஆதாரத்துடன் எடுத்துக் காட்டியுள்ளது.

# ‘என்கவுன்டர்’ சதி: அமீத்ஷா விடுவிக்கப்பட்ட கதை

***குஜராத்தில் ‘என்கவுன்டர்’ கொலைகளுக்கு சதித் திட்டம் தீட்டிய அப்போதைய உள்துறை அமைச்சர் அமீத்ஷாவை சிறப்பு நீதிமன்றம் வழக்கிலிருந்து விடுவித்திருக்கிறது. இது எப்படி நடந்தது? தமிழ் ஊடகங்களோ தொலை காட்சிகளோ இருட்டித்த உண்மைகள் இங்கே வெளிச்சத்துக்குக் கொண்டு வரப்படு கின்றன.***

அமீத்ஷா, குஜராத்தில் உள்துறை அமைச்சராக இருந்தபோது மோடியை கொல்ல முஸ்லிம் தீவிரவாதிகள் சதி செய்ததாக பல ‘என்கவுன்டர்’ கொலைகள் திட்டமிட்டு அரங்கேற்றப்பட்டன. மும்பையைச் சார்ந்த இர்ஷத் ஜஹான் என்ற கல்லூரி மாணவி உள்பட நான்கு பேர் பம்பாயிலிருந்து அகமதாபாத்துக்கு கடத்திச் செல்லப்பட்டு கொல்லப் பட்டனர். காவல்துறையினரே திட்டமிட்டுக் கொலை செய்தார்கள் என்று குஜராத் நீதிமன்றங்களே உறுதி செய்தன. இந்த என்கவுன்டரில் தொடர்புடைய 32 காவல்துறை அதிகாரிகள் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.


2002ஆம் ஆண்டு குஜராத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிரான இனப்படுகொலையை மோடி ஆட்சி கட்டவிழ்த்துவிட்டது. 2000த்துக்கும் மேற்பட்ட இஸ்லாமியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள். மதத்தின் பெயரால் வெறியூட்டப்பட்டவர்கள் ஆயுதங்களுடன் வெளிப்படையாக இந்த கலவரத்தை நடத்தியபோது, காவல்துறை அதைத் தடுக்க வேண்டாம் என்று மோடியே உத்தரவிட்டார். இந்த உண்மையை மோடி அமைச்சரவையில் இடம் பெற்றிருந்த ஹரேன் பாண்டியா என்பவரே, விசாரணைக் குழுவில் அம்பலப்படுத்தினார். அதன் காரணமாக அடுத்த சில மாதங்களில், அந்த அமைச்சர் கொலை செய்யப்பட்டார். ஹரேன் பாண்டியாவின் தந்தை, ‘தனது மகன் சாவுக்கு காரணம், மோடி தான்’ என்று வெளிப்படையாக குற்றம் சாட்டினார். ஆனால், ‘ஹரேன் பாண்டியாவின் கொலை, பாகிஸ்தான் சதி’ என்றார் மோடி. 17 அப்பாவி முஸ்லிம்கள் இந்த சதித் திட்டம் தீட்டியதாக கைது செய்யப்பட்டார்கள். ஆனால், ‘இவர்கள் அனைவருமே அப்பாவிகள்; கொலைக்கு தொடர்பில்லை’ என்று நீதிமன்றமே விடுதலை செய்துவிட்டது. உண்மையில் ஹரேன் பாண்டியா கொலைக்கு ஷொராபுதின் என்ற ரவுடி. கூலிப் படையாகப் பயன்படுத்தப்பட்டார். குற்றத்தை மறைக்க அவரும் கொலை செய்யப்பட்டார். இதில் ஈடுபட்ட குற்றவாளிகளை மறைக்க அவரது மனைவி கவுசர்பீ எரித்துக் கொல்லப்பட்டார்.

இந்த சதியின் பின்னணி முழுமையும் தெரிந்தவர் துளசி பிரஜாபதி என்ற தொழில்முறை வன்முறை யாளர். வேறு குற்ற வழக்குகளில் உதய்ப்பூர் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவர், தனது உயிருக்கு ஆபத்து இருப்பதை உணர்ந்து சிறையிலிருந்தபடியே மனித உரிமை அமைப்புகளுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு பாதுகாப்பு கேட்டு கடிதங்களை எழுதிக் கொண்டே இருந்தார். கடைசியில் அவரது கதையும் முடிக்கப்பட்டது. நீதிமன்ற விசாரணைக்காக அகமதாபாத்துக்கு கொண்டு வரப்பட்டு, மீண்டும் உதய்ப்பூர்திரும்பும்போது போலீசாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். கொலை செய்யப்பட்ட இடம் குஜராத்தின் எல்லையோர மாவட்டமான பனாஸ் கந்தா. ஏற்கெனவே என்கவுன்டர் கொலைகள் நடத்திய வன்சாரா என்ற காவல்துறை டி.அய்.ஜி.யை உள்துறை அமைச்சர் அமீத்ஷா, இந்த எல்லைப்புற மாவட்டத்துக்கு அதிகாரியாக இடமாற்றம் செய்து உத்தரவிட்டார். அவர் பொறுப்பேற்ற அடுத்த சில நாட்களிலே அதே பகுதியில் விசாரணைக் கைதி துளசி பிரஜாபதி ‘என்கவுன்டர்’ நடக்கிறது. அமைச்சர் ஹரேன் பாண்டியாவின் கொலைச் சதி முழு விவரமும் தெரிந்தவர் பிரஜாபதி என்பதை நினைவில் கொள்ள வேண்டும். சிறையில் அடைக்கப் பட்டுள்ள அதிகாரி வன்சாரா, சிறையிலிருந்து முதல்வர் மோடிக்கு கடிதம் எழுதினார். “உங்கள் அரசாங்கத்தின் உத்தரவை ஏற்றுத் தானே நாங்கள் ‘என்கவுன்டர்’ நடத்தினோம். தண்டனை எங்களுக்கு மட்டும்தானா? அரசாங்கத்துக்கு இல்லையா?” என்று அந்த கடிதத்தில் கேட்டார்.

இத்தனை என்கவுன்டர் கொலைகள் நடந்த போதும், குஜராத்தின் உள்துறை அமைச்சர் அமீத்ஷா, குற்றச்சாட்டுக்கு உள்ளாகி பிணையில் வெளி வந்தவர்; அவர் குஜராத் மாநிலத்துக்கு திரும்பக் கூடாது என்று நீதிமன்றம் நிபந்தனை விதித்தது. அதன் காரணமாகவே உ.பி.யின் தேர்தல் பொறுப்பை கவனிக்க மோடி அமீத்ஷாவை பணித்தார். பிறகு, பா.ஜ.க.வின் தலைவராகவும் உயர்த்தப்பட்டார். இப்போது, ‘என்கவுன்டர்’ கொலை வழக்கிலிருந்தே சிறப்பு நீதிமன்றம் அமீத்ஷாவை விடுவித்தும் விட்டது. சிறப்பு நீதிமன்றம் அமீத்ஷாவை விடுவித்தது சரியான நடவடிக்கையா? சட்டத்தின் கூறுகள், அமீத்ஷாவின் பின்னணி, அவருக்கு எதிராக பதிவு செய்யப்பட்ட சாட்சியங்கள் கருத்தில் கொள்ளப் பட்டதா?

இந்த ‘என்கவுன்டர் கொலை’ வழக்கு சதியை மாநில அரசு விசாரிக்கக் கூடாது என்று சி.பி.அய். விசாரணைக்கு உத்தரவிட்டதே உச்சநீதிமன்றம் தான்.

அமித்ஷாவை வழக்கிலிருந்து சி.பி.அய். சிறப்பு நீதிமன்ற நீதிபதி இப்போது விடுவித்து விட்டார். “சில அரசியல் காரணங்களுக்காகவே சி.பி.அய். 16ஆவது குற்றவாளியை (அமீத்ஷா) இந்த வழக்கில் சேர்த்திருக்கிறது” என்று கூறியிருக்கிறார். நீதிபதி இந்த என்கவுன்டர்’ கொலைக்கு மூளையாக செயல்பட்டதே அமித்ஷாதான் என்பது சி.பி.அய். யின் குற்றச்சாட்டு.



முதலில், இந்திய தண்டனை சட்டம் 227ஆவது பிரிவின் கீழ் குற்றம்சாட்டப்பட்டவர்கள் உண்மை யான குற்றவாளிகளா, இல்லையா, குற்றம் செய்திருக் கிறார் என்பதற்கு போதுமான முகாந்திரங்கள் இருக்கிறதா என்பதை எல்லாம் நீதிபதிகள் வழக்கு விசாரணையின் போக்கில்தான் ஒரு கருத்தை உருவாக்கிக் கொள்ள முடியும். அதனடிப்படையில் இறுதிகட்ட விசாரணைகளின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவார்கள். ஆனால், குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப்பட்ட நிலையிலேயே வழக்கிலிருந்து ஷா விடுவிக்கப்பட்டிருக்கிறார். வழமையாக இந்த நிலையில் குற்றம்சாட்டப் பட்டவர்களை நீதிமன்றம் வழக்குகளிலிருந்து விடுவிப்பது இல்லை.

இந்த சதியில் அமித்ஷாவுக்கு தொடர்பு உண்டு என்று குற்றவியல் நடைமுறை சட்டம் 161 மற்றும் 164ஆவது பிரிவுகள் கீழ் சாட்சிகள் அளித்த வாக்குமூலங் களையும் நீதிமன்றம் ‘நம்பத் தகுந்தவையல்ல’ என்று, தள்ளுபடி செய்துவிட்டது. இந்த என்கவுன்டர் கொலையை செய்த காவல்துறை அதிகாரிக்கும் அமீத்ஷாவுக்கும் இடையே நடந்த தொலைபேசி உரையாடல்களின் பதிவுகளை சி.பி.அய். நீதிமன்றத் தில் சமர்ப்பித்தது. அமித்ஷா பேசியிருப்பது - என்கவுன்டர் கொலைகளை செய்த அகமதாபாத் மாவட்டத்தைச் சார்ந்த மாவட்ட மட்டத்திலான காவல்துறையினருடன் (டி.ஜிவன் சாரா, எஸ். ராஜ் குமார் பாண்டியன், என்.கே.அமீர் போன்ற மாவட்ட அதிகாரிகள்). உரையாடல் நடந்ததோ ‘என்கவுன்டர் படுகொலைகள்’ நடந்த பகுதியைச் சார்ந்த அதிகாரிகளிடம். உள்துறை அமைச்சராக உள்ள ஒருவர், மாநில மட்டத்திலான அதிகாரி களுடன் தான் பேசுவார்களே தவிர, மாவட்ட காவல்துறையினரிடம் தொடர்பு கொண்டு பேசுவது வழமையல்ல; மரபும் அல்ல என்று சி.பி.அய். குற்றப் பத்திரிகையில் குறிப்பிட்டிருந்தது.

சி.பி.அய்.யின் இந்த குற்றச்சாட்டுக்கு அமித்ஷா, வழக்கறிஞர், குஜராத் உயர்நீதின்றத்தில் 2010இல் பதிலளித்தார். அமீத்ஷாவுக்கு பிணை கேட்டு தாக்கல் செய்யப்பட்ட மனு அது. அதில், அப்போது இளைஞன் ஒருவன் கடத்தப்பட்ட சம்பவம் குறித்து, மாவட்ட காவல்துறை அதிகாரியிடம் மக்கள் பிரதிநிதி என்ற முறையில் அமீத்ஷா பேசினார் என்று விளக்கமளிக்கப்பட்டது.

ஆனால், சிறப்பு நீதிமன்றத்தில், வழக்கிலிருந்து ஷாவை விடுவித்தபோது, இளைஞன் கடத்தப்பட்ட தாக, ஏற்கெனவே கூறிய கதையை முழுமையாக மறந்து விட்டார்கள். இப்போது வேறு ஒரு புதிய கதை ஷா தரப்பில் முன் வைக்கப்பட்டது. சட்டம் ஒழுங்கு பிரச்சினை, கலவரங்கள் வரும் போதெல்லாம் அமீத்ஷா நேரடியாகவே கீழ் மட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு பேசுவார். அது, அவரது நிர்வாக தனித்துவம் என்று நீதிமன்றத்தில் கூறப்பட்டது. இந்த வாதத்தை நீதிமன்றமும் ஏற்றுக் கொண்டது. ஷாவை விடுவிக்கும் உத்தரவில் கீழ்க்கண்டவாறு குறிப்பிட் டுள்ளது.

***“உலகம் முழுதும் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்து வருவதை இந்த நீதிமன்றம் கவனத்தில் கொண்டு, அத்தகைய சூழலில், ஒரு குறிப்பிட்ட மாநிலத்தில் உள்துறை அமைச்சர் – கள நிலையில் செயல்படும் மாவட்ட காவல்துறை அதிகாரிகளுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பேசுவதில் அதிசயமோ, வழமைக்கு மாறானதோ இல்லை”*** என்று நீதிபதி கூறியுள்ளார்.

ஷொராபுதின், என்கவுன்டரில் கொலை நடந்த பண்ணைத் தோட்டத்திலிருந்த காவல்துறை அதிகாரி களுடன் அமீத்ஷா பேசியிருப்பது - உரையாடல் பதிவுகளைக் கொண்டு கண்டறியப்பட்டது. ஷாவுக்கு சதியில் பங்கு உண்டு என்பதற்கான இந்த உறுதியான ஆதாரங்களை நீதிமன்றம் ஏற்கவில்லை. இந்த உரையாடல்களுக்கு முக்கியத்துவம் ஏதுமில்லை என்று நீதிமன்றம் கூறி விட்டது. ஆனால், குஜராத் மாநில புலனாய்வுத் துறைக்கு, இதன் முக்கியத்துவம் தெரியும். இந்த உரையாடல்களை மாநில புலனாய்வுத் துறை விசாரணையின்போது, அவர்களால் சேகரிக் கப்பட்டதாகும். பிறகு உச்சநீதிமன்றம் தலையிட்டு, சி.பி.அய். விசாரணைக்கு உத்தரவிட்டபோது, இந்த உரையாடல் பதிவுகளை (331 உரையாடல்கள்) உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் மாநில உளவுப் பிரிவு மறைத்துவிட்டது.

மாநில அளவில் விசாரணைகளை நடத்தி, குற்றம் செய்த அதிகாரிகளை கைது செய்தவர் ரஜனீஸ்ராய் என்ற காவல்துறை தலைமை அதிகாரி, உள்துறை அமைச்சராக இருந்த ஷா, அந்த அதிகாரியை தலைமைப் பொறுப்பிலிருந்து அகற்றி, அந்த இடத்தில் ஓ.பி.மாத்தூர் என்ற அதிகாரியை நியமித்தார். இந்த ஓ.பி.மாத்தூர்தான் சிறப்பு நீதிமன்றத்துக்கு விசாரணை மாற்றப்பட்டபோது, ‘தொலைபேசி’ உரையாடல் களை சமர்ப்பிக்காமல் மறைத்தவர்.

‘என்கவுன்டர்’ கொலைகளில் அமித்ஷாவுக் குள்ள நேரடி தொடர்பை தொடக்கத்தில் விசாரணை நடத்திய கீதா ஜோஹ்ரி என்ற பெண் போலீஸ் அய்.ஜி. சமர்ப்பித்த 24 பக்க அறிக்கை விளக்குகிறது. ஆரம்பத்தில் தலையீடு ஏதுமின்றிதான் விசாரணை நடந்தது. ஒரு கட்டத்தில் ‘என்கவுன்டர்’ கொலைக்கு உள்ளான ஷொராபுதீன், அவரது மனைவி கவுசர்பி இருவரும் அகமதாபாத்தில் சிறிகிரீஸ் பட்டேலுக்கு சொந்தமான பண்ணை வீட்டில் அடைத்துத் தான் வைக்கப்பட்டு கொல்லப்பட்டார்கள் என்று சாட்சிகள் கூறியதற்குப் பிறகுதான் தலையீடுகள் தொடங்கின. கொலையை நடத்திய குற்றவாளியான காவல்துறை அதிகாரிகள் வன்சாரா மற்றும் ராஜ்குமார் பாண்டியன், இந்த செய்தியை அவசரமாக உள்துறை அமைச்சர் அமீத்ஷாவின் கவனத்துக்குக் கொண்டு சென்றனர். உடனே அமைச்சர் ஷா விசாரணைகளில் தலையிடத் தொடங்கினார். இது தொடர்பான ஆவணங்களை விசாரணை நடத்திய அதிகாரி கீதா ஜோஹ்ரியிடமிருந்து பறிக்கப்பட்டன. ஆவணங்களை ஆய்வுக்கு உட்படுத்தப் போவதாக

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 05.02.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# தமிழ் ஊடகங்கள் இருட்டடித்த உண்மைகள்

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்குக் காரணம் கூறப்பட்டது. சாட்சி அளித்தவர்கள், சாட்சியளிக்கப் போகிறவர்களின் முழுமையான பட்டியல், தன்னிடம் வரவேண்டும் என்று அமைச்சர் அமீத்ஷா, ஜி.சி. ராய்கார் என்ற காவல்துறை அதிகாரிக்கு (இவர் காவல்துறைக்கான கூடுதல் இயக்குனர்) உத்தரவிட்டார். அமைச்சர் ஷாவின் இந்தத் தலையீடு சட்ட விரோதமானது; அவரது அதிகார வரம்புகளை முறைகேடாகப் பயன்படுத்தியதாகும். குற்றம்சாட்டப்பட்ட காவல்துறை அதிகாரிகளிடம் இந்த விவரங்களைக் கொடுத்து, அவர்களைக் காப்பாற்றச் செய்வதே இதன் நோக்கம் என்று விசாரணை அதிகாரி கீதாஜோஹ்ரி, தனது அறிக்கையில் விரிவாக பதிவு செய்துள்ளார்.

2006 ஜனவரி 30ஆம் தேதி உயர் காவல்துறை அதிகாரிகள் கூட்டத்தை அமீத்ஷா, காந்தி நகர் சர்க்யூட் இல்லத்தில் கூட்டி, 'என்கவுன்டர் கொலை'யை மறைப்பது குறித்து ஆலோசனை நடத்தினார். அமீத்ஷா கூட்டிய மற்றொரு அதிகாரிகள் கூட்டம் மிகவும் விவாதத்துக்குரியது. இந்தக் கூட்டம் குறித்து அதில் பங்கேற்ற காவல்துறை அதிகாரிகள் குற்றவியல் நடைமுறை சட்டப் பிரிவு 164 கீழ் அளித்த வாக்குமூலங்கள் அமீத்ஷாவை நேரடியாக குற்றம்சாட்டுகின்றன. அந்தக் கூட்டத்தில் கூடுதல் காவல்துறை இயக்குநர் கி. ரெய்கார் மற்றும் உயர்அதிகாரிகள் பி.சி.பாண்டே, கீதா ஜோஹ்ரி உள்ளிட்ட பல அதிகாரிகள் பங்கேற்றனர். அந்தக் கூட்டத்தில், 'என்கவுன்டர்' கொலையில் குற்றம்சாட்டப்பட்டுள்ள போலீஸ் அதிகாரிகளுக்கு ஆதரவாகவும் விசாரணைக்கு எதிராகவும் அமீத்ஷா பேசினார். இந்த நிலையில் ஷாவிடமிருந்துவரும் சட்ட விரோத 'அறிவுறுத்தல்களை' ஏற்று செயல்பட முடியாது என்றும், எனவே தனக்கு பணிமாற்றம் செய்யுமாறும் காவல்துறை இயக்குனர் கி.ரெய்கார் கேட்டார். புலன் விசாரணை அறிக்கையை மாற்றி தயாரிக்குமாறு அமீத்ஷா, அதிகாரிகள் கூட்டத்தில் வலியுறுத்தினார். கூட்டத்தில் பங்கேற்ற அதிகாரிகளே வாக்குமூலங்களாக இந்த உண்மைகளை பதிவு செய்துள்ளனர். இவ்வளவுக்குப் பிறகு இத்தனை பதிவுகளையும் சிறப்பு நீதிமன்ற நீதிபதி ஏற்க மறுத்து ஷாவை விடுவித்திருக்கிறது.

சி.பி.அய். விசாரணைக்கு உத்தரவிட்ட உச்சநீதிமன்றம், தனது உத்தரவில் விசாரணையின் ஒவ்வொரு நகர்வையும் சிறப்பு நீதிமன்றம் உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும் என்று அறிவுறுத்தியிருந்தது. 2010ஆம் ஆண்டு குஜராத் உயர்நீதிமன்றம், அமீத்ஷாவுக்கு பிணை வழங்கியது. சி.பி.அய். உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்தது. உச்சநீதிமன்றம், பிணையை இரத்து செய்யாவிட்டாலும் அதை எதிர்த்து கீழ்க்கண்ட கருத்தை பதிவு செய்தது:

"இப்போது விசாரணைக்கு வந்திருக்கும் மனு, அமித்ஷாவுக்கு பிணைகோரும் மனுவாக இருந்திருக்குமானால், இந்த நீதிமன்றம் எத்தகைய கருத்தைக் கூறியிருக்கும் என்பதை சொல்ல முடியாது. ஆனாலும், இது பிணை தரப்பட்ட பிறகு வந்த மேல் முறையீடு. இந்த வழக்கில் (குஜராத்) உயர்நீதிமன்றம் அமீத்ஷாவுக்கு வழங்கியுள்ள (பிணை) உரிமையை பறிப்பதற்கு இந்த நீதிமன்றம் தயங்குகிறது. அதே நேரத்தில், இந்த வழக்கு விசாரணையில் நேர்மை குலையாமல் காப்பாற்ற, விசாரணையை (குஜராத்திலிருந்து) வேறு மாநிலத்துக்கு மாற்றப்பட வேண்டும் என்பதில் இந்த நீதிமன்றம் உறுதியாக இருக்கிறது" (உச்சநீதிமன்ற உத்தரவு, செப்.27, 2012).

சிறப்பு நீதிமன்றம், அமீத்ஷாவை விடுவித்த உத்தரவிலும் அமீத்ஷா மீது சி.பி.அய். தொடர்ந்து உள்நோக்கம் கற்பிக்கக் கூடாது என்று கூறியிருக்கிறது. அது மட்டுமன்றி, "என்கவுன்டர் கொலை செய்யப்பட்ட ஷொராபுதீன், ஏற்கெனவே பல வழக்குகளில் தொடர்புடைய தலைமறைவான குற்றவாளி. இதில் எந்த சந்தேகமும் இல்லை. அதன் காரணமாகத்தான் குஜராத் மற்றும் இராஜஸ்தான் காவல்துறை, ஷொராபுதினைப் பிடித்துக் கொண்டு வந்தது" என்றும் சிறப்பு நீதிமன்றம் பதிவு செய்கிறது. இந்த என்கவுன்டர் கொலை தவறில்லை என்பதுபோல் சிறப்பு நீதிமன்றம் நியாயப்படுத்துகிறது.

வழக்கில், முக்கிய சாட்சிகள் அளித்த வாக்குமூலங்களை சிறப்பு நீதிமன்றம் கவனத்தில் எடுத்துக் கொள்ளவில்லை. குஜராத்தில் 'ரியல் எஸ்டேட்' தொழில் நடத்தும் பிரபலமான பட்டேல் சகோதரர்கள் (தசரதன் மற்றும் ராமன்) சி.பி.அய்க்கு குற்றவியல் நடைமுறை சட்டம் 164ஆவது பிரிவின் கீழ் அளித்த வாக்குமூலத்தில் தங்களிடம் எப்படி கட்டாயப்படுத்தி பணம் வாங்கினார்கள் என்பதையும் ஷொரா புதினுக்கு எதிராக அறிக்கை வெளியிடுமாறு கட்டாயப்படுத்தினர்கள் என்பதையும் சி.பி.அய். முன், பதிவு செய்திருக்கிறார்கள். இது தொடர்பாக இந்த சகோதரர்கள் அமித்ஷாவை சந்தித்ததையும் தொலைபேசியில் உரையாடியதையும் சி.பி.அய். பதிவு செய்திருக்கிறது. இவை எல்லாமுமே அமித்ஷாவை விடுவித்த சிறப்பு நீதிமன்றத்தின் பார்வையில் நம்பத் தகுந்த சாட்சியங்களாக இல்லாமல் போய்விட்டன.

குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்த இதே சி.பி.அய்., இப்போது அவரை விடுவிக்கக் கோரும் மனு மீது கண்டிப்பு எதுவும் காட்டவில்லை. ஷாவை விடுவித்த நீதிபதி வெளியிட்ட 75 பக்க ஆணையில் சி.பி.அய். வாதங்களுக்காக இரண்டு பக்கங்களை மட்டுமே ஒதுக்கியது. வழக்கு விசாரணையின்போது நேரில் வருவதற்கு ஷா, விதிவிலக்குக் கேட்டு தாக்கல் செய்த மனுவுக்கும், சி.பி.அய். தரப்பு கடும் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை. என்கவுன்டர் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள காவல்துறை அதிகாரி என்.கே.அமீன், பம்பாய் உயர்நீதிமன்றத்தில் பிணை மனு தாக்கல் செய்தபோது, பிணை வழங்கக்கூடாது என்று கடுமையாக எதிர்த்த சி.பி.அய்., இப்போது தனது நிலையை மாற்றிக் கொண்டுவிட்டது. 2004 நவம்பரில் பிணை மனு உச்சநீதிமன்ற விசாரணைக்கு வந்தபோது, சி.பி.அய். எதிர்ப்பு தெரிவிக்கவில்லை என்று கூறிவிட்டது. ஷாவை விடுவிக்கக் கோரி அவரது வழக்கறிஞர் 3 நாள் தொடர்ச்சியாக, பல மணி நேரம் வாதாடினார். சி.பி.அய். தரப்பில் வாதாடிய 'ஜூனியர்' வழக்கறிஞர், 20 நிமிடங்கள் மட்டும் தனது எதிர்ப்பை பெயரளவுக்கு தெரிவித்தார். உபியில் பா.ஜ.க.வுக்காக அமீத்ஷா நடத்திய தேர்தல் வேலைகள் வெற்றி பெறத் தொடங்கியவுடன், சி.பி.அய். அணுகுமுறை தலைகீழாக மாறிவிட்டது.

அபேய் சுடாசமா என்ற காவல்துறை அதிகாரி, ஷொராபுதின் கும்பலைப் பயன்படுத்தி, சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தார். பா.ஜ.க. வெற்றிக்குப் பிறகு அவர் மீதான நடவடிக்கை விலக்கப்பட்டு, குஜராத்தில் காந்தி நகர் பகுதியில் ஊழல் கண்காணிப்பு அதிகாரியாக மீண்டும் பணியமர்த்தப்பட்டிருக்கிறார். 'என்கவுன்டர் கொலைகளுக்கான' அமீத்ஷா சதித் திட்டத்தில் பங்கு பெற்ற குற்றச்சாட்டுகளும், உச்சநீதிமன்றம் தலையிட்டு, சி.பி.அய். விசாரணைக்கு உத்தரவிட்டதும், ஷா சதித்திட்டம் தீட்டியதாக சி.பி.அய். முன் வைத்த ஏராளமான சாட்சியங்களும் சிறப்பு நீதிமன்றத்தின் ஒரே உத்தரவால் புதைகுழிக்கு அனுப்பப்பட்டுவிட்டது.

அமீத்ஷா குற்றத்திலிருந்து விடுவிக்கப் பட்டது, நீதித் துறை சுதந்திரமாக செயல் படுகிறதா என்ற கேள்வியை அழுத்தமாக எழுப்பி நிற்கிறது.

– 'எக்னாமிக் அன்ட் பொலிட்டிக்கல் வீக்லி' ஜனவரி 24, 2015 இதழிலிருந்து

## வினாக்கள்... விடைகள்...!

✦ ஸ்ரீரங்கம் அ.இ.அ.தி.மு.க. வேட்பாளருக்கு நிதி மோசடி வழக்கில் முன் ஜாமீன் கிடைத்தது. – **செய்தி**

*முன் ஜாமீன் முதல் வெற்றிதான்! அடுத்து தேர்தலிலும் 'ஜாமீன்' வாங்கிக் காட்டுவோம்! இது உறுதி!*

✦ கோயில் வளாகங்களுக்குள் 'கோட்சே'வுக்கு சிலை அமைப்போம். – **இந்து மகாசபை அறிவிப்பு**

*அதோடு, 'இராமன்' சிலையும் சேர்த்துக்குங்க அவனும் 'சம்பூகனை'க் கொலை செய்திருக்கிறான்.*

✦ ஒபாமா வரவேற்பு நிகழ்ச்சியில் மோடி அணிந்திருந்த உடையின் மதிப்பு ரூ.10 இலட்சம். – **செய்தி**

*தப்பா நினைச்சுக்காதீங்க... அப்பத்தான் அமெரிக்காகாரன் இந்தியாவை நம்பி கடன் கொடுப்பான்!*

✦ வேத மந்திரம் ஓதி, 11 கிறிஸ்தவர்களை தமிழ்நாட்டில் 'இந்து' மதத்துக்கு மாற்றியுள்ளோம். – **இந்து முன்னணி**

*பரவாயில்லையே! மதமாற்றத்துக்கெல்லாம் 'மந்திரங்கள்' இருக்கா! அப்போ ஜாதி மாறுவதற்கு ஏதேனும் மந்திரம் வச்சிருக்கேளா?*

✦ தமிழ் நாட்டில் 5720 அரசு பள்ளிகளில் கழிப்பறை வசதி கிடையாது. – **மத்திய அரசு தகவல்**

*எங்க நாட்டுல பள்ளிகளை கோயில்களாக மதிக்கிறோம். எனவே இரண்டுக்கும் கழிப்பறை கட்ட மாட்டோம்; புரியாம பேசாதீங்க...*

✦ 12 கோயில்களில் 'ஆன் லைனில்' பக்தர்கள் காணிக்கை பணத்தை செலுத்தலாம். – **அறநிலையத் துறை அறிவிப்பு**

*அப்படியே 'பணம் வந்து சேர்ந்தது' என்று 'பகவான்களிடமிருந்து' பதில் கிடைக்கவும் ஏற்பாடு செஞ்சுட்டா, பக்தர்களுக்கு திருப்தியாயிருக்கும்!*


## தலைமைக் கழக கட்டமைப்புக்கு இதுவரை நன்கொடை வழங்கியோர்

| | |
|---|---|
| ஈரோடு இரத்தினசாமி | ரூ.10,000 |
| திருப்பூர் துரைசாமி | ரூ.10,000 |
| ஈரோடு இராம. இளங்கோவன் | ரூ.10,000 |
| மயிலாடுதுறை இளையராஜா | ரூ.10,000 |
| சென்னை குணசேகரன் | ரூ.10,000 |
| சென்னை குகானந்தன் | ரூ.10,000 |
| கொளத்தூர் சூரியகுமார் | ரூ. 8,000 |
| மொத்தம் | ரூ.68,000 |

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
**ரூ.200**
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 5th February 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | பிப்ரவரி 12, 2015 | புரட்சி 14 | முழக்கம் 5 | விலை: ரூ.3.00


## ‘ஜாதி’ மறுப்பு மணம்: வழக்கறிஞர்களுக்கு பாராட்டு

வழக்கறிஞர்கள், தங்கள் வழக்கறிஞர் அலுவலகங்களை திருமணம் செய்வதற்குப் பயன்படுத்தக் கூடாது என்றும், திருமணம் என்றாலே அது ‘கொண்டாட்டமாக’ நடப்பதுதான் என்றும் சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.இராஜேசுவரன், பி.என். பிரகாஷ் அமர்வு 17.10.2014 அன்று தீர்ப்பு வழங்கியது. பெரியாரின் சுயமரியாதை திருமணம்கூட இரகசியமாக நடத்துவது அல்ல என்றும் ‘கொண்டாட்டமாக’ பலரையும் கூட்டி வைத்து நடத்துவதுதான் என்றும் நீதிபதிகள் தீர்ப்பில் குறிப்பிட்டிருந்தனர்.

எளிமை, சிக்கனத்தை வலியுறுத்தி பெரியார் அறிமுகப் படுத்திய சுயமரியாதைத் திருமண முறைக்கும் நீதிமன்றம் தவறான விளக்கங்களை அளித்தது. உயர்நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பை மறுத்து 26.10.2014 அன்று திருச்சியில் கூடிய திராவிடர் விடுதலைக்கழக செயலவையில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது. “கொண்டாட்டமாகவும் விழாவாக வும் நடத்தப்படுவதுதான் திருமணம்” என்று உயர்நீதிமன்றம் வரை யரைப்பது ஒரு பண்பாட்டுத் திணிப்பு என்று தீர்மானம் சுட்டிக் காட்டியது. அதிக எண்ணிக்கையில் திருமணங்களை நடத்தி வைத்து, குற்றவாளிகளைப் போல அதைப் பதிவு செய்த வழக்கறிஞர்களையும் நீதிமன்றத் தீர்ப்பு கடுமையாக குறை கூறியது.

இந்த நிலையில் ஜாதி மறுப்பு திருமணம் செய்ய விரும்பும் காதலர்களுக்கு திருமணத்தை நடத்தி வைத்து அதைப் பதிவு செய்வதற்கு உதவிடும் வழக்கறிஞர்களுக்கு பாராட்டு விழா 7.2.2015 சனி மாலை 4 மணியளவில் சென்னை ஒய்.எம்.சி.ஏ. அரங்கில் நடைபெற்றது. ஜாதி, மதமற்றோர் கூட்டியக்கம், அம்பேத்கர் பெரியார் கலப்பு திருமணம் செய்தோர் நலச் சங்கம் ஆகிய அமைப்புகள் இணைந்து இந்த விழாவுக்கு ஏற்பாடு செய்திருந்தன.

ஜாதி மறுப்பு மணம் புரிந்த தோழர்கள் வேணி, மஞ்சுளா, ஓவியா, சோலை மாரியப்பன், பொழிலன், தியாகு, விடுதலை இராசேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக பங்கேற்று உரையாற்றினர். வழக்கறிஞர் குணசேகரன் ஒருங் கிணைத்தார்.

திருப்பூர் குணா எழுதிய ‘காதல்’ என்ற ஜாதி வெறியர்களின் வன்முறைகளை விவரிக்கும் நூலும் ஜாதி ஒழிப்புக்கான நாட்காட்டியும் வழக்கறிஞர்களுக்கும் பார்வையாளர்களுக்கும் விழாக் குழு சார்பில் வழங்கப்பட்டன.

## வாழ்த்துவோம்! வரவேற்போம்!

# பிப்.14 உலக காதலர் நாள்

பழந்தமிழர் பண்பாடு காதலைப் போற்றுகிறது; தமிழ் இலக்கியங்கள் காதலைப் பேசுகின்றன; இப்போது காதலுக்கு ஏன் தடை கற்கள்?

**பழந்தமிழகத்தில்** –

- தெருவில் உப்பு விற்றப் பெண்ணும்
- மீன் விற்ற பெண்ணும்
- பரணில் கிளி விரட்டிய பெண்ணும்
- தந்தைக்கு சோறெடுத்துச் சென்ற பெண்ணும் –

ஆண்களைச் சந்தித்து விரும்பியவர்களைத்தேர்ந்தெடுத்தார்கள்.

**– இதுவே நம் இலக்கியங்கள் கூறும் பண்பாடு!**



### காதலைப் பற்றி பெரியார் கூறுகிறார்:

உணர்ச்சிகளால் உந்தப்படும் காதலை மறுக்கும் பெரியார், அறிவார்ந்த புரிதலோடுக் கூடிய காதலை வரவேற்கிறார். காதல் பற்றி பெரியார் கருத்து.

“உண்மையில் காதல் மணம் என்றால் பெண்களும் ஆண்களும் சம நிலையில் பழகும் வாய்ப்புத் தந்து, ஒருவருடைய குணா குணங்களை மற்றவர் அறியும் சமயம் கிடைத்து ஒருவருடைய வாழ்க்கைக்கு ஒருவர் இன்றியமையாதவர் என்ற நிலையில் காதல் கொள்வதுதான் உயர்ந்த காதலாகும்!”

**– குடிஅரசு 21.7.45**

“ஒரு பெண்ணும் ஆணும் சேர்ந்து பழகி ஒருவரையொருவர் அறிந்து கொண்ட பிறகுதான் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். ஆண்களோடு சாதாரணமாகப் பெண்களைப் பழகச் சொல்ல வேண்டும். யோக்கியனா? கோபக்காரனா? பைத்தியக்காரனா? வேடக்காரனா? குடிகாரனா? என்று பெண்ணுக்கு முன்னரே தெரிய வேண்டாமா? பழகினால்தானே தெரியும். திடீரென்று ஒருவரையொருவர் முடிச்சு போடலாமா? அன்பு, குணம், பழக்க வழக்கம் இவைகள் உணர்ந்து ஒருவருக்கொருவர் நண்பர்களாகப் பழக வேண்டும். உடல் சேர்க்கை வேண்டும் என்று நான் கூறவில்லை. இதுதான் நான் சொல்லும் காதல்-ஆசை-இஷ்டம்.”

**– விடுதலை 24.5.47**

நேரம் சரியில்லை என்று
ஜாதகம் பார்க்க என் அம்மா
என்னை கூட்டி கொண்டு போனது
எதிரே உன்னை பார்த்தேன்
என் அம்மாவை கூட்டிக் கொண்டு
வீடு திரும்பினேன்
நேரம் நல்லாத் தான் இருக்கிறது என்று.

நீ வேற ஜாதி நான் வேற ஜாதி
நாம் இருவரும் சேர்ந்து வாழ முடியாது
ஊர் என்றும் சேரி என்றும் இரட்டை
வாழ்விடம் உள்ளது
அதனால் நாம் சேர்ந்து செத்துவிடலாமா
சேர்ந்து செத்து விட்டாலும்
இங்கே ஊருக்கென்றும் சேரிக்கென்றும்
இரட்டை சுடுகாடு உள்ளது
நம்மை தனித் தனியாக புதைத்து விடுவார்கள்
அதனால் நகரத்தில் குடியேறி இருவரும்
சேர்ந்து வாழலாம் சேர்ந்து போராடலாம்
வா, ஜாதியை ஒழிக்க.

**– வெ.ப. அம்பிகாபதி**

## சட்டக் கல்லூரி மாணவர் போராட்டம்: கழகம் ஆதரவு

116 ஆண்டுகள் புகழ் பெற்ற சென்னை சட்டக் கல்லூரியை சென்னைக்கு வெளியே கொண்டு செல்லும் தமிழக அரசின் நடவடிக்கையை எதிர்த்து சட்டக் கல்லூரி மாணவர்கள் தொடர்ந்து போராடி வருகிறார்கள்.பிப்.7 ஆம் தேதி இரவு 7 மணியளவில் உள்ளிருப்பு போராட்டம் நடத்தி வரும் மாணவர்களை சந்தித்து, திராவிடர் விடுதலைக் கழக சார்பில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆதரவு தெரிவித்து உரையாற்றினார்.

“ஈழத் தமிழர் மீது இனப்படுகொலை கட்டவிழ்த்து விடப்பட்டபோது இந்தப் பகுதியை போராட்டக்களமாக மாற்றிக்காட்டியவர்கள் நீங்கள். அவ்வப்போது எழும் சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து போராடுகிறீர்கள் என்ற ஒரே காரணத்துக்காக ஆட்சியாளர்கள் கல்லூரியையே சென்னையை விட்டு அப்புறப்படுத்த முடிவு செய்துவிட்டார்கள். இந்தக் கல்லூரி வளாகம், சென்னை ‘மெட்ரோ’ இரயில்பாதை அமைப்புக்கு தடை என்றால் அருகே இருக்கும் குறளகத்தை மாற்றுவார்களா?

ஒரு காலத்தில் சட்டம் படித்தவர்கள், வழக்கறிஞர்கள் எல்லாமுமே பார்ப்பனர்கள்தான் என்றிருந்த நிலை மாறி, இன்று தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த சமூக நீதி சக்திகள் சட்டம் படிக்க வந்து விட்டார்கள். நீதிமன்ற வளாகத்துக்குள் இந்த சட்டக் கல்லூரி இருப்பதால் நீதிமன்ற நடவடிக்கைளோடு நீங்கள் பெறக்கூடிய அனுபவங்களை இந்த இடமாற்றத்தின் வழியாக ஆட்சியாளர்கள் பறிக்கிறார்கள்.

பெருமை மிக்க இராணிமேரிக் கல்லூரியை இப்படித்தான் மாற்ற நினைத்தார்கள். அதிலே தோற்றுப் போன ஆட்சி, இந்தப் பிரச்சினையிலும் தோற்றுப் போகும். உங்களின் நேர்மையான போராட்டத்தை திராவிடர் விடுதலைக் கழகம் ஆதரிப்பதோடு, கண்மூடித்தனமாக உங்கள் மீது தடியடி நடத்திய காவல்துறையையும் வன்மையாக கண்டிக்கிறோம்” என்று பொதுச் செயலாளர் குறிப்பிட்டார். மாவட்ட செயலாளர் உமாபதி, வழக்கறிஞர் திருமூர்த்தி, முழக்கம் உமாபதி, செந்தில் உள்ளிட்ட தோழர்கள் உடன் வந்திருந்தனர்.

**தலையங்கம்**

## தமிழ்நாட்டில் நடப்பது ஆர்.எஸ்.எஸ். ஆட்சியா?

தமிழ்நாட்டில் 9 மற்றும் 10ஆம் வகுப்புகளுக்கான சமூக அறிவியல் பாடநூல்கள், எந்த அளவு மோசமாக தயாரிக்கப்பட்டுள்ளது என்பதை விளக்கி ‘இந்து’ தமிழ் நாளேட்டில் வெளிவந்த கட்டுரையைப் படித்த எவருமே அதிர்ச்சியும், தலைகுனிவும் அடைந்திருப்பார்கள். தமிழ்நாட்டில் நடப்பது அ.இ.அ.தி.மு.க. ஆட்சியா அல்லது ஆர்.எஸ்.எஸ். ஆட்சியா என்று சந்தேகப்பட வேண்டியிருக்கிறது.

1927ஆம் ஆண்டே தனது பெயருக்குப் பின்னால் இருந்த ஜாதிப் பட்டத்தைத் தூக்கி எறிந்துவிட்டு, ஜாதி எதிர்ப்பு இயக்கத்தை வாழ்நாள் முழுதும் நடத்தி வந்த பெரியாரை, ‘ஈ.வெ.ராமசாமி நாயக்கர்’ என்று இந்த பாட நூல்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால், ஜாதிப் பெயரை விட்டுவிடாமல் பிடித்துக் கொண்டிருந்த எஸ்.சத்தியமூர்த்தி அய்யர், வாஞ்சி அய்யர் போன்றவர்களின் பெயர்களை ஜாதிப் பெயரை நீக்கி குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஹிட்லர், முசோலினி ஆகியோரின் வெளிநாட்டுக் கொள்கைகள் முற்போக்கானவை என்றும், திராவிடர் இயக்க ஆதரவோடு ஒழித்துக் கட்டப்பட்ட தேவதாசி முறையை பெருமைப்படுத்தி, அவர்களை ‘ஆலய சேவகிகள்’, ‘இறைப்பணி, கலைப் பணிக்காக அர்ப்பணிக்கப்பட்டவர்கள்’ என்றும் புகழாரம் சூட்டுகிறது. ஜின்னாவை பிரிவினைவாதியாகவும், ஆர்.எஸ்.எஸ்., இந்து மகாசபை போன்ற பார்ப்பனிய அமைப்புகளைத் தொடங்கியவர் அனைவரும் தேசபக்தி மிக்க காங்கிரசார் என்றும், வரலாற்றைத் திரிக்கிறது. “கோ மாமிசம் தின்னக் கூடிய மிலேச்சனை” கொல்லப் போவதாகவும், சனாதன தர்மத்தைக் காப்பாற்றவே இதைச் செய்வதாகவும் கடிதம் எழுதி வைத்து, ஆஷ்துரையை சுட்டுக் கொன்றான் வாஞ்சிநாதன். இந்த வரலாற்றை மூடி மறைத்து, கலெக்டர் ஆஷ், 4 பேரை சுட்டுக் கொன்றதற்கு பழி வாங்கவே வாஞ்சி சுட்டதாக உண்மைக்கு மாறான தகவல்களை பிஞ்சு உள்ளங்களில் விதைக்கிறது. 1944 சேலம் மாநாட்டில் அண்ணா கொண்டு வந்த தீர்மானத்துக்கு முன்பே ‘குடிஅரசு’ இதழ்களில் ‘திராவிடர் கழகம்’ திராவிட நாடு குறித்து பெரியார் தலையங்கங்களில் பதிவு செய்துள்ள வரலாற்றுக்கு மாறாக ‘திராவிடர் கழகம்’ என்று பெயரை அண்ணா தான் சூட்டியதாக உண்மைக்கு மாறான வரலாறு எழுதப்பட்டுள்ளது. (இன்னும் ஏராளமான பிழைகளை கட்டுரை பட்டியலிட்டுள்ளது)

தமிழகக் காவல்துறையோ, ‘ஆர்.எஸ்.எஸ்.’ மனப்பாங்குடன் செயல்படுகிறது. கோட்சேவுக்கு சிலை வைக்கப் போவதாக ஒரு கூட்டம் வெளிப்படையாகப் பேசுகிறது. ‘காந்தியை கொலை செய்த கோட்சே’வுக்கு சிலை வைப்பதைக் கண்டித்து, பொதுக் கூட்டம் என்று விளம்பரம் செய்தால், ‘காந்தியை கொலை செய்த’ வாசகத்தை நீக்க வேண்டும் என்று ஈரோடு மாவட்ட காவல்துறை நிபந்தனை போடுகிறது. காந்தி கொலை செய்யப்பட்ட ஜனவரி 30ஆம் நாள் அன்று கோட்சேயை ஆதரிக்கும் விசுவ இந்து பரிஷத் திருச்சியில் பொன் விழா பொதுக் கூட்டத்தை நடத்த காவல்துறை அனுமதி வழங்குகிறது. கழகத் தோழர்கள் தோழமை அமைப்பினரோடு இதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் நடத்தி கைதானார்கள்.

திருச்செங்கோட்டில் ஜாதி வெறி சக்திகள் – எழுத்தாளர் பெருமாள் முருகனின் ‘மாதொரு பாகன்’ நாவலுக்கு எதிர்ப்பு தெரிவித்து கடையடைப்பு நடத்தி மிரட்டியபோது, அரசு அதிகாரிகள் நடத்திய சமாதானக் கூட்டத்தில் அதிகாரிகள் ஒரு சார்பாக ஜாதி வெறியர்கள் பக்கம் நின்று எழுத்தாளர் பெருமாள் முருகனை மிரட்டி, அடிபணிய வைத்தது தமிழகத்துக்கே தலைகுனிவாகும்.

இதே திருச்செங்கோட்டில் பெரும்பான்மை மக்களை இழிவுபடுததும் வேத சாஸ்திர புராணங்களை விளக்கிப் பேச திராவிடர் விடுதலைக் கழகம் ஏற்பாடு செய்த கூட்டத்துக்கு காவல்துறை அனுமதி மறுத்தது. இபபோது அதே திருச்செங்கோட்டில் பெருமாள் முருகனுக்கும் அவரது நாவலுக்கும் எதிராக ‘இந்து மக்கள் கட்சி’ பொதுக் கூட்டம் நடத்த காவல்துறை அனுமதித்திருக்கிறது. தன்னுடைய நாவலை திரும்பப் பெற்றுவிட்டதாகவும், இனி இலக்கியத்தின் பக்கமே திரும்பப் போவதில்லை என்றும் ‘பெருமாள் முருகன் இறந்து விட்டான்’ என்றும், எழுத்தாளர் பெருமாள் முருகன் அறிவித்துவிட்ட பிறகு, அவரைக் கண்டித்துப்பேச காவல்துறை, மதவெறி சக்திகளுக்கு தாராளமாக அனுமதிக்கிறது என்றால், இங்கே நடப்பது – யாருக்கான ஆட்சி? அர்த்தநாரீஸ்வரர் வளாகத்தில் இந்து மக்கள் கட்சியைச் சேர்ந்த அர்ஜின் சம்பத்தை காவல்துறை கைது செய்ய முற்பட்டபோது, மாவட்ட கண்காணிப்பாளர் செந்தில் குமார் தலையிட்டு கைதை தடுத்தார் என்று ‘டைம்ஸ் ஆப் இந்தியா’ நாளேடு (பிப்.9) செய்தி வெளியிட்டுள்ளது. இதுபோல் பல சம்பவங்களை சுட்டிக் காட்ட முடியும்.

இராஜிவ் வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 7 ஆயுள் தண்டனை கைதிகளையும் (தூக்குத் தண்டனை குறைக்கப்பட்ட மூவரையும் சேர்த்து) விடுதலை செய்வதாக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா அறிவிக்க, முந்தைய காங்கிரஸ் ஆட்சி, மாநில அரசுக்கு அதிகாரமில்லை என்று உச்சநீதிமன்றம் போய் தடைப்படுத்தியது. இப்போது, எந்த ஒரு மாநில அரசும், ஆயுள் தண்டனை கைதிகளை விடுவிக்க முடியாமல் உச்சநீதிமன்றம் தடை விதித்தள்ள நிலையில், தமிழக அரசு, இந்த வழக்கில் மேல்முறையீடு செய்ய வரும்போதுதான் வழக்கின் தேக்க நிலை உடையும் என்று உச்சநீதிமன்ற வட்டாரங்கள் கூறு கின்றன. தமிழக அரசின் அலட்சியத்தால் தமிழ்நாட்டில் விடுதலை செய்யப்பட்ட தாக அறிவிக்கப்பட்ட 7 பேர் மட்டுமல்ல; இந்தியாவில் எந்த ஒரு மாநிலத்திலும் ஆயுள் தண்டனை கைதிகள் விடுவிக்கப்பட முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு விட்டனர். இதன் முக்கியத்துவத்தை தமிழக அரசு உணர்ந்ததாக தெரியவில்லை.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள தமிழக அரசு நிர்வாகம், மக்கள் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்காமல், வளர்ச்சித் திட்டங்கள், மக்கள் நலத் திட்டங்கள் எதைப் பற்றியுமே கவலைப்படாமல் முகத்தைத் திருப்பிக் கொண்டு நிற்பது வாக்களித்த மக்களுக்கு இழைக்கும் துரோகம்!

தமிழ்நாட்டில் நிர்வாகமே முடங்கிக் கிடக்கிறது. பெரியார்–அண்ணா பெயரை உச்சரிப்பதற்கு எந்தத் தகுதியும் இல்லாத பார்ப்பனிய ஆட்சியாகவே மாறி நிற்கும் இந்த அவலத்தை என்னவென்று சொல்வது?

# எழுத்தாளர்கள் குணா-கண்ணன் மீது பாய்ந்த ஜாதி வெறி

பெருமாள் முருகன் எழுதிய ‘மாதொரு பாகன்’ நாவலை திருச்செங்கோடு ஜாதிவெறி சக்திகள் அச்சுறுத்தி முடக்கியதுபோல் புதுக்கோட்டை மாவட்டத்திலும் இரண்டு தலித் இளைஞர்கள் ஜாதி வெறிக்கு எதிராக எழுதிய நூலுக்கு ஜாதி வெறியர்கள் எதிர்ப்பு தெரிவித்து அவர்களை ஊரைவிட்டே ஓட வைத்து விட்டனர். அவர்களின் வீடுகள் தாக்கப்பட்டன; உடைமைகளும் ஜாதி வெறியர்களால் அழிக்கப்பட்டன.

புதுக்கோட்டை மாவட்டம் கரம்பக்குடி வட்டம் குளந்திரான்பட்டு கிராமத்தைச் சார்ந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சார்ந்த இளைஞர் துரை. குணா, ‘ஊர் கூடி தேர் இழுப்பவர்கள்’ என்று எழுதிய நாவலுக்கு ஊர் ஜாதி வெறியர்கள் எதிர்ப்பு தெரிவித்து, ஊரில் குடியிருக்க விடாமல் அச்சுறுத்தி வெளியேற்றி விட்டனர். அதே மாவட்டம் கொத்தமங்கலத்தைச் சார்ந்த தலித் தோழர் ம.மு. கண்ணன் எழுதிய ‘கானாயீனாவின் கணினி’ என்ற நாவல், ஜாதி வெறி குறித்துப் பதிவுகளை செய்திருந்ததால், அவரது குடிசை வீட்டைக் கொளுத்தி, அவர் சேமித்து வைத்திருந்த அரிய நூல்களையும் ஜாதி வெறியர்கள் எரித்துவிட்டனர். 3 ஆண்டுகளாக ஊருக்கும் செல்லமுடியாமல் ஊரை விட்டு வெளியேறி விட்டார் கண்ணன்.

துரை. குணா, கண்ணனின் சந்திப்பு நிகழ்ச்சி ஒன்று, 8.2.2015 மாலை 4 மணியளவில் எழும்பூர் இக்ஷா அரங்கில் நடைபெற்றது. கருத்துரிமை பாதுகாப்பு கூட்டமைப்பு இந்த நிகழ்வுக்கு ஏற்பாடு செய்தது. நிகழ்வில் இருவரும் பங்கேற்று. ஜாதி வெறியர்களால் சந்தித்த அடக்குமுறைகளையும் காவல்துறை நடவடிக்கை ஏதும் எடுக்காததையும் விவரித்துக் கூறினர். துரை. குணாவின் தந்தை, அப்பகுதியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியில் தீவிரமாக செயல்பட்டு வரக்கூடிய தோழர். அவரது நூலுக்கு முன்னுரை வழங்கியதும், நூலை நிகழ்ச்சியில் வெளியிட்டதும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர்தான் என்று கூறிய குணா, தனக்கு ஜாதி வெறியர்களால் மிரட்டல், தாக்குதல் நடந்தபோது தனக்கு உதவிட, கட்சித் தோழர்கள் முன்வரவில்லை என்று வேதனையுடன் குறிப்பிட்டார்.

நிகழ்வில், கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் அமுதன், பேராசிரியர் அரசு, எழுத்தாளர் பீர் முகம்மது, அ. மார்க்ஸ், விடுதலை இராசேந்திரன் ஆகியோர் உரையாற்றினர். மதவாத சக்திகள், ஜாதி வெறி சக்திகளை இணைத்துக் கொண்டு செயல்படத் தொடங்கியிருக்கும் ஆபத்தைகளையும் ஜாதி எதிர்ப்புக்கான முனைப்பான போராட்டங்களை எழுத்தாளர்கள், இலக்கியவாதிகள், மனித உரிமையாளர்கள், முற்போக்கு இயக்கங்கள், தீவிரமாக முன்னெடுக்க வேண்டிய அவசியத்தையும் கூட்டத்தில் பேசியவர்கள் வலியுறுத்தினர்.

# பெருமாள் முருகனுக்கு ஆதரவாக மாணவர்கள் போராட்டம்



தமிழ்நாடு மாணவர் கழகம் கருத்து சுதந்திரத்தையும் ‘மாதொருபாகன்’ நூலுக்கு எதிர்ப்பு தெரிவித்த கல்வி நிறுவனங்களையும் ஜாதிய மதவாத அமைப்புகளையும் வன்மையாக கண்டித்து, கருப்புப் பட்டை அணிந்து வகுப்பு புறக்கணிப்பு போராட்டம் ஈரோடு சி.என்.சி. கல்லூரியில் நடைபெற்றது.

இந்திய அரசியல் சட்டப்பிரிவு 19 (1) ன் படி கருத்துரிமையை பாதுகாக்க கோரி தமிழக அரசை வலியுருத்தியும், பேராசிரியர் பெருமாள் முருகன் அவர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் இப்போராட்டம் ஈரோடு மாவட்ட பொறுப்பாளர் மூர்த்தி தலைமையில் நடைபெற்றது. இப்போராட்டதில் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## பொள்ளாச்சி ஆர். தனலட்சுமி நன்கொடை

கழகத்தின் செயலவை உறுப்பினர் பொள்ளாச்சி சி. விசயராகவன், துணைவியார் ஆர்.தனலட்சுமி, நகராட்சி அலுவலக பொது மருந்தகத்தில் பெண் செவிலியர் உதவியாளராக பணியாற்றி, கடந்த 31.1.2015 அன்று ஓய்வு பெற்றார். அதன் நினைவாக ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வளர்ச்சி நிதியாக ரூ.1000 வழங்கினார். நன்றியுடன் பெற்றுக் கொண்டோம். (ஆர்)

# இடஒதுக்கீட்டால் ‘தகுதி, திறமை’ பாதிக்கப்படவில்லை

இடஒதுக்கீடு கொள்கை ‘தகுதி திறமை’க்கு எதிரானது என்று பார்ப்பனர்கள் இடஒதுக்கீடு எதிர்ப்பாளர்கள் தொடர்ந்து முன் வைக்கும் வாதத்தில் உண்மையில்லை என்று ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது. டெல்லி பொருளாதார ஆய்வு மய்யத்தின் பேராசிரியர் அஷ்வினி தேஷ்பாண்டே, அமெரிக்காவின் மிச்சிகன் பொருளாதார பல்கலைக்கழக பேராசிரியர் தாமஸ் வெய்ஸ்கோஃப் இருவரும் இணைந்து உலகின் மிகப் பெரும் பொதுத் துறை நிறுவனமான இந்திய தொடர்வண்டித் துறையில் இந்த ஆய்வை நடத்தினர். தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு இடஒதுக்கீடு வழங்கப்பட்டதால் தொடர்வண்டித் துறையில் உற்பத்தியோ திறனோ பாதிப்புக்குள்ளானதா என்ற இந்த ஆய்வு 1980-லிருந்து 2002 வரையுள்ள ஆண்டுகளை அடிப்படையாக வைத்து நடத்தப்பட்டது. இந்த ஆய்வை உலகின் தலைசிறந்த ஆய்விதழான ‘வேல்ட் டெவலப்மென்’ (World Development) வெளியிட் டுள்ளது. பிரிவு ‘ஏ’ முதல் ‘டி’ வரை பல்வேறு நிலைகளில் பணியாற்றும் 1.3 மில்லியன் ஊழியர்களிடமிருந்து மிக விரிவாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் பிற்படுத்தப்பட்டோர் ஒதுக்கீட்டில் இடம் பெற்றவர்களையும் கூடுதலாக சேர்த்துக் கொள்ளப்பட்டது. அதிக எண்ணிக்கையில் பணியாற்றும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடி ஊழியர்கள் மண்டலங்களையும் இந்தப் பிரிவினர் குறைந்த எண்ணிக்கையில் பணியாற்றும் மண்டலங்களையும் ஒப்பீடு செய்து, தரவுகள் காரணிகளின் அடிப்படையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இது குறித்து ‘புதிய தலைமுறை’ தொலைக்காட்சியின் நேர்படப் பேசு விவாதத்தில் (பிப்.5 அன்று) பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்று, ஆய்வின் முடிவுகளை வரவேற்றுப் பேசினார். தீவிர இடஒதுக்கீடு எதிர்ப்பாளரான வழக்கறிஞர் விஜயன், ஆய்வு நடத்தப்பட்ட முறைகளில் அய்யங்களை எழுப்பி, இந்த முடிவுகளை ஏற்பதில் தமக்கு உடன்பாடு இல்லை என்று வாதிட்டார். இந்த வாதத்துக்கு ‘இந்து’ ஏடே பதிலளித்துள்ளது. விரிவான புள்ளி விவரங்கள், தரவுகளுடன் இந்த ஆய்வு நடத்தப்பட்ட முறையை ஆசிரியர் குழு உறுதி செய்த பிறகுதான் ‘இந்து’ ஆங்கில ஏடு வெளியிட்டது என்று இந்த ஏட்டின் ‘வாசகர்களுக்கான ஆசிரியர்’ ஏ.எஸ். பன்னீர்செல்வம் அந்த ஏட்டில் விளக்கமளித்துள்ளார் (பிப்.9, 2015). ஆய்வாளர்களும் ஆய்வை வெளியிட்ட இதழும், ஆய்வுலகில் மதிக்கப்படுவோராக இருப்பதையும் எடுத்துக்காட்டியுள்ளார். தொடர்வண்டித் துறையில் இந்த ஆய்வை மேற்கொள்ள நேர்ந்தமைக்கான காரணங்களை ஆய்வாளர்கள் தங்கள் அறிக்கையில் பதிவு செய்துள்ளனர். அடிக்கடி தொடர் வண்டி விபத்துகள் நிகழ்வதற்குக் காரணம், இரயில்வேயில் இடஒதுக்கீடு அடிப்படையில் தகுதி திறமையில்லாதவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிப்பதால் தான் என்று ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஏட்டில் 1990 செப்டம்பரில் வெளிவந்த ஒரு கட்டுரைதான் இந்த ஆய்வை நடத்தத் தூண்டியது என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளதை ஏ.எஸ். பன்னீர்செல்வம், தனது விளக்கத்தில் பதிவு செய்துள்ளார். தகுதியானவர்களை மட்டுமே தேர்வு செய்வதைவிட பல்வேறு திறன் கொண்ட பன்முகப் பிரிவினரின் ஆற்றல்களை ஒருங்கிணைப்பதில்தான் திறனையும், ஆற்றலையும் வெளிக்கொண்டு வர முடியும் என்றும், இந்தக் கட்டுரை சுட்டிக் காட்டியுள்ளது. எவ்வித தரவுகளோ, புள்ளி விவரங்களோ இல்லாமல் இடஒதுக்கீட்டுப் பிரிவினரை அவமதித்து, ‘இந்தியன் எக்ஸ்பிரஸ்’ கட்டுரை வந்தபோது அந்தக் கருத்தை வரவேற்று நியாயப்படுத்திய அதே ‘அறிவு ஜீவி’ கூட்டம்தான் இப்போது முறையான தரவுகளுடன் வெளிவந்துள்ள இந்த ஆய்வை குறை கூறி ஏற்க முடியாது என்று கூக்குரலிடுகிறது.

**ஆய்வு வெளிப்படுத்தும் உண்மை**

## வினாக்கள்... விடைகள்...!

✦ குடும்பக் கட்டுப்பாடு மாத்திரையை முதன்முதலாக உருவாக்கிய விஞ்ஞானி கார்ல் ஜெராசி, 91ஆம் வயதில் அமெரிக்காவில் மரணமடைந்தார். **– செய்தி**

‘குழந்தைகளைத் தருவது கடவுளே’ என்ற மூடநம்பிக்கையை முறியடித்து, 91 வயது வாழ்ந்து காட்டிய விஞ்ஞானிக்கு வீரவணக்கம்!

✦ இஸ்லாம் கிறிஸ்துவ மதத்திலிருந்து ‘இந்து’ மதம் திரும்பியவாகள் ஜாதியற்றவர்கள்; அவர்கள் ஜாதி ஒழிப்புப் போராளிகள். **– ஆர்.எஸ்.எஸ். ஏடு ‘விஜயபாரதம்’**

அப்ப, ஆர்.எஸ்.எஸ்.ஸை கூண்டோடு இஸ்லாம் மதத்துக்கு மாற்றி, மீண்டும் ‘இந்து’ மதத்துக்கு திரும்பினா, ஆர்.எஸ்.எஸ்.லேயே ஜாதி ஒழிஞ்சுடும்ல; யோசிங்க.

✦ ஸ்ரீரங்கம் தொகுதியில் அ.தி.மு.க. – பா.ஜ.க.வினர் நேரடி மோதல் – கைகலப்பு. **– செய்தி**

இப்படி ‘இந்து’க்களுக்குள்ளேயே மோதிக் கொண்டு இந்து ஒற்றுமையை பா.ஜ.க. குலைப்பது தேசத்துரோக மல்லவா?

✦ மத சகிப்புத் தன்மை பற்றி ஒபாமா எங்களுக்கு புத்தி சொல்ல வேண்டாம். **– உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங்**

பதில் கூறுவதிலாவது கொஞ்சம் சகிப்புத் தன்மையை காட்டக் கூடாதா, ராஜ்நாத், ஜி!

✦ ‘வாஸ்து’ சரியில்லை என்பதால் தலைமை செயலகத்தையே இடம் மாற்றுகிறார், தெலுங்கானா முதல்வர். **– செய்தி**

அப்ப, தெலுங்கானாவுக்கு வாஸ்து சரியில்லைன்னா, மீண்டும் ஆந்திராவுக்கே கொண்டு போயிடுவாரா?

✦ கெஜ்ரிவால் ஜாதியை கேலி செய்து டெல்லியில் பா.ஜ.க. சுவரொட்டி. **– செய்தி**

அப்படியே, அவருடைய இந்து மதத்தையும் கேலி செய்து, ஒரு சுவரொட்டிப் போட்டா, ஓட்டுகளை குவிச்சிருக்கலாம்ல!

✦ ‘கார்ப்பரேட்’ முதலாளிகள் 100 பேர் அமீத்ஷா முன்னிலையில் பா.ஜ.க.வில் சேர்ந்தனர். **– செய்தி**

‘தாய் கட்சி’ திரும்புகிறார்கள் போலும்! வேத சடங்குகள் எல்லாம் முறைப்படி நடந்ததா?

## காசு கொடுத்து உதை வாங்கும் கதை

இந்தியாவின் குடியரசு தின விழாவில் பங்கேற்க, இந்தியா வந்திருந்த அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு மோடி ஆட்சி சிறப்பான வரவேற்பு அளித்தது. மரபுகளை மீறி, விமான நிலையம் சென்று மோடி, ஒபாமாவை வரவேற்றார். மோடி விதவிதமான ஆடைகளை அணிந்து, ஒபாமா நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். ‘ஒபாமா–மோடி’யின் நெருக்கமான நட்பு குறித்து ஊடகங்கள் புகழ்ந்து எழுதின.

கடந்த மாதம் 27ஆம் தேதி டெல்லியில் ஸ்ரீகோட்டையில் இளைஞர்கள் பங்கேற்ற நிகழ்ச்சியில் பேசிய ஒபாமா, மோடியின் வரவேற்பு மாயைகளில் தாம் மூழ்கிடவில்லை என்பதை இடித்துக் காட்டி பேசினார். “இந்தியாவின் வெற்றி, அது மதத்தின் அடிப்படையில் பிளவுபடாதபோதுதான் தொடர்ந்து நீடிக்கும். பாரம்பர்ய அடிப்படையில் மதப் பிளவுகளை உருவாக்கும் முயற்சிகளை எதிர்த்து நிற்க வேண்டும்” என்று பேசினார்.

இந்திய அரசியல் சட்டத்தின் 25ஆவது பிரிவு மத சுதந்திரத்தை வலியுறுத்தியதையும் அவர் எடுத்துக் காட்டினார். இந்திய ஆளும் வர்க்கம் அதிர்ச்சியடைந்தது. ‘இந்தப் பேச்சு மோடி ஆட்சிக்கு எதிரானது’ என்று எதிர்க்கட்சிகள் தெரிவித்தன. மோடி கருத்து ஏதும் தெரிவிக்காமல் அமைதி காத்தார்.

இந்த நிலையில் இந்திய வெளி விவகாரத் துறை வட்டாரங்கள் மேற்கொண்ட முயற்சியினால் வாஷிங்டன் வெள்ளை மாளிகை அதிகாரியிடமிருந்து ஒரு மறுப்பு அறிக்கை வெளியிடப்பட்டது. “ஒபாமாவின் கருத்து இந்திய ஊடகங்களில் திரித்து வெளியிடப்பட்டது” என்று அந்த அறிக்கை கூறியது. இந்திய வெளியுறவுத் துறை செய்தி தொடர்பாளர் சையத் அக்பருதின், வெள்ளை மாளிகையிலிருந்து வெளிவந்த அறிக்கையை செய்தியாளர்களுக்கு எடுத்துக் காட்டி, மோடி ஆட்சியைக் காப்பாற்ற முயன்றார். இவ்வளவுக்கும் பிறகு, கடந்த பிப்.5 ஆம் தேதி வாஷிங்டனில் நடந்த ‘தேசிய வழிபாடு காலை உணவு நிகழ்வில்’ பங்கேற்றுப் பேசிய ஒபாமா, மேலும் வெளிப்படையாகவே மோடி ஆட்சியின் மதவெறிப் போக்கை சாடினார்.

“வியக்கத்தக்க அழகான முழுமையான அற்புதமான பன்முகத் தன்மை கொண்ட இந்தியாவிலிருந்து நானும் மிச்செல்லும் (ஒபாமா மனைவி) திரும்பியிருக்கிறோம். ஆனால், இந்த நாட்டில் பல்வேறு மத நம்பிக்கை கொண்ட மக்கள் மீது பிற மத நம்பிக்கையாளர்கள் குறி வைத்து தாக்குகிறார்கள். தங்களின் மத நம்பிக்கை பாரம்பர்யம் கொண்டதாக அவர்கள் நம்புகிறார்கள். மதச் சகிப்புத் தன்மை இல்லாத இந்த செயல்கள் நாட்டின் விடுதலைக்காக பாடுபட்ட காந்திஜியை அதிர்ச்சி அடையச் செய்திருக்கும்” என்று ஒபாமா பேசியிருக்கிறார். ‘காசு கொடுத்து உதை வாங்கும் கதை’ என்று பெரியார் சுட்டிக் காட்டும் உவமைதான் நினைவுக்கு வருகிறது.

“மத சகிப்புத் தன்மை குறித்து ஒபாமா, இந்தியாவுக்கு அறிவுரை வழங்க வேண்டாம்” என்று உள்துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், ஒபாமாவுக்கு பதிலளித்துள்ளார். வாஷிங்டனில் ஒபாமாவின் பேச்சு, எழுத்து வடிவில் தயாரிக்கப்பட்டு படிக்கப்பட்டதாகும். இது இந்திய அரசு வட்டாரத்தில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. காரணம், ‘உலக நாடுகளின் மத சுதந்திரம்’ பற்றி அமெரிக்கா, கடந்த ஆண்டு வெளியிட்ட அறிக்கையில் இந்தியாவை ஆப்கானிஸ்தானோடு சேர்ந்து மதப் பதட்டம் நிறைந்த நாடகாகவே அறிவித்திருந்தது.

அடுத்த சில மாதங்களில் 2015ஆம் ஆண்டுக்கான அறிக்கையை அமெரிக்கா வெளியிட விருக்கிறது. 2013 மற்றும் 2014ஆம் ஆண்டு அறிக்கையில் முசாபர் நகர் கலவரம் மற்றும் 2002இல் நடந்த குஜராத் கலவரங்களை பதிவு செய்திருந்தது. இந்த நிலையில் ஒபாமா, எழுத்து வடிவில் இந்தியாவைப் பற்றி தயாரித்து பேசியுள்ளதால் வரவிருக்கும் அறிக்கையில் ‘மத சுதந்திரம்’ மறுக்கப்படும் நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம் பெறக் கூடும். இதனால் அன்னிய முதலீடுகள், இந்தியாவுக்கு வருவதில் சிக்கல்கள் உருவாகும் என்று இந்திய அரசு வட்டாரங்கள் கவலை அடைந்துள்ளன.

‘நியூயார்க் டைம்ஸ்’ நாளேடும் இந்தியாவில் நடக்கும் மதவெறி செயல்பாடுகளை அழுத்தமாகக் கண்டித்து தலையங்கம் தீட்டியுள்ளது. மோடி, காந்தியை தூய்மையின் குறியீடாக திசை திருப்ப முயன்றார். ஆனால், ஒபாமா, மதவெறிக்கு எதிரானவரே காந்தி என்று கூறியிருப்பது மோடியின் திசை திருப்பலுக்கும் சரியான பதிலடியாக அமைந்து விட்டது.

DATE OF PUBLICATION 12.02.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

## புதுவை கூட்டத்தில் – கழகத் தலைவர் பேச்சு

# பிரிட்டிஷ் ஆட்சியிடம் 5 முறை மன்னிப்புக் கேட்ட 'வீரர்' சாவர்க்கர்






இந்தியத் துணைக்கண்டத்தில் மக்களிடையே மதவெறியெனும் நச்சு விதையைத் தூவிவரும் சங் பரிவாரங்களின் சதி வரலாறுகளை அம்பலப் படுத்தும் விதமாக கடந்த 30.01.2015 (வெள்ளிக்கிழமை) அன்று மாலை 6.00 மணியளவில் புதுச்சேரி மாநிலம் அரியாங்குப்பத்திலுள்ள பெரியார் திடலில் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில்" காந்தியைப் படுகொலை செய்து கீதை உபதேசம் செய்யும் கோட்சே வகையறாக்களைக் கண்டித்து" எனும் தலைப்பில் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. முதல் நிகழ்வாக மதவெறிக்கெதிரான பாடல்களைத் தோழர். சமர்ப்பா பாடினார். தோழர்கள் ஆ.ஆனந்தன், கி.வேலன், கோ.சேனாபதி, கு.உதயகுமார் ஆகியோரின் முன்னிலையில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்திற்கு புதுவை மாநில திவிக செயலாளர் ஏ.சிவானந்தம் தலைமை வகித்தார். பார்ப்பனர்களின் சதிகளை அம்பலப்படுத்தும்விதமாக தொடக்க வுரையாற்றினார் புதுவை மாநிலத் தலைவர் லோகு.அய்யப்பன்.

அவரைத் தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரை ஆற்றினார். அவர் உரையில் காந்தியார் பார்ப்பனன் நாதுராம் கோட்சேவால் படுகொலை செய்யப்பட்டதற்கான காரணங்களை விளக்கினார். "காந்தி எப்பொழுது பார்ப்பனர்களை மதப்பிரச்சனைகளை விட்டுவிட்டு மனிதர்களிடையே சமத்துவத்தைப் பேணச்சொன்னாரோ அப்பொழுதே ஆர்.எஸ்.எஸ் என்ற பார்ப்பனர்களின் அமைப்புத் தலைவர்களின் ஒருவரான சாவர்க்கரின் அறிவுறுத்தலின் பேரில் காந்தியைக் கொல்லச் சதிசெய்யத் தொடங்கிவிட்டனர்". பார்ப்பனர்களால் வீரர் எனப் போற்றப்படும் இந்த சாவர்க்கர் ஆங்கிலேயரின் ஆட்சியில் ஐந்து முறை அரசாங்கத்திற்கு மன்னிப்புக் கடிதம் எழுதிக் கொடுத்தவர், இவரைத்தான் வீரர் எனப் போற்றிக் கொண்டிருக்கிறார்கள் பார்ப்பனர்கள்" என்றார். மேலும் கூறுகையில், "தமிழ் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட இடஒதுக்கீட்டுக்கு எதிராக டெல்லியில் கண்டன ஊர்வலம் நடத்தப் போவதாக காமராசரை மிரட்டியபோது "உங்களுக்குத் தைரியம் இருந்தால் உங்களின் ஊர்வலத்தைச் சென்னையில் நடத்திப் பாருங்கள் என்றார் காமராசர்". "அவ்வாறு அவர் கூறியதற்குக் காரணம் பெரியாரின் கொள்கைகள் விதைக்கப்பட்டுள்ள தமிழ் நாட்டில் பார்ப்பனர்களின் எதிர்ப்பு எடுபடாது என்ற காரணத்தினால்தான். அந்த அளவிற்கு பெரியாரின் பார்ப்பன எதிர்ப்பு தமிழ் நாட்டில் இருக்கிறது. இதனால் ஆத்திரம் அடைந்த ஆர்.எஸ்.எஸ் அமைப்பைச் சேர்ந்த பார்ப்பனர்கள் டெல்லியில் காமராசரின் வீட்டிற்குத் தீ வைத்து அவரைக் கொல்ல முயற்சி செய்தனர்".

"மொகலாயர்கள் இந்தியாவில் படையெடுத்தனர் என்று கூறும் பார்ப்பனர்கள், ஆரியர்களின் படைபெடுப்பை மறைத்து ஆரியர் வருகை என்று வரலாற்றுப் பாடப் புத்தகங்களில் தவறான கருத்துக்களைத் திணிக்கின்றனர். அதே போல் இராசீவ் காந்தியைக் கொன்றது விடுதலைப் புலிகள் எனக் கூறும் பார்ப்பனர்கள், காந்தியைக் கொன்றது ஆர்.எஸ்.எஸ் அமைப்பு எனும் உண்மையை மறைத்துவிடுகிறார்கள். காந்தியைக் கொன்றது கோட்சே என்றால் இராசீவ் காந்தியைக் கொன்றது தானு என்றதான் கூறவேண்டும். ஆனால் பார்ப்பனர்கள் அவ்வாறு கூறுவதில்லை" எனக் குறிப்பிட்டார். தற்போது பார்ப்பனர்கள் தொலைக்காட்சியின் விவாத நிகழ்ச்சிகளின் போதுகூட தமிழர்களுக்கு எதிரான கருத்துக்களை மிகத் தீவிரமாகப் பேசி வருகிறார்கள். இன்றைய பாரதீய ஜனதா கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே விரைந்து இந்தித் திணிப்பு, வரலாற்றுத் திரிபுகள், சமஸ்கிருதத் திணிப்பைச் செய்துவிட வேண்டுமென்ற முனைப்புடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள், நாம் அதைத் தடுத்தாக வேண்டும்" என்று கூறினார். சிறப்புரைக்கு முன்பாக கூட்டத்தின் தொடக்கத்தில் தோழமை அமைப்பு களைச் சேர்ந்த தோழர்கள் உரையாற்றினர். தோழர்களும் பொதுமக்களுமாக ஏறத்தாழ ஐந்நூறு பேர் இந்தக் கண்டனப் பொதுக்கூட்த்தில் கலந்துகொண்டனர். கூட்டத் தின் முடிவில் இளைஞரணிச் செயலாளர் தோழர். இரா.இராசா நன்றி கூறினார்.

## கழக செயலவை தீர்மானம் வெற்றி: காவல்நிலையங்களில் கண்காணிப்பு காமிராக்கள்

26.10.2014 அன்று திருச்சியில் கூடிய திராவிடர் கழக செயலவை, காவல் நிலையங்களில் 'மரண தண்டனை' வழங்கிவிட்டு, உண்மைக்கு மாறான காரணங்களைக் கூறி, காவல்துறையினர் தப்பி விடுவதை சுட்டிக் காட்டி, தீர்மானம் நிறைவேற்றியது. அத் தீர்மானத்தில், "காவல்நிலைய விசாரணைகளில் நடக்கும் உண்மைகளைக் கண்டறிய, எதிர்காலத்திலாவது கண்காணிப்புக் காமிராக்களை ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பொருத்த வேண்டும்" என்று தமிழக அரசை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியது. திராவிடர் விடுதலைக் கழகம் முன் வைத்த இந்த ஆலோசனை, இப்போது உயர்நீதிமன்ற உத்தரவு வழியாக நிறைவேற்றப்படவிருக்கிறது. சென்னையைச் சேர்ந்த வழக்கறிஞர் ஐ.பிரகாஷ்ராஜ் தொடர்ந்த பொதுநல வழக்கில் காவல்நிலையத்தில் கண்காணிப்பு காமிராக்கள் பொருத்தப்பட வேண்டும் என்று கோரி இருந்தார். இந்த மனுவை விசாரித்த தலைமை நீதிபதிகள் எஸ்.கே.கவுல், எப்.எம். சுந்தரேஷ் ஆகியோர் அடங்கிய அமர்வு, முதல் கட்டமாக 251 காவல் நிலையங்களில் மார்ச் 9ஆம் தேதிக்குள் கண்காணிப்பு காமிராக்களை பொருத்துமாறு காவல்துறை இயக்குனருக்கு உத்தரவிட்டுள்ளது. பணி நிறைவடைந்த அறிக்கையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய நீதிபதிகள் உத்தரவிட்டனர். தமிழக அரசும் கண்காணிப்புக் காமிரா பொருத்த வேண்டும் என்ற கோரிக்கையை நீதிமன்றத்தில் ஏற்றுக் கொண்டது.

### குமாரபாளையத்தில் தமிழர் திருநாள்

திராவிடர் திருநாள் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு, பொங்கல் விழா (14.1.2015) புதன் இரவு 12 மணிக்கு குமாரபாளையம் நகர திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் குமாரபாளையம் நகராட்சி எதிரில் செல்வி மிதிவண்டி நிலையம் அருகில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. இதில் கழகத் தோழர்கள் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.


## திருப்பூரில் கழகம் எடுத்த தமிழர் திருநாள்



திருப்பூரில் 25.01.15 அன்று ராயபுரம், திருவள்ளுவர் நகர் பகுதியில் திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பொங்கல் விழா, விளையாட்டுப் போட்டிகள் மற்றும் தமிழின உரிமை மீட்பு பொதுக் கூட்டம் நடைபெற்றது. காலை 8 மணி முதல் மாலை வரை விளையாட்டு போட்டிகளும் மாலை பொதுக்கூட்டமும் நடைபெற்றது. இப்பொதுக்கூட்டத்திற்கு நீதிராசன் தலைமை தாங்கினார். கருணாநிதி வரவேற்றுப் பேசினார். பொதுக்கூட்டத்தின் நிறைவாக திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி கருத்துரை ஆற்றினார். அவர் பேசுகையில் தமிழர்கட்கு ஏற்பட்டுள்ள ஆபத்துகளான கூடன்குளம் அணுஉலை, மீத்தேன் வாயு எடுக்கும் திட்டம் உள்ளிட்ட எதிர்கால ஆபத்துகளையும் எடுத்துரைத்தது மக்களின் ஈர்ப்பையும், சிந்தனையையும் தூண்டுவதாகவும் அமைந்தது. தலைமைக் குழு உறுப்பினர் சு.துரைசாமி, பொள்ளாச்சி மாவட்ட தலைவர் விஜய ராகவன் ஆகியோர் கலந்து கொண்டு விளையாட்டு போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு கோப்பைகள் மற்றும் பரிசுகளை வழங்கி சிறப்பித்தார்கள். பரிசளிப்பு விழாவில் சுசீலா, சுயமரியாதை கலை பண்பாட்டுக்கழக மாவட்ட அமைப்பாளர் பரமேஸ்வரி, யமுனா, பரிமளம், ஜெகதீசன், பல்லடம் சாந்தி, பாடகர் தியாகு, பல்லடம் விஜயன், செல்வம் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 12th February 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | பிப்ரவரி 19, 2015 | புரட்சி 14 | முழக்கம் 6 | விலை: ரூ.3.00

# ஈரோட்டில் விடுதலைப்புலிகளுக்கு உதவிய மருத்துவர்களுக்கு கழகம் பாராட்டு!






திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி எழுதிய "பெரியாருக்கு எதிரான முனை மழுங்கும் வாதங்கள்", கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராஜேந்திரன் தொகுத்த "காந்தியை சாய்த்த கோட்சேவின் குண்டுகள்", தஞ்சை பசு கௌதமன் தொகுத்த "ஏஜிகேவின் நினைவுகளும். நிகழ்வுகளும்", புதுச்சேரி இராவணன் பதிப்பகம் தொகுத்த "பிரிகேடியர் பால்ராஜ் சமர்க்கள நாயகன் (போர்களத்தின் வெற்றிகள்)" ஆகிய நூல்களின் அறிமுக விழா ஈரோடு மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் பிப்ரவரி 12 வியாழக்கிழமை மாலை 5.00 மணியளவில் ஈரோடு மாநகராட்சி திருமண மண்டபத்தில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக்குழு உறுப்பினர் ப.இரத்தினசாமி தலைமையில் மிகுந்த எழுச்சியோடு நடைபெற்றது.

விழாவிற்கு வந்த அனைவரையும் பொள்ளாச்சி விஜயராகவன் வரவேற்று உரையாற்றினார். தலைமைக் குழு உறுப்பினர்கள் திருப்பூர் துரைசாமி, கோபி இராம இளங்கோவன், தமிழ் உணர்வாளர், பகீரதன் ஆகியோர் முன்னிலையேற்று உரையாற்றி னார்கள்.

பின்னர், ஈரோடு வடக்கு மாவட்ட தலைவர் குருவரெட்டியூர் நாத்திக ஜோதி, நாமக்கல் மாவட்ட செயலாளர் திருச்செங்கோடு மா.வைரவேல், கோவை புறநகர மாவட்ட தலைவர் மேட்டுப் பாளையம் ரவிச்சந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் .

தொடர்ந்து தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மருத்துவ உதவி புரிந்த மருத்துவர்களுக்கு பாராட்டு நிகழ்வு நடைபெற்றது. தமிழீழ விடுதலைப்போரில் காயம்பட்டு தமிழகம் வந்த போராளிகளுக்கு ஈரோடு மாவட்டத்திலிருந்து மனித நேயமிக்க தமிழ் இன உணர்வு மிகுந்த மருத்துவர்கள் சிகிச்சை அளித்தனர்.

## கழக வெளியீடுகளும் அறிமுகம்

அப்படி சிகிச்சை அளித்த மருத்துவர்களுக்கும் தமிழ் இன உணர்வாளர்களுக்கும் அவர்களின் தொண்டினை நினைவுகூரும் வகையில் திராவிடர் விடுதலைக்கழகத்தின் சார்பில் பாராட்டு நிகழ்வு நடைபெற்றது.

மருத்துவர் காளி கவுண்டன், மருத்துவர் நடேசன், மருத்துவர் ஜீவானந்தம், முதுபெரும் பெரியார் பெருந்தொண்டரும் ஒரு வருடம் தேசிய பாதுகாப்பு சட்டத்தில் சிறையில் இருந்த திராவிடர் கழகத்தை சார்ந்த ஆ. மாரப்பனார், காயம்பட்ட புலிகளுக்கு இரத்தங்கள் சேகரித்து கொடுத்த ஈரோடு சாந்தி இரத்த பரிசோதனை நிலைய உரிமையாளர் சக்திவேல், கழகத்தலைவர் கொளத்தூர் மணியுடன் தேசிய பாதுகாப்பு சட்டத்தில் 4 மாதங்கள் சிறையில் இருந்த தமிழ் உணர்வாளர் மா.சீனிவாசன், ரிப்போர்ட்டர் இராஜேந்திரன், மருத்துவர் சக்திவேல், வெள்ள கோவில் மருத்துவர் கார்மேகம் மற்றும் அவரது துணைவியாருக்கும் திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி சால்வை அணிவித்து கவுரவித்தார்.

இறுதியாக நூல்களை அறிமுகப்படுத்திய திராவிடர் விடுதலைக் கழகத் தலைமைக் குழு உறுப்பினர் தூத்துக்குடி பால் பிரபாகரன், எழுத்தாளர் தஞ்சை பசு கௌதமன், எழுத்தாளர் வே.மதிமாறன் ஆகியோர் உரையாற்றிய பின் திராவிடர் விடுதலைக் கழக தலைவர் கொளத்தூர் மணி சிறப்புரையாற்றினார்.

முன்னதாக ஈரோடு தெற்கு மாவட்ட செயலாளர் சண்முகப்பிரியனின் மகன் தமிழ்பிரியன் சென்னை யில் உள்ள மத்திய அரசின் தோல் ஆராய்ச்சி கழகத்தின் சார்பில் நடைபெற்ற தேர்வில், 'தோல் கழிவு நீர் சுத்திகரிப்பு' குறித்து எழுதிய கட்டுரை முதலிடம் பெற்றது. இதனை பாராட்டி கழகத் தலைவர் கொளத்தூர் மணி தமிழ்பிரியனுக்கு சால்வை அணிவித்து சிறப்பித்தார். இறுதியாக ஈரோடு மாநகர துணைத்தலைவர் சத்தியமூர்த்தி நன்றி கூறினார்.

விழாவில், சேலம் மேற்கு மாவட்ட தலைவர் சூரியகுமார், ஈரோடு தெற்கு மாவட்ட தலைவர் சென்னிமலை செல்லப்பன், நாமக்கல் மாவட்ட தலைவர் குமாரபாளையம் சுவாமிநாதன், சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் சக்திவேல், ஈரோடு வடக்கு மாவட்ட செயலாளர் திங்களூர் அர்சுனன், திருப்பூர் மாவட்ட செயலாளர் முகில்ராசு, ஈரோடு தெற்கு மாவட்ட அமைப்பாளர்கள் சென்னிமலை செல்வராசு, மரவப்பாளையம் ப.குமார், ஈரோடு மாநகர செயலாளர் சிவானந்தம், மேட்டூர் கிட்டு, தலைமைக்குழு உறுப்பினர் மேட்டூர் சக்திவேல், திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா. காளிதாசு உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றனர்.

**செய்தி மன்னை இரா.காளிதாசு.**

# கடய்கரையி காதலர்களுக்கு கழகத்ருனர் வா த்துஸ

14.2.2015 அன்று சென்னை மாவட்டம் சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம், திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் மதவெறி அமைப்பான இந்து மகாசபை சார்ந்தவர்கள் உலக காதலர் தினத்தை கொச்சைப்படுத்தி நாய்களுக்கு திருமணம் செய்தும், காதலர்களுக்கு கட்டாய தாலி கட்டுவோம் என்பதை எதிர்த்தும், காதலர்களுக்கு இனிப்புகள் வழங்கி, ஜாதி, மதங்களை கடந்து உலக காதலர் தினத்தை கொண்டாடிய நிகழ்வு காலை 10 மணியளவில் சென்னை மெரினா கண்ணகி சிலை அருகில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி தலைமை தாங்கினார்.



கழகத்தின் சார்பில் இப்படி ஒரு விழா எடுப்பதை அறிந்த இந்து மகாசபை அமைப்பினர், கண்ணகி சிலை அருகில் நடக்க இருந்த ஆர்ப்பாட்டத்தை இரத்து செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. கழகத் தோழர்கள் காதலர்களுக்கு இனிப்பு கொடுத்து,

(3ஆம் பக்கம்)

**தலையங்கம்**

## சர்வதேச விசாரணைகளை முடக்க சதியா?

எதிர்பார்த்ததுதான் நடக்கிறது; இலங்கையில் இராஜபக்சே வீழ்த்தப்பட்டு, மைத்ரிபாலா சிறிசேனா அதிபராக்கப்பட்டதன் பின்னணியைத்தான் குறிப்பிடுகிறோம். ஈழத் தமிழர் மீதான இனப்படுகொலையையும் அவர்களின் நியாயமான தமிழீழ கோரிக்கையையும் அப்படியே மூடி மறைத்து, இறுதிப் பயணத்துக்கு அனுப்புவதற்கு இந்த ஆட்சி மாற்றத்தைப் பயன்படுத்தக் கூடும் என்பதே உலகத் தமிழினத்துக்கு எழுந்த சந்தேகம்; இது உண்மைதான் என்பதை அரசியல் நிகழ்வுகள் உறுதிப்படுத்துகின்றன.

இறுதிக்கட்டப் போரில் இலங்கை அரசின் "போர்க் குற்றங்கள்" குறித்து (கவனிக்க: இனப்படுகொலை அல்ல) அய்.நா.வின் மனித உரிமைக் குழு எதிர்வரும் மார்ச் மாதம் நடக்கும் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிக்க இருந்தது. இப்போது செப்டம்பர் மாதத்துக்கு தள்ளிப் போடப்பட்டுவிட்டது. இதை அறிவித்திருப்பவரே அய்.நா.வின் மனித உரிமைக் குழு ஆணையர் சையத் ராய் அல்ஹுசேன்தான். புதிய ஆட்சி இந்த விசாரணைக்கு ஒத்துழைக்க முன் வந்திருப்பதால், அவர்களுக்கு அதற்கான காலத்தை வழங்கிட வேண்டும் என்பதே, அவர் கூறியுள்ள காரணம், அய்.நா. மனித உரிமைக்குழுவின் இந்த அறிக்கை "போர்க் குற்றமீறல்" என்பது குறித்தே இருந்தாலும்கூட, இதற்கு சர்வதேசப் பார்வையில் மிகவும் முக்கியத்துவம் உண்டு. காரணம், ஈழத்தில் நடந்த போர்க்குற்றம் – இனப் படுகொலைகள் குறித்து அய்.நா.வால் அங்கீகரிக்கப்பட்ட ஆவணம் என்று இதுவரை ஒன்றுகூட கிடையாது. (அய்.நா. முன்னாள் செயலாளர் பான்கி மூன் நியமித்த மூவர் குழு அறிக்கைகூட அய்.நா.வின் ஏற்பு பெற்ற ஆவணம் அல்ல) அந்த வெற்றிடத்தை நிரப்பக்கூடியதாக பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட இந்த ஆவணம், இப்போது முடக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவும் இந்தியாவும் இந்த முடக்கத்துக்கு தங்கள் இசைவை வழங்கிவிட்டன என்று 'இந்து' ஆங்கில நாளேடு (பிப். 17, 2015) எழுதுகிறது. சிறீலங்காவின் வெளியுறவு அமைச்சர் மங்கள சமர வீரா, அமெரிக்க அரசு செயலாளர் ஜான்கெர்ரியை கடந்த ஜன. 8 ஆம் தேதி சந்தித்துப் பேசியிருக்கிறார். புதிய அரசு, போர்க் குற்ற விசாரணைக்கு நம்பகத்தக்க அளவில் கதவைத் திறந்திருக்கிறது என்று அமெரிக்க வெளியுறவு செயலாளரும் வெளிப்படையாகவே கூறிவிட்டார். அய்.நா. மனித உரிமைக் குழுவின் அறிக்கை ஏன் முடக்கப்பட்டது என்பதற்கான காரணம் இப்போது புரிந்திருக்கும்.

இலங்கை அதிபர் மைத்ரிபாலா சிறிசேனா, அண்மையில் புதுடில்லி வந்திருக்கிறார். அவர் மோடியை சந்தித்த நாளில்தான் அய்.நா. மனித உரிமை ஆணையரின் அறிக்கையும் வந்திருப்பதை, இணைத்தே பார்க்க வேண்டியிருக்கிறது.

போர்க்குற்றம் குறித்து உள்நாட்டு விசாரணையைத் தவிர, சர்வதேச விசாரணை எதையும் தமது அரசு ஏற்காது என்று சிறிசேனா திட்டவட்டமாக அறிவித்துவிட்ட நிலையில், அதற்கு அய்.நா.வும் உடன்பட்டு விட்டதாகவே தெரிகிறது. மனித உரிமை ஆணையத் தலைவரின் இந்த அறிவிப்பு இந்த சந்தேகங்களை எழுப்புகின்றன.

இந்தப் பின்னணியில் 'போர்க்குற்ற விசாரணை'களை எதிர்நோக்கியிருக்கும் சிறீலங்கா அரசுடன் மோடி, அணுசக்தி மற்றும் இராணுவம் தொடர்பான ஒப்பந்தங்களை நிறைவேற்றிக் கொண்டு கைகுலுக்குவது தமிழினத்துக்கு இழைத்துள்ள பச்சைத் துரோகம். இன்னமும் தமிழர் பகுதியில் குவிக்கப்பட்டிருக்கும் இராணுவத்தை விலக்குவது குறித்தோ, அவ்வப்போது சடங்குத்தனமாக பேசிவரும் தமிழர்களுக்கான அதிகாரப் பகிர்வு குறித்தோ பேசாமல் வாயை இறுக மூடிக் கொண்டுவிட்டார்கள். எந்தப் பிரச்சினையுமே இல்லாத ஒரு நட்பு நாடு என்ற பார்வையோடு இந்த ஒப்பந்தங்கள் உருவாகியிருக்கின்றன.

இந்தப் பின்னணியில் வடக்கு, கிழக்கு மாகாண கவுன்சில், கடந்த பிப்.10ஆம் தேதி நிறைவேற்றியுள்ள வரலாற்று சிறப்பு மிக்க தீர்மானத்தைக் குறிப்பிட வேண்டும். முதல்வர் சி.வி. விக்னேசுவரன் அவையில் கொண்டுவந்து நிறைவேற்றிய அந்தத் தீர்மானத்தின் உள்ளடக்கம், சர்வதேச கண்ணோட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. "சிறீலங்காவில் தொடர்ந்து ஆட்சிக்கு வந்த ஆட்சியாளர்கள், தமிழர்கள்மீது 'இனப்படுகொலை'களையே கட்டவிழ்த்துவிட்டிருப்பதால், அய்.நா. மனித உரிமை ஆணையம் இது குறித்து விசாரணைக்கு உத்தரவிட்டு, குற்றவாளிகளை தண்டிக்க பரிந்துரைக்க வேண்டும் என்று அந்த தீர்மானம் கூறுகிறது. வடக்கு மாகாணத்தில் தமிழர்களால் முறையாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு ஆட்சியின் இனப்படுகொலையை உறுதி செய்யும் இந்தத் தீர்மானம்தான் உண்மையான உலகத் தமிழர்களின் ஒருமித்த குரலாகும். தமிழர்கள் குறித்து, சர்வதேச அரங்கில் "பேசும் அதிகாரம்" பெற்றிருப்பதும், வடக்கு மாகாண ஆட்சிதான். இந்தத் தீர்மானத்தை விவாதப்படுத்திவிடாமல், 'கள்ள மவுனத்தால்' கடந்து சென்றுவிடவே இந்திய பார்ப்பனிய ஆட்சி சதி செய்கிறது.

இந்த சூழலில் இதுவரை பல்வேறு குழப்பங்களோடு முரண்பாடுகளான கோரிக்கைகளை முன் வைத்துக் கொண்டும் தங்களுக்குள்ளான மாறுபாடுகளை வெளிப்படுத்திக் கொண்டும் அணி பிரிந்து கிடந்த சர்வதேச தமிழர்களுக்கும் தமிழகத்தில் ஈழத் தமிழர் ஆதரவு அமைப்புகளுக்கும் வடக்கு மாகாண கவுன்சிலின் இந்தத் தீர்மானம் ஒளி விளக்காகும். இந்த தீர்மானத்தை ஆயுதமாக்கி, அதை இயக்கமாக்க வேண்டியது அவசியம் என்று வற்புறுத்துகிறோம். ஏற்கெனவே மனித உரிமை மீறல்கள் குறித்து அய்.நா.வின் விசாரணையை வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றிய வடக்கு மாகாண கவுன்சில், இப்போது அடுத்த கட்டமாக, உரிய நேரத்தில் 'இனப்படுகொலை'யை சுட்டிக்காட்டி தீர்மானம் நிறைவேற்றியிருப்பது, 'ஒரு வரலாற்றுத் திருப்பம்' என்றே கூற விரும்புகிறோம். ஈழத் தமிழர் விடுதலைப் போராட்டம் அரசியல் களத்துக்கு வந்து நிற்கும் எதார்த்தத்தைப் புரிந்து அரசியல் நகர்வுகளை தொடங்க வேண்டும். அறிவு முதிர்ச்சியும் அரசியல் புரிதலுமே ஒரு இனத்தின் விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான படிக்கற்களாக இருக்க வேண்டும். கற்பனைவாத உணர்வுகளில் மூழ்கிக் கிடப்பது சுய உணர்வுக்கு தீனி போடுமே தவிர சுதந்திரத்தை மீட்டுத் தராது!

# சாதி வெறியர்களுக்கு துணை போகும் காவல்துறை

காவல்துறைகளில் - அந்த மாவட்டத்தின் ஆதிக்க ஜாதிப் பிரிவினரை அதிகாரிகளாக நியமிக்கக் கூடாது என்று திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. காரணம், காவல்துறை அதிகாரிகள் ஜாதி உணர்வோடு ஒடுக்கப்பட்ட தலித் மக்கள் மீதான குற்றங்களிலிருந்து தங்கள் ஜாதியைச் சார்ந்த குற்றவாளிகளைக் காப்பாற்றும் நோக்கத்துடனேயே செயல்படுகிறார்கள். இந்த உண்மையை உறுதிப்படுத்தும் தகவல்கள் வெளி வந்துள்ளன. தமிழகத்தில் 28 மாவட்டங்களில் 'எவிடென்ஸ்' அமைப்பு, தலித் மக்கள் மீதான படுகொலை சம்பவங்கள் குறித்து அண்மையில் ஆய்வு ஒன்றை நடத்தியுள்ளது. இதன்படி பெரும்பாலான புகார்களில் குற்றவாளிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் பாதிக்கப்பட்ட குடும்பத் தினருக்கும் குற்றவாளி களுக்குமிடையே சமரசம் செய்யும் முயற்சிகளையே காவல்துறை மேற் கொண்டிருக்கிறது.

கொலைக் குற்றம் குறித்து புகாரைப் பெற்றவுடன், ஒவ்வொரு கட்டத்திலும் மேற்கொள்ளப்பட வேண்டிய கடமைகளை காவல்துறை செய்வதுஇல்லை. புகாரைப் பெற்றவுடன் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்வதில்லை. சவப் பரிசோதனை அறிக்கையை கொலை செய்யப்பட்ட குடும்பத்தினருக்கு வழங்குவதுஇல்லை. தலித் மக்கள் கொலை செய்யப்பட்ட 99 சதவீத வழக்குகளில் இதுவரை குற்றப் பத்திரிகையே தாக்கல் செய்யப்படவில்லை. நீண்டகால தாமதத்துக்குப் பிறகு சந்தேகப்படும் குற்றவாளிகளை காவல்துறை கைது செய்ய முற்படும்போது அந்த நபர்கள் முன் பிணைக்கு விண்ணப்பித்தால், அதற்கு காவல்துறை எதிர்ப்பு தெரிவிப்பது இல்லை. இந்த மாவட்டங்களில் படுகொலைக்கு உள்ளான 76 தலித் மக்கள் ஆதிக்க ஜாதியினரால் கும்பலாகவோ அல்லது குழுக்களாகவோ திரண்டு வந்து கொல்லப்பட்டவர்கள். 26 படுகொலைகள் தனி மனிதர்களால் நடத்தப்பட்டவை. 91 படுகொலைகள் தீண்டாமை குற்றத்தின் கீழ் நடந்தவை. 14 கொலைகள், காதல், சொத்துப் பிரச்சினைகளால் நடந்தவை. திருநெல்வேலி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் தலித் மக்கள் மீதான கொடும் குற்றங்கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. இதில் கூடுதல் பாதிப்புக்கு உள்ளாகிறவர்கள் தலித் பெண்கள் என்று 'எவிடென்சு' நடத்திய ஆய்வு கூறுகிறது. தமிழ்நாட்டில் காவல்துறை மதவெறி, ஜாதி வெறியோடு கடிவாளம் ஏதுமின்றி வெறியாட்டம் போடுகிறது. தமிழகத்தில் ஆட்சி ஒன்று நடப்பதற்கான அறிகுறிகளும் தெரியவில்லை.

## பெண்களே இல்லாத அமைச்சரவை

டெல்லியில் ஆட்சியைக் கைப்பற்றியிருக்கிற ஆம் ஆத்மியின் அமைச்சரவையில் பெண்களுக்கு இடமில்லை. இதேபோல் பெண் அமைச்சர்களே இடம் பெறாத 7 மாநிலங்கள் இருக்கின்றன. அப்படியே பெண்கள் அமைச்சர்களாக உள்ள மாநிலங்களில் அவர்கள் எண்ணிக்கையும் குறைவு. அவர்களுக்காக ஒதுக்கப்படும் துறைகளும் வரையறுக்கப்படுகின்றன. இந்தியா முழுதும் சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 4120. இதில் 360 பேர் மட்டும் பெண்கள். அதாவது 9 சதவீதம். மொத்தமுள்ள 568 அமைச்சர்களில் 39 பேர் மட்டுமே பெண்கள். அதாவது 7 சதவீதத்துக்கும் குறைவு. இதில் காபினட் அமைச்சர்களாக இருப்பவர்கள் இன்னும் குறைவு. நாகாலாந்து, மிசோராம் மாநில சட்டசபைகளிலும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திலும் பெண் சட்டமன்ற உறுப்பினர்களே இல்லை. டெல்லி, உ.பி., தெலுங்கானா, பஞ்சாப் மாநிலங்களில் பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தாலும் அவர்களுக்கு அமைச்சர் பதவிகள் வழங்கப்படவில்லை. இத்தனைக்கும் பஞ்சாப் சட்டமன்றத்தில் 12 சதவீதமும், தெலுங்கானா, உ.பி., டெல்லி மாநிலங்களில் 10 சதவீதமும், பெண் சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தும், ஒருவருக்குக்கூட அமைச்சர் பதவி வழங்கப்படவில்லை. ஆம் ஆத்மி கட்சியில், போட்டியிட்டு 6 பெண்கள் வெற்றி பெற்றுள்ளனர். ஆனால் ஒருவர்கூட அமைச்சராக்கப்படவில்லை. "இந்த குறை எதிர்காலத்தில் சரி செய்யப்படும்" என்று ஆம் ஆத்மி கட்சி பொறுப்பாளர் கூறுகிறார்.

சில மாநிலங்கள் இதற்கு விதிவிலக்காகவும் உள்ளன. மேகலாயாவில் காங்கிரஸ் தலைமையிலான அய்க்கிய கூட்டணி ஆட்சி நடக்கிறது. இங்கே 4 பெண் எம்.எல்.ஏ.க்களில் 3 பெண்கள் அமைச்சர்களாக்கப்பட்டுள்ளனர். பா.ஜ.க. ஆட்சி நடத்தும் கோவாவிலும், காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடக்கும் கேரளாவிலும் ஒரே ஒரு பெண்தான் அமைச்சராக்கப்பட்டுள்ளார். அதிகாரமிக்க துறைகள் பெண் அமைச்சர்களுக்கு ஒதுக்கப்படுவதும் மிகவும் குறைவுதான். உள்துறை அமைச்சர்களாக 3 மாநிலங்களில் மட்டும் பெண்கள் இருக்கிறார்கள். பா.ஜ..க ஆட்சி நடக்கும் குஜராத்தின் முதல்வர் ஆனந்திபெண் பட்டேல், மேற்கு வங்கத்தின் முதல்வர் மம்தா பானர்ஜி, மேகாலயாவில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ரோஷன் வாஜ்ரி ஆகியோர் பெண் உள்துறை அமைச்சர்கள். இராஜஸ்தான் பா.ஜ.க. முதல்வர் பாசுந்தரா ராஜே மற்றும் உத்தரகாண்ட்டில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த இந்திரா ஹிரிதயேஷ் ஆகிய இரண்டு பெண்கள் மட்டும் நிதியமைச்சர்களாக இருக்கிறார்கள்.

பொதுவாக பெண்களுக்கு என்றே ஒதுக்கப்படும் துறை, பெண்கள் மற்றும் குழந்தைகள் நலத் துறை அல்லது சமூக நலத் துறை தான். இந்தியாவில் அரசியல் ஆண் ஆதிக்கப் பிடியில் தங்கி நிற்கிறது என்பதையே இந்த தகவல்கள் உறுதிப்படுத்துகின்றன. 'இந்து' ஆங்கில நாளேடு (பிப்.16) இந்த ஆய்வுகளை வெளியிட்டுள்ளது. பெண்களுக்கு 33 சதவீத இடஒதுக்கீடு தரும் சட்டம் பல ஆண்டுகளாகவே நாடாளுமன்றத்தில் முடக்கப்பட்டுக் கிடக்கிறது. ✦


"புரட்சிப் பெரியார் முழக்கம்"

ஆண்டுக்கட்டணம்

ரூ.200

தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

# “பலதார மணம்” அடிப்படை உரிமையாகுமா?

ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை திருமணம் செய்து கொள்ள (Poly gamy) இஸ்லாமிய மதச் சட்டம் அனுமதிக்கிறது என்பதால், அரசு ஊழியராக உள்ள முஸ்லிம் - இரண்டாவது திருமணம் செய்து கொள்ளலாமா? இப்படி ஒரு வழக்கு உச்சநீதிமன்றத்தின் விசாரணைக்கு வந்தது. உ.பி.யில் நீர்ப்பாசனத் துறையில் பணியாற்றும் குர்ஷித் அகமதுகான் என்ற அரசு ஊழியர் முதல் மனைவி சோபினா பேகம் இருக்கும்போதே, அஞ்சும்பேகம் என்ற பெண்ணை இரண்டாவது திருமணம் செய்து கொண்டார். இதைத் தொடர்ந்து முதல் மனைவியின் சகோதரி, தேசிய மனித உரிமை ஆணையத்தில் புகார் செய்தார். காவல்துறை விசாரணைக்கு ஆணையம் உத்தரவிட்டது. இரண்டாவது திருமணம் செய்தது உறுதியானதைத் தொடர்ந்து மாநில அரசு தலையிட்டு, அரசு ஊழியர் நன்னடத்தை விதியை மீறியதாக அவரை பதவி நீக்கம் செய்தது. இரண்டாவது திருமணம் செய்து கொள்ளும் ஒருவர், அரசு நன்னடத்தை விதியின் கீழ் அரசிடம் முன் அனுமதி பெற்றாக வேண்டும். வேலை நீக்கம் செய்யப்பட்ட குர்ஷித், அலகாபாத் உயர்நீதிமன்றத்தை நாடினார். இஸ்லாமிய மதத்தின் சட்டம் பலதார மணத்தை அங்கீகரிப்பதால், தனக்கு இரண்டாவது திருமணம் செய்வதற்கான உரிமை உண்டு என்பது இவரது வாதம். இதற்கு அரசியல் சட்டத்தின் 25ஆவது பிரிவு வழங்கும் மதச் சுதந்திர உரிமையை எடுத்துக்காட்டினார். உச்சநீதிமன்றம் இந்த வாதத்தை ஏற்கவில்லை. உச்சநீதிமன்ற நீதிபதிகள் டி.எஸ். தாக்கூர், ஏ.கே. கோயல் ஆகியோரடங்கிய அமர்வு தீர்ப்பில் இவ்வாறு தெளிவுபடுத்தியுள்ளது:

“அரசியல் சட்டத்தின் 25ஆவது பிரிவு - மதத்தைப் பின்பற்றவும் பரப்பவும் பாதுகாப்பை வழங்கியிருக்கிறது. அது மதத்தின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கைகளைப் பாதுகாப்பதற்கான உரிமையே தவிர, சுகாதாரம், ஒழுக்கம் போன்ற பொது ஒழுங்குகளுக்கு எதிரான நடவடிக்கைகளைச் செயல்படுத்துவதற்கான உரிமை அல்ல. பலதார மணம் என்ற முறை மதத்தோடு பின்னிப் பிணைந்திருப்பதும் அல்ல; ஒரு பெண்ணை மட்டுமே திருமணம் செய்யும் முறை அரசியல் சட்டம் 25ஆவது பிரிவுக்கு உட்பட்டு கொண்டுவரப்பட்ட சீர்திருத்தம்தான்” என்று நீதிபதிகள் குறிப்பிட்டுள்ளனர். பலதார மணம் - இஸ்லாமிய மதத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது என்பதாலேயே அதை பின்பற்றி வாழ்வதற்கு அனுமதித்து விட்டதாகக் கூற முடியாது. மதத்தின் மீதான பக்தி, நம்பிக்கை என்பது வேறு; அதை அப்படியே வாழ்க்கையில் நடைமுறைப்படுத்து வது வேறு; இரண்டுக்கும் இடையே கூர்மையான வேறுபாடு உண்டு.


எனவே உ.பி. அரசு நன்னடத்தை விதிகளின் கீழ் எடுத்த நடவடிக்கை சரியானதே என்று உச்சநீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது. அகில இந்திய முஸ்லிம் மதச் சட்ட வாரியம் இது குறித்து கருத்து தெரிவித்துள்ளது. உச்சநீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று கூறிய வாரியம், “இந்த உத்தரவு, பலதார மணத்தை தடுக்கவில்லை. அதே நேரத்தில், அதை அடிப்படை உரிமையாகக் கோர முடியாது என்றே கூறியிருக்கிறது” என்று கருத்து தெரிவித்துள்ளது. இஸ்லாமிய மார்க்க அறிஞர் சீனத் கவுக்கத் அலி, உச்சநீதிமன்ற உத்தரவை வரவேற்றுள்ளார். ‘பலதார மணத்தை’ பெண்களுக்கு எதிரான ஆயுதமாக மிரட்டும் போக்கை இந்த உத்தரவு கட்டுப்படுத்தும் என்று அவர் கூறுகிறார். தொழுகை நடத்துவதுபோல ‘பலதாரமணம்’ மதத்தின் முதன்மையான அம்சம் அல்ல” என்று வாரியத்தின் மூத்த வழக்கறிஞர் யூசுப் முச்சல்லா கருத்து கூறியுள்ளார்.

இதேபோல் கிறிஸ்தவ மதச் சட்டமான ‘கேனன்’ சட்டம் குறித்தும் ஒரு வழக்கு உச்சநீதி மன்றத்தில் அண்மையில் வந்தது. கிறிஸ்தவ மதச் சட்டத்தின் கீழ், திருமணம், திருமண முறிவுகள் நடக்கின்றன. இதற்கான அதிகாரம் ‘சர்ச்’சுகளுக்கு உள்ளது. இந்தச் சட்டத்தின்படி, ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்து கொள்ளும் ரோமன் கத்தோலிக்கர்களை தண்டிக்கும் அதிகாரம் இந்திய தண்டனை சட்டங்களுக்கு இல்லை என்று கர்நாடக ‘கத்தோலிக்க திருச்சபை’ முன்னாள் தலைவர் கிளாரன்ஸ் வைஸ் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். வழக்கை விசாரணைக்கு ஏற்ற நீதிபதி விக்ரம் சித்ஜென், சமூகப் பிரச்சினைகளில் மதத்தின் செல்வாக்கு அதிகரித்து வருவது கவலை தருகிறது. இந்தியாவில் எவ்வளவு காலம் வரை மதச்சார்பின்மை நீடிக்கப் போகிறதோ தெரியவில்லை என்று வியப்பு தெரிவித்தார். மதச் சட்டங்களின் ஆணைகளை சமூக மற்றும் குடும்ப வாழ்க்கைப் பிரச்சினைகளில் திணிக்கக் கூடாது என்றும் நீதிபதி கூறியுள்ளார். இஸ்லாம், கிறிஸ்தவ மதங்களின் இந்த கோரிக்கைகள் ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல!

இந்து மதச் சட்டமும் இது போன்ற நம்பிக்கைகளையே வாழ்க்கையில் திணிக்க முற்படுகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது. இப்போது பொது சிவில் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்ற கருத்து சங்பரி வாரங்களால் முன் வைக்கப்படுகிறது. சங்பரிவாரங்கள் கூறும் பொது சிவில் சட்டக் கோரிக்கை - மதச் சார்பின்மையில் நம்பிக்கையுள்ளவர்கள் கோரும் பொது சிவில் சட்டங்களிலிருந்து வேறுபட்டது என்பது கவனிக்கத்தக்கது. (பொது சிவில் சட்டம் குறித்த கட்டுரை இந்த இதழின் வேறு இடத்தில் வெளியிடப்பட்டிருக்கிறது)

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)




தங்களது வாழ்த்துகளை தெரிவித்தனர். (தோழர் மாங்காடு சேகர் இனிப்புகளுக்கு ஏற்பாடு செய்திருந்தார்) காவல் துறை நேரடியாகவும், மறைமுகமாகவும் காதலர்களை அச்சுறுத்தியதாலும் ஊடகங்கள், காமிராக்களில் படம் பிடிக்க முயன்றதாலும் மெரினா கடற்கரை பகுதிக்கு, காதலர்கள் வர தயங்கினர். இருப்பினும் இந்த அச்சுறுத்தலைக் கடந்துவந்த காதலர்களுக்கு கழக சார்பில் தோழர்கள் தங்கள் வாழ்த்துகளை தெரிவித்தனர். இந்நிகழ்வில் தலைமை செயற்குழு உறுப்பினர் தபசி. குமரன், சென்னை மாவட்டப் பொருப்பாளர்கள் பா. ஜான் மண்டேலா, ஏசு, ஆ. வேலு, அருள்தாசு, தட்சணாமூர்த்தி, பிரகாசு, மாரி, இராவணன் மற்றும் நாத்திகன், மருதமூர்த்தி, முழக்கம் உமாபதி, ஜெயந்தி, சாந்தி, காஞ்சிபுரம் தினேஷ், அருண், வழக்கறிஞர்கள் துரை அருண், திருமூர்த்தி, விழுப்புரம் அய்யனார் உள்பட ஏராளமான தோழர்கள் காதலர்களுக்கு இனிப்பு கொடுத்து வாழ்த்துகள் சொல்லும் போது காதலர்கள் முகமலர்ச்சியை நேரில் பார்க்க முடிந்தது.

---

## “ஏ.கே.70”

டெல்லியில் 70 இடங்களில் 67 இடங்களைக் கைப்பற்றி சாதனைப் படைத்திருக்கிறது ஆம் ஆத்மி கட்சி கெஜ்ரிவால் தலைமையிலான அமைச்சரவை பதவியேற்பு விழாவில் ராம் லீலா மைதானத்தில் கூடியிருந்த தொண்டர்கள் கையில் பிடித்திருந்த பதாகைகளில் ‘ஏ.கே.70’ என்று எழுதப்பட்டிருந்தன. ‘ஏ.கே.47’ துப்பாக்கியைப்போல் அரவிந்த் கெஜ்ரிவால் 70 இடங்களைப் பிடித்து, பா.ஜ.க. – காங்கிரசை வீழ்த்தியதை இப்படி குறியீடாக தொண்டர்கள் வெளிப்படுத்தினர். டெல்லி நகரத்தின் அடித்தள மக்கள் – ஜாதி, மத வேறுபாடுகளைக் கடந்து, அனைத்துப் பிரிவினரும் ‘ஆம் ஆத்மி’யை ஏற்றுக் கொண்டுள்ளனர். 2014 மே மாதம் நடந்த நாடாளுமன்ற தேர்தலில் 60 சட்டமன்ற தொகுதிகளில் முன்னிலை பெற்றிருந்த பா.ஜ.க., அதில் 57 தொகுதிகளை இப்போது பறி கொடுத்திருக்கிறது. காங்கிரசுக்கு ஒரு இடம்கூட கிடைக்கவில்லை. காங்கிரசுக்கான வாக்கு வங்கி தான் முழுமையாக ‘ஆம் ஆத்மி’க்கு திரும்பியிருக்கிறது என்று பா.ஜ.க. கூறும் சமாதானம் ஏற்கக்கூடியதாகஇல்லை. அந்த வாக்கு வங்கி, ஏன் பா.ஜ.க. பக்கம் திரும்பவில்லை என்ற கேள்வி எழத்தான் செய்யும். நாடாளுமன்றத் தேர்தலில் மோடி கூறிய வாக்குறுதிகள் காற்றில் பறந்து போய்விட்டன. எனவே மக்கள் இம்முறை பா.ஜ.க.வை புறந்தள்ளியிருக்கிறார்கள். ‘ஆம் ஆத்மி’ கட்சி எந்தத் தத்துவங்களுக்குள்ளும் தன்னை முடக்கிக் கொள்ளத் தயாராக இல்லை என்று கூறுகிறது. ஊழல் ஒழிப்பு; மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள்; ஆடம்பர அரசியலுக்கு முற்றுப்புள்ளி என்ற பிரச்சினை களையே முன்நிறுத்துகிறது. மிக மோசமாக சீரழிவுப் பாதை நோக்கி விரைந்து கொண்டிருக்கும் அரசியல் கலாச்சாரத்துக்கு இந்த கோரிக்கைகள் ஒரு சவால் என்றுதான் கூறவேண்டும். “நாங்கள் ஆட்சிக்கு வந்தால் ஊழலை ஒழிப்போம்” என்று மக்களிடம் பறைசாற்றக்கூடிய துணிவே இல்லாத நிலையில் கட்சிகள் ஊழல்களில் கரைந்து போய் கிடக்கின்றன. ஆடம்பரம்; பகட்டு; விலை கொடுத்து வாங்கும் விளம்பரம் என்று அரசியல் கட்சித் தலைவர்கள் – குறுநில மன்னர்களாக வலம் வந்து கொண்டிருக்கும் இந்திய ஜனநாயகத்தில் எளிமையாக வாழ்ந்துகாட்ட முயற்சிப்பதே ஓர் அதிசயம் தான். வெற்றி பெற்ற ஆணவத்தில் மிதக்க வேண்டாம் என்று கெஜ்ரிவால் தொண்டர்களுக்கு அறிவுறுத்தியிருக்கிறார். கடந்த நாடாளுமன்ற தேர்தலில் தனது கட்சியும் அந்த ஆணவத்தில் மூழ்கியிருந்ததை ஒப்புக் கொண்டிருப்பதோடு 49 நாள்கள் மாநில முதல்வராக இருந்து, மக்களின் கருத்து கேட்காமலே பதவி விலகியதற்கு தொகுதி தொகுதியாக சென்று மன்னிப்பும் கேட்டிருக்கிறார். நாடாளுமன்றத் தேர்தலில் தோல்விக்குப் பிறகு, ஒவ்வொரு பகுதிக்கும் சென்று மக்களோடு அக்கட்சி நடத்திய ‘நேரடி சந்திப்பு நிகழ்ச்சிகளே’ வெற்றிக்கான அடிப்படை என்று ஏடுகள் எழுதுகின்றன. இங்கே, தமிழ்நாட்டில் தேர்தல் காலங்களில் இரவோடு இரவாக மக்கள் சந்திப்புகள் ‘பணப்பட்டுவாடாவுக்காக’ மட்டும் நடக்கிறது. ‘இலை மறைவு காய்மறைவாக’ இருந்த ஓட்டுக்கு பணம் கொடுக்கும் ‘கலாச்சாரத்தை’ திட்டமிட்டு விரிவுபடுத்தி ஒழுங்குபடுத்தப்பட்ட முறையாக தி.மு.க. ஆட்சி காலத்தில் திருமங்கலத்தில் அரங்கேற்றப்பட்டது. அ.இ.அ.தி.மு.க. ஆட்சி அதை மேலும் விரிவுபடுத்தி செழுமைப்படுத்திக் கொண்டிருக்கிறது. 96 சதவீத வாக்காளர்கள் ஓட்டுக்கு பணம் வாங்க காத்திருக்கிறார்கள் என்று ஸ்ரீரங்கம் தொகுதியில் எடுக்கப்பட்ட ஒரு ஆய்வு தெரிவிக்கிறது. இப்படித்தான் தமிழ்நாட்டில் “ஜனநாயகம் பூத்துக் குலுங்கி”க் கொண்டிருக்கிறது.

தேனீர்க் கடையில் ‘டீ’ விற்ற தொழிலாளியாக தன்னை ஏழ்மையின் சின்னமாக அடையாளப்படுத்தி வாக்கு கேட்ட மோடி, ரூ.10 இலட்சம் செலவில் அய்ரோப்பாவில் தயாரிக்கப்பட்ட சிறப்பு ஆடைகளை அணிந்து கொண்டு, தனது ‘ரேஸ் கோர்ஸ்’ வீட்டிலிருந்து வெறும் 20 கி.மீட்டர் தொலைவில் உள்ள ‘கர்கர்டோமா’ என்ற பகுதிக்கு போவதற்குக்கூட விசேட ஹெலிகாப்டரில்தான் பறக்கிறார். தான் பயன்படுத்திய வாகனத்துக்கு ‘பெட்ரோல்’ என்ஜின் இருப்பதுகூட கூடுதல் செலவு என்று கருதி, ‘டீசல் என்ஜினாக’ மாற்றிக் கொண்டு 92 வயதிலும் பயணித்த தலைவர் பெரியாரை நினைத்துப் பார்க்கிறோம். இப்போது அத்தகைய தலைவர்களைப் பார்க்க முடியுமா? எப்படி இருந்தாலும், இலஞ்சமும் அதிகார முறைகேடுகளும் ஊழல் கொள்ளைகளும், எல்லை மீறிப் போய்க் கொண்டிருக்கும் இந்த ‘ஜனநாயகத்துக்கு’ புதிய நெருக்கடியை உருவாக்கக் கூடிய ஒரு அரசியல் கட்சி ‘ஆம் ஆத்மி’யாக களத்துக்கு வந்திருப்பதாகவே தெரிகிறது. இந்தக் கட்சி சாதிக்குமா? வாக்குறுதிகளை நிறைவேற்றுமா? என்பது குறித்து எந்த உறுதியும் நாம் கூற முடியாது. ஆனாலும், சீழ் பிடித்து நிற்கும் அரசியல் கலாச்சாரத்துக்கு ஒரு நெருக்கடியை உருவாக்கினாலே வெற்றிதான் என்ற கண்ணோட்டத்தில் ஆம் ஆத்மியை வரவேற்கத்தான் வேண்டும்.

DATE OF PUBLICATION 19.02.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# பொது சிவில் சட்டம்: சில வரலாற்றுத் தகவல்கள்

***அனைத்து மதத்தினருக்கும் பொதுவான சிவில் சட்டம் தேவை என்று சங்பரிவாரங்கள் மீண்டும் பேசத் தொடங்கியுள்ளன. பொது சிவில் சட்டம் குறித்த சில வரலாற்றுத் தகவல்கள்:***

ஆர்.எஸ்.எஸ். முன் வைக்கும் முக்கிய மூன்று விஷயங்களை, சங் பரிவாரங்கள் வழிமொழிந்து பிரச்சாரம் செய்வதும், பி.ஜே.பி. ஆட்சிக்கு வருகிற போதெல்லாம் அந்த பிரச்சாரம் தீவிரமடைவதையும் காணலாம். அவை 1) காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து தரும் அரசியல் சட்டப்பிரிவு 370 நீக்கப்பட வேண்டும். 2) பொது சிவில்சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். 3) பாபர் மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமர் கோயில் கட்டப்பட வேண்டும். இதன் மூலம் ஒரே மதம், மொழி, கலாச்சாரத்தைக் கொண்ட இந்து இராஷ்டிரத்தை உருவாக்க வேண்டும். இது அடிப்படையில் இந்தியாவின் பன்முகத் தன்மையை நிராகரித்து, இந்திய மக்களின் ஒற்றுமையை உடைக்கும் செயலாகும். வலதுசாரிகளான சங்பரி வாரங்களின் கனவு நிறைவேற இதுவரை இந்திய மக்கள் அனுமதிக்கவி ல்லை. ஆனால், தற்போது தனி மெஜாரிட்டியுடன் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்துள்ள நிலையில் தங்கள் நிகழ்ச்சி நிரலை வேகமாக முன்னெடுக்க முடியுமென்ற நம்பிக்கை துளிர்விட, ஒவ்வொரு விஷயமாக கையிலெடுக் கின்றனர். தற்போது பொது சிவில் சட்டத்தைக் கொண்டுவர வேண்டு மென்று பிரதமர் தொடங்கி அமைச்சர்கள் வரை பேச ஆரம்பித்துள்ளனர். மேலோட்டமாக பார்க்கும்போது வரவேற்க கூடியதாக இருக்கும் இந்த வாதம், உண்மையில் அதன் உள்ளடக்கத்தில் பல முரண்களையும், சிக்கல்களையும் கொண்ட தாகும்.

**பொது சிவில் சட்டம் என்பது என்ன?**

மொகலாயர் வருகைக்கு முன்பு இந்தியா பல துண்டுகளாக பிரிந்து மன்னர்களின் ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. மொழி, இனம், சாதி அடிப்படையில் பிளவுபட்டிருந்த இவர்கள், திருமணம், வாரிசு, விவாகரத்து, சொத்துரிமை, பாதுகாப்பு, பராமரிப்பு, தத்தெடுப்பு போன்ற விஷயங்களில் சாத்திர ரீதியான சம்பிரதாயங்களையும் சடங்குகளையும் பின்பற்றி வந்தனர். சில பொதுவான அம்சங்களோடு வேறுபட்ட அம்சங்களும் இருந்தன. குரான் அடிப்படை யிலான ஒழுக்க நெறிகளை தங்களுடன் கொண்டு வந்த மொகலாயர்கள் அதை கண்டிப்புடன் பின்பற்றினர். மொகலாயர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த 500 ஆண்டு காலத்தில், அதிகாரத்தின் அருகில் இருக்க வேண்டிய ஆசையும், இந்துக்கள் பின்பற்றிய தீண்டாமை என்கிற அம்சமும், இந்துக்கள் முசுலீமாக மாற காரணமாயிருந்தன.

இதனால் பரவலாக இரண்டு தனி நபர் ஒழுக்கவியல் நெறிகள் இந்தியர்கள் மத்தியில் பின்பற்றும் நிலை இருந்தது. அதிகாரத்தில் மட்டுமே அக்கறை கொண்ட மொகலாயர்கள் இந்துக் களின் நம்பிக்கை மீது அவ்வப் பொழுது தாக்குதல் தொடுத்தாலும், அரசுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் நிலைமைக்கு கொண்டு போன தில்லை. இந்து-முஸ்லீம் மத்தியில் ஏற்பட்ட சகிப்பின்மையைப் போக்கி சகோதரத்து வத்தைக் கொண்டுவரும் நோக்கத்துடன் கபீர், நானக் போன்றவர்கள் பிரச்சாரம் செய்தார்கள். இதைத் தொடர்ந்து உருவானதுதான் சூபி இயக்கம். பேரரசர் அக்பர் பல மதங்களில் உள்ள நல்ல அம்சங்களைக் கொண்ட ஒரு புதிய மதமாக தீன் இலாஹியை உருவாக்கினார். ஆனால், அவருக்குப் பின் அந்த மதம் மறைந்து போனது. பின்னர் இந்தியாவை 200 ஆண்டுகள் ஆண்ட பிரிட்டிஷார் மதச்சார்பற்ற தனிநபர் ஒழுக்கவியல் விதிகளை இந்தியாவில் அறிமுகப்படுத்தினர். எனினும், அவரவர்கள் தங்கள் மதம் சார்ந்த தனி நபர் ஒழுக்க சட்டங்களையே பின்பற்றி வந்தது மட்டுமல்ல, அதில் யாரும் குறுக்கிடவும் அனுமதிக்கவில்லை. எனினும், பிரிட்டிஷார் குற்றவியல் சட்டங்களை இந்தியர்கள் அனைவருக்கும் பொதுவானதாக அமுல்படுத் தினர். இது இந்து முசுலீம் தனிநபர் சட்டங்களுக்கு மாறாக இருப்பினும் பொதுவாக அனைவரும் ஏற்றுக் கொண்டனர். ஆனால், அதே சமயம் பிரிட்டிஷார் அவரவர்களின் தனிநபர் சட்டங்களில் குறுக்கீடு செய்ய வில்லை .காரணம், அதனால் ஏற்படும் குழப்பமும், கலவரமும் தங்கள் ஆட்சி தொடர்வதற்கு உதவாது என்பதனால் தேவை ஏற்படும்போது மட்டுமே தலையிட்டனர். எனினும், ஒரு பொதுவான சிவில் சட்டம் கொண்டு வருவதன் தேவையை உணர்ந்தனர். 1772லேயே ஹேஸ்டிங்க்ஸ் பிரபு திருமணம், வாரிசு, சாதி மற்றும் மத நிறுவனங்கள் தொடர்பாக ஒரு கருத்துரையை தயாரித்திருந்தார். அதன் அடிப்படையில் சில தனி நபர் சட்டங்கள் இயற்றப்பட்டன.

அக்பர் ஒழிக்க விரும்பிய சதி ஒழிப்புச் சட்டம் 1829இல் இராஜாராம் மோகன்ராயின் உதவியோடும், 1872இல் சிறப்பு திருமணச் சட்டம், 1925இல் இந்தியர் மரபுரிமைச் சட்டமும் நிறைவேற்றப்பட்டது. அனைத்து முசுலீம் இனத்தவர்க்கும் நாடு முழுவதும் ஒரே மாதிரியான குரான் அடிப்படை யிலான ஷரியத் சட்டம் அமுல்படுத்த வேண்டுமென்ற அவர்களின் கோரிக்கை அடிப்படையில் 1937இல் முசுலீம் தனிநபர் சட்டம் கொண்டுவரப்பட்டது. பின்னர் குழந்தை திருமண தடுப்புச் சட்டம் 1938லும், முசுலீம் திருமண இரத்து சட்டம் 1938லும் நிறைவேற்றப்பட்டது. தீவிர மத நம்பிக்கை உள்ளவர்களின் எதிர்ப்பு, சில சட்டங்களுக்கு கிளம்பினாலும் சட்ட அமுலாக்கத்தை அது தடுக்கவில்லை. பிரிட்டிஷார் ஆட்சியில் திருமணம் தொடர்பாக அவர்கள் கொண்டு வந்திருந்த சட்டங்களாவன. 1) இந்திய கிருத்துவ திருமண சட்டம் 1872. 2) ஆனந்த் திருமண சட்டம் (சீக்கியர்களுக்கு மட்டும்) 1909. 3) கொச்சி கிருஸ்துவர் சிவில் திருமண சட்டம் 1920 (திருவாங்கூர் மற்றும் கொச்சி பகுதியிலுள்ள கிருத்துவர்களுக்கு மட்டும்), 4) முசுலீம் தனி நபர் ஷரியத் சட்டம் 1937; 5) பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் 1937; 6) இந்துக்கள் தொடர்பான சிறப்பு திருமணம் சட்டம் 1872 ஆகும். குழந்தை திருமணம் தடுப்பு, இந்து பெண்களுக்கு விவாகரத்து உரிமை, பெண்களுக்கு ஓரளவு குறிப்பாக விதவை பெண்களுக்கு சொத்துரிமை போன்றவை இந்த சட்டங்கள் மூலம் கிடைத்த முன்னேற்றங்களாகும். ஒரு பொது சிவில் சட்டம் இந்தியரனைவருக்கும் கொண்டு வரும் நோக்கில் பி.என். ராவ் என்பவர் தலைமையில் ஒரு சட்டக் குழு பிரிட்டீஷாரால் அமைக்கப் பட்டது. இந்தக் குழு தயாரித்த அறிக்கையை 1948இல் மசோதாவாக தாக்கல் செய்ய வேண்டுமென்றிருந்த நிலையில் இந்தியா 1947இல் சுதந்திரம் பெற்றது. அதனால் தள்ளிவைக்கப்பட்டு பின்னர் கைவிடப்பட்டது.

(தொடரும்)

## வினாக்கள்... விடைகள்...!

- திருப்பதி 'வேத பல்கலை' வளாகத்தில் சிறுத்தை நடமாட்டம்; வேதம் படிப்போர் முகமூடி அணிய வனத்துறை வேண்டுகோள். **– செய்தி**

  'பூணூல்' போடாட்டாலும் பரவாயில்லை; ஓய்! முதலில் முகமூடியை போடுங்கோ! இப்ப அதுதான் முக்கியம்!

- காதலர் தினத்தை எதிர்த்து இந்து முன்னணியினர் நாய்க்கும் நாய்க்கும் திருமணம் செய்தனர். **– செய்தி**

  இந்த 'சூத்திரர்கள்' நாய்க்குத்தான் திருமணம் செய்ய முடியும்; 'மனுஷாளுக்கு' விவாகம் செய்யும் உரிமை 'அவாளுக்கு'த்தான்!

- டெல்லி தேர்தலில் 70 தொகுதிகளில் 3இல் மட்டுமே பா.ஜ.க. வெற்றி. **– செய்தி**

  அப்படின்னா, 'இராமனின்' பிள்ளைகளை டெல்லி மக்கள் 'வனவாசத்துக்கு' அனுப்பிட்டாங்கன்னு, சொல்லுங்க.

- குருவாயூர் கோயிலில் பின்பற்றவேண்டிய கடமைகளை 'பகவான்' கிருஷ்ணனிடம் அருள்வாக்காக கேட்டறிந்தார் சோதிடர் ராமன் நம்பூதிரி. **– செய்தி**

  இனி ராமன் நம்பூதிரி மட்டும்தான் தன்னிடம் பேச வேண்டும்; அந்த உரிமை வேறு யாருக்கும் இல்லை என்று 'கிருஷ்ணன்' கூறியிருப்பாரே!

- தமிழகத்தில் ஆட்சி அமைக்கும் தகுதியும், அரசியல் முதிர்ச்சியும் எங்களைத் தவிர வேறு எவருக்கும் கிடையாது. **– மருத்துவர் இராமதாசு**

  உண்மைதான்; உங்க அறிவு முதிர்ச்சிக்கு இந்த அறிவிப்பே சரியான சான்று!

- நாமக்கல் 'ஆஞ்சநேயரு'க்கு வேத புரோகிதர்கள் 1008 குடம் பால் அபிஷேகம். **– 'தினமணி' செய்தி**

  'ஆஞ்ச நேயர' இப்படி மூச்சுத் திணற வைக்குறதுல, 'இவாளுக்கு' அப்படி ஒரு மகிழ்ச்சியா?

- கோயில் வளாகங்களில் திருட்டை தடுக்க எச்சரிக்கை மணிகள். **– தமிழக அரசு உத்தரவு**


  அந்த மணிகள் ஒழுங்கா சக்தியோட வேலை செய்ய அதுகளுக்கும் அன்றாட அர்ச்சனைக்கு அப்படியே ஒரு உத்தரவு போட்டுடுங்க; அதுதான் பாதுகாப்பு.

- 2016 சட்டமன்றத் தேர்தலில் காங்கிரஸ் ஆதரவு இன்றி தமிழகத்தில் ஆட்சி அமைக்க முடியாது. **– ஈ.வெ.கி.எஸ். இளங்கோவன்**

  ஆட்சி அமைக்கும் கட்சிக்கு, உடனே ஆதரவு தெரிவிச்சுடுவீங்க போலிருக்கு! இதுவும் நல்லாத்தான் இருக்கு!

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 20th February 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | பிப்ரவரி 26, 2015 | புரட்சி 14 | முழக்கம் 7 | விலை: ரூ.3.00

# திராவிடர் இயக்க இலட்சியங்கள் இளைஞர்களிடையே பரவ வேண்டும்

## ‘இமயம்’ தொலைக்காட்சிக்கு கொளத்தூர் மணி பேட்டி

*“தனித் தமிழ்நாடு, ஜாதி ஒழிப்பு, சமூகநீதி, பகுத்தறிவு, பெண்ணுரிமை ஆகிய திராவிட இயக்க இலட்சியங்களை பாடங்களில் பதிவு செய்வதில்லை; ஊடகங்களும் இருட்டடிக்கின்றன; அதுவே இளைஞர்களிடையே கொள்கைகள் முழுமையாக சென்றடையவில்லை” என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி குறிப்பிட்டார். பிப். 7 அன்று, ‘இமயம்’ தொலைக்காட்சிக்கு ஊடகவியலாளர் ஜீவ சகாப்தனுக்கு அளித்த நேர்முகம்:*

ஊடகவியலாளர்: இன்றைய நேர்முகம் நிகழ்ச்சியில் உங்களுடைய இயக்க செயல்பாடுகள், அரசின் செயல்பாடுகளை நீங்கள் பார்க்கும் விதம், தமிழகத்தில் - தமிழ்ச் சமூகத்தில் இன்றைக்கு இருக்கும் நிர்பந்தங்கள் போன்ற பரவலான தளத்தில்தான் இன்றைய விவாதம் செல்லவிருக்கிறது. முதல் கேள்வியாக... ஈழம், தமிழ்த் தேசியம், ஜாதி ஒழிப்பு போன்ற தளங்களில் நீங்கள் இயங்கி வருகிறீர்கள்; சமீபத்தில் இலங்கை அதிபர் மாற்றம் குறித்து, அது ஒரு மாற்றமே இல்லை என்று சிலர் சொல்கிறார்கள்; அதை ஒரு நிகழ்வாகவே பார்க்கவில்லை என்று சிலர் சொல்கிறார்கள்; இராஜபக்சே என்கிற ஆளுமை மாறியதே ஒரு மிகப் பெரிய வெற்றி தான் என்றும் சிலர் சொல்கிறார்கள்; நீங்கள் அதை எப்படி பார்க்கின்றீர்கள்?

கொளத்தூர் மணி: இராஜபக்சே மாற்றப்பட்டிருக்கிறார் என்பது, மக்களுடைய அதிருப்தி அவர் மீது இருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிற அளவுக்கு மட்டும் அதை வெற்றியாக நான் பார்க்கின்றேன். மற்றபடி எந்த ஆட்சியாளர்கள் ஆட்சிக்கு வருவதாக இருந்தாலும், சிங்கள மக்களின் வாக்குகளை மட்டுமே வைத்து அவர்கள் வெற்றிபெற வேண்டும் என்ற நிர்பந்த சூழலில், அவர்கள் நிச்சயமாக சிங்கள மக்களுக்கான செயல் திட்டங்களை முன்னெடுத்தால் மட்டுமே, அடுத்த முறை ஆட்சிக்கு வரமுடியும்; இந்த முறை வேண்டுமானால் தமிழ் மக்களின் கூடுதலான வாக்குகளால் வென்றிருக்கலாம்; அடுத்து நடக்கப் போவதை எதிர்பார்த்து காலப்போக்கில் இவர் போக்கை மாற்றிக் கொள்வார் என்று தான் நான் எதிர்பார்க்கின்றேன். இரண்டாவதாக ஒருவேளை சீனாவோடு கூடுதல் நெருக்கமாக இருந்தவர் இராஜபக்சே என்பதை கருத்தில் கொண்டு அவருக்கு எதிரான முன்னெடுப்புகளை அய்.நா. மனித உரிமை ஆணையத்தில் அமெரிக்கா எடுத்தது. நாளைக்கு சீனாவிடமிருந்து இலங்கை விலகி வருகிறது என்று அறிந்தால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு எதிரான, இந்த போர்க் குற்ற விசாரணைக்கு இந்த அளவுக்கு அமெரிக்கா அழுத்தம் கொடுக்குமா என்பது எனக்கு அய்யமாகத்தான் இருக்கிறது. எனவே காலம் தான் அதைச் சொல்லவேண்டும். இப்போதைக்கு அதில் நான் பெரிய அளவில் மகிழ்ச்சி அடையவில்லை; இது ஒரு ஆட்சி



மாற்றம் அவ்வளவுதான், கொள்கை மாற்றம் இருக்காது என்றுதான் நான் நினைக்கின்றேன்.

ஊடகவியலாளர்: அவர் வந்த பிறகு 13 ஆவது சட்டத்திருத்தம் கண்டிப்பாக அமுல்படுத்தப்படும் என்று சொல்லியிருக்கிறார்; சிறுபான்மையினர் நலன் பாதுகாக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்; அதிபருக்கான அதிகாரம் படிப்படியாக குறைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்; ஜனநாயகத்தை நோக்கிய சிறு நகர்வாக இதை நாம் பார்க்கலாமா?

கொளத்தூர் மணி: 13 ஆவது சட்டத்திருத்தம் அவர்கள் வைத்திருக்கிறபடி முழுமையாக வந்தாலும் தமிழர்களுக்கு அதில் அதிகாரம் இல்லை என்பதுதான் உண்மை. காரணம், நிலம் குறித்த எந்த முடிவும் எடுப்பதற்கு அரசுக்கு அதிகாரம் இல்லை. காவல் துறை மத்திய அரசின் கையில்தான் இருக்கும் என்பதுதான் 13 ஆவது சட்டத் திருத்தம். காவல்துறையும் நிலத்தைப் பற்றி ஒருவருக்கு பட்டா அளிப்பதோ மாற்றுவதோ கூட முடியாது என்ற அதிகாரம் அற்ற நிலையில் 13 என்பது ஒரு பயனும் இல்லாததுதான். நம்முடைய நகராட்சிகளுக்கு உள்ள அதிகாரமாக வேண்டுமானால் எடுத்துக்கொள்ளலாமே தவிர, அது மாநில அரசுக்கான அதிகாரமாகக் கூட இல்லை என்பதுதான் உண்மை. ஏற்கனவே இராஜ்பக்சே, ‘தர்டீன் பிளஸ்’ (13+) என்றார்; தர்டீன் போதும் தர்டீன் பிளஸ் வேண்டாம் என்று இப்போது இந்தியா சொல்கிறது; இந்தியா எந்த அளவுக்கு இலங்கையை அனுமதிப்பார்கள் என்றும் தெரியவில்லை. பதிமூன்றே கொடுத்தாலும் 13 ஆவது சட்டத்திருத்தம் வந்தாலும், தமிழர்களுக்கு அவர்களின் உரிமைகளை பாதுகாக்கின்ற அளவிற்கான அதிகாரம் படைத்ததாக மாகாண கவுன்சில் நிச்சயம் இருக்காது.

ஊடகவியலாளர்: உங்கள் அடிப்படை கொள்கையிலிருந்து - நீங்கள் பேசியதிலிருந்து, தனி ஈழம் என்று ஒன்று அமையாதவரை அங்கு தமிழர்களை மனிதர்களாக பார்க்கின்ற ஒரு பார்வையோ, அவர்களும் ஒரு ஆளுமை என்று மதிக்கின்ற பார்வையோ அந்த அமைப்பிலே - இலங்கையின் சிஸ்டத்திலேயே இல்லை என்பது தெளிவாகிறது. ஈழப் பிரச்சனைகளுக்கு பிறகு போராடிய பல நாடுகள், பல மேற்கத்திய நாடுகள் தனி நாடு கோரிக்கையை அடைந்திருக்கிறார்கள். சூடான், கொசாவா போன்ற பல நாடுகள் வந்திருக்கிறது; இந்தியா கூட உதவியிருக்கிறது. உக்ரேனில் கூட வந்தது; பொது வாக்கெடுப்பு என்ற விசயம் கூட சமீபத்தில் ஸ்காட்லாந்தில் வந்தது. ஆனால் தமிழர் பிரச்சனையில் மட்டும்

(2 ஆம் பக்கம்)

## ‘இந்து தாழ்த்தப்பட்டவர்’: வரையறுத்தது யார்?

**ஊடகவியலாளர்:** அம்பேத்கர், இந்து தாழ்த்தப்பட்டவர்களுக்கு மட்டும் தான் 18 சதவீத இட ஒதுக்கீடு வாங்கிக் கொடுத்தார்; சட்டமன்றத்திலோ, நாடாளுமன்றத்திலோ இந்துக்கள் மட்டும் போட்டியிடக் கூடிய தொகுதி, தாழ்த்தப்பட்டவர்கள் தனித் தொகுதி தான். தாழ்த்தப்பட்டவர்கள் மதம் மாறிவிடக் கூடாது என்பதற்காகவே அம்பேத்கர் திட்டமிட்டே ரிசர்வ் தொகுதி கொடுத்திருக்கிறார் – இந்து எஸ்.சி என்று வரையறுத்துள்ளார். ஆனால் மதம் இல்லை என்று சொல்லும் இடதுசாரிகள், பெரியாரிஸ்டுகள் போன்றவர்கள் மத மாற்ற உரிமை என்ற பெயரில் கிறித்துவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் ஆதரவாக இருப்பார்கள். மதம் மாறக் கூடாது என்ற எங்கள் கருத்துதான் அம்பேத்கர் கருத்து; பெரியாரிஸ்டுகளும் இடதுசாரிகளும் மாற்றிப் பேசுகிறார்கள் என்று சொல்வதை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?

**கொளத்தூர் மணி:** இது தவறான பொய்யான செய்தி. அரசியல் சட்டம் எழுதப்பட்ட போது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பட்டியல் இருந்தது; பிற்படுத்தப்பட்டவர்களுக்கு பட்டியல் இல்லை. தாழ்த்தப்பட்ட – பழங்குடி மக்களுக்கான பட்டியல் 1935 ஆம் ஆண்டு சட்டத்திலேயே வந்துவிட்டது. அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ப அவர்களின் உரிமையை வழங்கவேண்டும் என்று மட்டும்தான் எழுதப்பட்டிருக்கிறதே தவிர, இந்து தாழ்த்தப்பட்டவர்கள் என்று 1950 ஜனவரி 26 இல் நடைமுறைக்கு வந்தபோது அரசியல் சட்டத்தில் இல்லை. 1950 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் குடிஅரசுத் தலைவர் வெளியிட்ட ஒரு அறிவிக்கையில் (நோட்டிபிகேசனில்) தான், இவ்வொதுக்கீடு இந்துக்கள் தவிர மற்றவர்களுக்குப் பொருந்தாது என்று அறிவிக்கப்பட்டது. அப்படிப்பட்ட அறிவிக்கையை வெளியிட்டவர் ஒரு இந்துத்துவாவாதியான இராஜேந்திரபிரசாத். அவர் வெளியிட்ட அறிவிக்கையால் வந்ததுதானே தவிர அரசியல் சட்டத்தில் அப்படி ஒரு சொல்லே இல்லை; அப்படி பேசுபவர்கள் அரசியல் சட்டத்தை நன்றாக படிக்கவேண்டும் என நான் விரும்புகின்றேன். **பேட்டியில் கொளத்தூர் மணி**

**தலையங்கம்**

## ‘கோட்சே’யின் குண்டுகள் ஓய்ந்திடவில்லை!

மகாராஷ்டிராவில் பார்ப்பன மதவெறியின் குண்டுக்கு மற்றொரு போராளி பலியாகிவிட்டார். 83 வயதான மூத்த பொதுவுடைமைத் தோழர் பன்சாரா, தனது துணைவியார் உமாவுடன் கடந்த பிப்.16 அன்று காலை நடைப்பயிற்சியை முடித்துக் கெண்டு இல்லத்துக்குள் நுழைய இருந்த நேரத்தில் இரு சக்கர வாகனங்களில் வந்த இரு நபர்கள் துப்பாக்கியால் சுட்டனர். பன்சாராவின் உடலுக்குள் 3 குண்டுகள் பாய்ந்தன. மருத்துவமனையில் கடந்த பிப்.20ஆம் தேதி இந்த முதுபெரும் போராளி வீர மரணத்தை தழுவினார். தலையில் குண்டு பாய்ந்த அவரது துணைவியார் தீவிர சிகிச்சையில் உயிருக்குப் போராடி வருகிறார். சங்பரிவாரங்களின் வரலாற்றுப் புரட்டுகளை தொடர்ந்து அம்பலப்படுத்தி வந்தவர் பன்சாரே. மராட்டிய வீரன் சிவாஜியை இந்துமத வெறி அடையாளத்துக்குள் திணித்துக் கொண்டிருக்கும் சங்பரிவாரங்களை அம்பலப்படுத்தி ஏழை எளிய மக்களின் நலனை நேசித்தவனே சிவாஜி என்று விளக்கி ‘சிவாஜி கோன் சோட்டா?’(யார் இந்த சிவாஜி?) நூலை எழுதியவர்.

(அன்றைக்கு திராவிடர் இயக்கம்கூட சிவாஜியை இதே கண்ணோட்டத்தில் தான் அணுகியது. அறிஞர் அண்ணா எழுதி அவரே ‘காகபட்டர்’ வேடம் ஏற்று நடித்ததுதான் “சிவாஜி கண்ட இந்து சாம்ராஜ்யம்” நாடகம், பார்ப்பனர்கள் சிவாஜியின் அரசை சீரழித்த வரலாற்றைப் படம் பிடித்தது.)

மராட்டியப் பார்ப்பனர் கோட்சேவுக்கு சிலை வைக்க பார்ப்பனப் பரிவாரங்கள் ஆணவத்தோடு கிளம்பியதை எதிர்த்து சிவாஜி பல்கலையில் கண்டனக் குரல் கொடுத்தார் பன்சாரே. அப்போதே பார்ப்பனக் கூட்டம் ஒன்று கூட்டத்திலே எதிர்ப்பு தெரிவித்தது. கோலாப்பூரில் பல இலட்சம் செலவில் உணவுப் பொருள்களையும் நெய்யையும் தீயில் கொட்டி பார்ப்பனர்கள் நடத்திய யாகத்தை எதிர்த்து மக்களை திரட்டி போராடினார். ‘விவேக் ஜக்குதி’ என்ற பெயரில் அறிவுப் பயணம் எனும் பரப்புரை இயக்கத்தை நடத்தி மூடநம்பிக்கைகளுக்கு எதிராக பகுத்தறிவு கருத்துகளைப் பரப்பினார். கோலாப்பூரில் நெடுஞ்சாலை சுங்கக் கட்டணக் கொள்ளையை எதிர்த்துப் போராடினார்; தொழிற் சங்கப் போராட்டங்களை முன்னெடுத்தார்.

மூடநம்பிக்கையை எதிர்த்து அறிவியக்கம் நடத்திய மருத்துவர் நரேந்திர தபோல்கர் 2013 ஆம் ஆண்டில் நடைப் பயிற்சியின்போது இதேபோல் பம்பாயில் சுட்டுக் கொல்லப்பட்டார். பகுத்தறிவுப் பிரச்சாரத் தோடு ஜாதி, தீண்டாமைக் கொடுமைகள், ஜாதி பஞ்சாயத்துகளுக்கும் எதிராக போராடிய போராளி அவர். இன்றும் அவரது கொலையின் மர்ம முடிச்சு அவிழ்க்கப்படவில்லை. கொலையாளி ஒருவன்கூட இதுவரை கைது செய்யப்படவில்லை. தபேல்காரை பார்ப்பனிய மதவெறி வீழ்த்தினாலும் அவரது துணைவியார் ஷைலா, மனநல மருத்துவரான அவரது மகன் ஹமீத், தபோல்கரின் மகள், மருமகன் என்று அவரது குடும்பமே தந்தை விட்டுச் சென்ற பகுத்தறிவு இயக்கத்தை தீவிரமாக முன்னெடுத்து வருகிறார்கள்.

காந்தியின் மார்பை நோக்கி நீண்ட, பார்ப்பன கோட்சேக்களின் துப்பாக்கிகளிலிருந்து புறப்பட்ட குண்டுகள், இப்போதும் வெடித்துக் கொண்டேதான் இருக்கின்றன. மீண்டும் ‘இராம ராஜ்யம்’ அமையப் போகிறது; ‘மனுசாஸ்திரம்’ சட்டமாகப் போகிறது என்ற நம்பிக்கையோடு வரலாற்றில் தாங்கள் இழந்த ‘பேஷ்வாக்கள்’ ஆட்சியை மீண்டும் அமைக்கத் துடிக் கிறார்கள். அந்த வெறிதான் தொழிலாளர்களுக்கும் மதவாதத்துக்கும் எதிராகவும் போராடிய 83 வயது முதியவரையும் நெஞ்சில் ஈரமின்றி இப்போது பிணமாக்கியிருக்கிறது.

பார்ப்பனிய கொடுங்கோன்மைக்கு எதிரான களம் சூடேற்றப்பட வேண்டும். அதில் எந்த தியாகத்துக்கும் தயாராக உள்ள இளைஞர்களின் பெரும்படை முரசு கொட்டிப் புறப்பட்டாக வேண்டும் – இது வரலாறு விடுக்கும் அறைகூவல். வீரமரணமடைந்த இந்த போராளிகள் சிந்திய இரத்தத்தில் பார்ப்பனிய மதவாத எதிர்ப்பாளர் ஒவ்வொருவரும் ஏற்க வேண்டிய உறுதி இதுவாகவே இருக்க முடியும்!

இலட்சியப் போராளிகளுக்கு நமது வீரவணக்கம்.

# வெளியுறவு கொள்கைகளை வகுப்பது யார்?

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சனை துவங்கிய காலம் முதல் தற்போது வரை எந்த நகர்வுமே இல்லாமல் இருப்ப தற்கான காரணம் என்ன? க்ளோபலைசேசன் வந்தது; புரட்சிகள், இடதுசாரி சிந்தனைகள் என்று எவ்வளவோ உலக அளவில் பேசப் பட்டாலும் கூட மற்ற தேசிய இனங்களுக்கு கிடைத்தது ஏன் தமிழர்களின் கோரிக்கை களுக்கு எடுபடாமல் போனது?

*கொளத்தூர் மணி:* காரணம், இந்தியாவின் முகத்தைத் தான் அண்டை நாடுகள் அனைத் தும் பார்க்கின்றன. உலக நாடுகளின் அனைத்து அரசுகளையும் இயக்குவது முதலாளிகள் தான்; ஆக ஒரு பெரிய பரந்த - விரிந்த சந்தையுள்ள இந்தியாவோடு பகைத்துக் கொள்ள எந்த அரசும் - நாடும் விரும்பாது. இந்தியா தனது கருத்தை, ஈழத்திற்கு ஆதரவானதாக மாற்றிக் கொள்கிறவரை உலக நாடுகள் இந்தப் போக்கைதான் கடைபிடிக்கும் என்பது எனது கருத்து. நீங்கள் ஏற்கனவே சொன்ன நாடுகள் அனைத்துமே எந்த நாட்டின் எதிர்ப்பும் இல்லாமல் இருந்தது. அல்லது எதிர்க்கின்ற நாடுகள் அமெரிக்கா போன்ற வல்லரசுகளுக்கு ஏற்கனவே எதிரிகளாக இருந்தவர்கள்; அவர்கள் எதிர்ப்பை பற்றி அமெரிக்காவுக்குக் கவலை இல்லை. ஆனால் நட்போடு இருக்கின்ற இந்தியாவை பகைத்துக்கொண்டு, பொது வாக்கெடுப்புக்கான அழுத்தத்தை போதிய அளவில் உலக நாடுகள் கொடுக்கும் என்று நான் எதிர்பார்க்கவில்லை. ஒருவேளை உலக அரசியல் சூழல் மாறுமேயானால் அதற்கான வாய்ப்பு வரலாம். ஆனாலும் தொடர்ந்து அதை நோக்கி குரல் எழுப்புபவர்களாக- அதை நோக்கி அழுத்தம் கொடுப்பவர்களாக நாம் இருக்க வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

**வெளியுறவு கொள்கைகளை வகுப்பது யார்?**

*ஊடகவியலாளர்:* தமிழர்களுக்கு எதிராக சிங்கள பேரினவாதம் மட்டுமல்ல; இந்திய வல்லாதிக்கமே தமிழர்களின் விடுதலைக்கு எதிராக இருக்கிறது என்ற முக்கியமான கருத்தை பதிவு செய்திருக்கின்றீர்கள். ஏன் இப்படி ஒரு மனநிலை இந்தியாவிற்கு இருக்கின்றது?

*கொளத்தூர் மணி:*இந்தியாவைப் பொறுத்தவரை வெளியுறவுக் கொள்கைகளை வகுப்பது, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதநிதிகள் அல்ல என்ற நிலை வந்து நீண்ட காலம் ஆகிவிட்டது. பிரதமராக இருந்த இந்திரா காந்தி மறைந்து இராஜீவ் ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்து இதுவரை வெளியுறவுக் கொள்கைகளை முடிவு செய்பவர்கள் சம்பளம் பெறுகின்ற - அரசு அதிகாரிகளாக இருக்கின்ற - வெளியுறவுத்துறை அதிகாரிகள் தான். ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை ஆட்சிக்கு வந்த தலைவர்களே அரசியல் முடிவுகள் எடுக்கின்றார்கள். அவர்கள் நிச்சயமாக மக்களுக்காவது பதில் சொல்ல வேண்டியவர்களாக இருக்கின்றார்கள் அல்லது தேர்தலின் போதாவது நிச்சயம் விமர்சனங்களுக்கு ஆளாக வேண்டியவர் களாக இருக்கின்றார்கள். எனவே அவர்கள் கூடுதல் பொறுப்புணர்வோடு இருப்பார்கள். ஆனால் இந்தியாவில் வெளியுறவுத்துறை அதிகாரிகள் மட்டுமே முடிவெடுக்கக் கூடிய நிலை வந்த பின்னால் தான் இந்த கேடு வந்ததாகக் கருதுகின்றேன். அந்தத் துறையில் இருக்கும் அதிகாரிகளின் மனப்பாங்கு வெளி யுறவுக் கொள்கை மீது பிரதிபலிக்கின்றது என்பது தான் என்னுடைய கருத்து. அது மாற்றப்படாத வரை இது நீடிக்கும் என்றே நான் நம்புகின்றேன்.

*ஊடகவியலாளர்:* நேரடியாக பி.ஜே.பியோடு பல்வேறு விசயங்களில் ஒத்துப் போனாலும், இந்து மக்கள் கட்சி போன்ற இங்குள்ள சில இந்து அமைப்புகள் நாங்கள் ஈழத்தை ஆதரிக்கின்றோம் என்கிறார்கள். இந்து நாடு என்ற அடிப்படையில் ஆதரிக்கின்றோம்; இதைப் புரிய வைப்பதற்காக வாஜ்பாய், அத்வானி, மோடி போன்றவர்களிடம் பேசிக் கொண்டு இருக்கிறோம் என்கிறார்கள். நடைமுறையில் இதை செய்வார்களா? தமிழக அரசியல் சூழலால் சொல்கிறார்கள் என்பது வேறு விசயம். ஆனால் அது ஒரு இந்து நாடு என்ற அடிப்படையில், இந்துத்துவா அஜண்டா உள்ள பி.ஜே.பி இதற்கான முயற்சி எடுக்கலாமே! அவர்களும் முழுக்க முழுக்க ஈழத்திற்கு எதிராகவும் சிங்கள பேரினவாதத்திற்கு ஆதரவாகவுமே தொடர்ந்து அவர்களின் செயல்பாடுகள் இருக்கின்றது; இதை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?

*கொளத்தூர் மணி:* இதுவரை இங்குள்ள நடைபாதை கோயிலை அகற்றினால் கூட இங்கு இருக்கின்ற இந்து முன்னணி போராடும். உதாரணமாக சேலம் கல்லூரி அருகே நடைபாதையில் உள்ள கோவில்களை அகற்றக்கூடாது என்பதற்காக கல்லூரி நிலத்தை உள்ளே தள்ளி கல்லூரியின் நிலத்தில் கோவிலை அமைத்திருக்கிறார்கள். பள்ளித் தளம் அனைத்தும் கோயில் செய்வோம் என்று பாரதியார் சொன்னதை இப்படி புரிந்து கொண்டு கல்லூரி நிலத்தை கோவில் தளமாக மாற்றிவிட்டார்கள். ஆனால் ஈழத்தில் ஆயிரக் கணக்கான இந்து கோவில்கள் அகற்றப்பட்டு விட்டன; இடிக்கப்பட்டு வருகின்றன; அது குறித்து எந்த ஒரு சிறு நிகழ்வையும்’ போராட் டத்தையும் தமிழ்நாட்டில் உள்ள இந்து அமைப்புகள் செய்யவில்லை என்றால் அதற் குள்ளும் அரசியல் இருக்கின்றது. மேலேயுள்ள தலைவர்கள் அதாவது பி.ஜே.பி.யில் அல்ல ஆர்.எஸ்.எஸ்.இல் மேலேயுள்ள தலைவர்கள் தலை அசைக்கவேண்டும்; இல்லாவிட்டால் நடக்காது. ஆர்.எஸ்.எஸ் இதற்கு உடன்பட்டு வரவில்லை என்று தான் நான் கருதுகின்றேன்.

*ஊடகவியலாளர்:* முகலாயர்கள் கோவில்களை இடித்துவிட்டார்கள் என்ற மிகப்பெரும் பரப்புரையை இந்தியா முழுவதும் ஆர்.எஸ்.எஸ் - இந்துத்துவா அமைப்புகள் செய்கின்றன. ஆனால் அவ்வளவு பெரிய கோயில்கள் ஈழத்தில் இடிக்கப்பட்டபோது, இவர்களுக்கு உண்மையில் இந்துக்கள் மீது பாசம் இருக்குமேயானால் அதற்கான நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும் தானே !

*கொளத்தூர் மணி:*நிச்சயமாக வந்திருக்க வேண்டும். ஏனென்றால் சிங்களர்கள் விநாயகரை கடலில் தூக்கிப் போட்டுவிட்டு, விநாயகர் குளிக்க சென்றுள்ளதாக அறிவிப்புப் பலகை வைத்தார்கள்; அப்போது இவர்களுக்குக் கோபம் வந்திருக்கவேண்டும். அனைத்து இந்து கோவில்கள் மீதும் குண்டு வீசியிருக்கிறார்கள்; அதற்கான எதிர்வினை இங்கு எதுவுமே இல்லை. சிறு சிறு செய்திகளுக்கு கூட போராடுகின்ற இவர்கள் அதற்காக எந்த போராட்டத்தையும் எடுக்கவுமில்லை, அதற்காக எந்தக் குரலையும் எழுப்பவுமில்லை என்பது, இவர்கள் தங்களுக்குச் சாதகமாக ஏதேனும் இருந்தால் போராடுவார்கள்; இந்து மக்கள் மத்தியில் ஏதேனும் சிக்கலை உண்டாக்கி தங்கள் மேலாண்மையை நிலை நிறுத்திக் கொள்ள முயல்கிறார்களே தவிர, உண்மையில் அவர்கள் கொண்டிருக்கிற கொள்கைக்காக கூட அவர்கள் பேசவில்லை என்பது தான் இங்குள்ள நிலவரம்.

*ஊடகவியலாளர்:* இந்து மக்கள் மீதான பாசம் என்பது உண்மை அல்ல என்கிறீர்கள் !

*கொளத்தூர் மணி:*ஆமாம் அதைத் தானே இப்போது பார்க்கின்றோம். எதுவுமே செய்யவில்லையே !

*ஊடகவியலாளர்:* இராஜபக்சே தோற்றதற்குப் பிறகு, தமிழக பா.ஜ.க பிரமுகர் ஒருவர் சின்ன கமெண்ட் ஒன்று அடித்தார்; அது உங்களைப் போன்ற ஈழ உணர்வாளர்களை வைத்துதான். இனிமேல் இராஜபக்சே எதிர்ப்பு ஈழம் என்று பேசியவர் களெல்லாம் கடையை மூடிவிட வேண்டியது தான்; ஏனென்றால் அங்கு அதிபர் மாற்றம் வந்துவிட்டது, எனவே பாவம் இவர்கள் அதை

(3 ஆம் பக்கம்)

# முதன்மை எதிரி இந்திய தேசியமா? அண்டை தேசியமா?

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

வைத்து அரசியல் நடத்த முடியாது என்று கமெண்ட் அடித்திருந்தார். இதற்குத் தங்களின் பதில் என்ன?

**கொளத்தூர் மணி:** தமிழ்நாட்டில் நிலவுகிற கட்சிகளெல்லாம் ஈழச் சிக்கலுக்கு முன்பு இல்லை என்பதைப் போல பேசுகிறார்கள். எப்போதும் தமிழ்நாட்டில் உள்ள சிக்கல்களுக்கு அல்லது இந்திய பேரரசோடு முகம் கொடுக்க வேண்டிய தேவைகளுக்குதான் இங்கு கட்சிகள் நடந்து கொண்டிருக்கின்றன. அரசியல் கட்சிகள் கூட ஒரு காலத்தில் அந்த சிந்தனையோடு இருந்தவர்கள் தான்; இப்போது வேண்டுமானால் மாறியிருக்கலாம். ஆனால் ஈழ பிரச்சனையைப் பொறுத்தவரை இராஜபக்சேவுக்காக மட்டும் யாரும் பேசவில்லை. அந்த நாட்டு மக்களுக்கு தனி ஈழம் என்ற ஒரு நாடு வேண்டும் என்பதும், இன்னும் எங்களைப் போன்ற இந்தியாவில் இருந்து தமிழ்நாடு பிரிந்து வரவேண்டும் என்ற கருத்துள்ளவர்கள் கூட அவ்வாறான ஒரு போராட்டம் இன்னொரு பகுதியில் நடக்கின்றதே என்ற மகிழ்ச்சியோடுதான் அதற்கு ஆதரவாக இருந்தோம்; அது தொடரத்தான் செய்யும். பொது வாக்கெடுப்பு நடத்தக் கோரியோ அல்லது குற்றமிழைத்தவர்களைத் தண்டிப்பதற்காகவோ ஏதேனும் ஒரு வகையில் தொடர்ந்து இயக்கம் எடுக்க வேண்டிய தேவை இருக்கின்றது. அவர் ஜனாதிபதியாக இருக்கக் கூடாது என்பதற்காக மட்டும் நாம் போராடவில்லை. ஒருவேளை இந்த இராஜபக்சே தோற்று போய் விடக் கூடாது என்று எங்களுக்கு ஒரு எண்ணம் இருந்தது; தோற்றுப் போய் விட்டாலே 'அப்பா' என்று பெரும்மூச்சு விட்டுவிட்டு போராடுகின்ற ஈழத் தமிழர்கள் கூட அமைதியாக இருந்து விடுவார்களோ என்று நினைத்தோம். ஆனால் அவர்கள் அவ்வளவு எளிதாக ஏமாற மாட்டார்கள் என்று தெரியும்; இருந்தாலும் சிறு மனநிலை மாற்றம் வந்துவிடுமோ என்று அஞ்சினோம்; அப்படி வரவில்லை. அதேபோல தமிழ்நாட்டைப் பொறுத்தவரை பெரும்பாலும் ஈழத்துக்காக என்பது, ஒரு அடக்கப்படுகின்ற ஒடுக்கப்படுகின்ற தேசிய இனத்திற்கு ஆதரவாக, ஒடுக்குகின்ற தேசிய இனத்திற்கு எதிராக போராடியவர்கள் தான். அது ஈழத்திலும் இருக்கும், இந்தியாவிலும் நடக்கும். தொடர்ந்து நாங்கள் இயங்கி கொண்டுதான் இருக்கப் போகின்றோம். அது அவர்களுக்குள்ள புரியாத தன்மை என்றும் சொல்லலாம் அல்லது எதை வேண்டுமானாலும் பேசலாம் என்கின்ற ஆணவம் என்றும் சொல்லலாம்; அது தான் அந்தப் பேச்சுக்கான காரணமாக நான் கருதுகிறேன்.

**ஊடகவியலாளர்:** பிரபாகரன், பெரியார் என்ற இருவரையும் இளைஞர்களுக்கு முன்மாதிரியாக காண்பித்து இயக்கம் நடத்துகின்ற அமைப்புகளில் நீங்கள் ஒரு பிரதானமான அமைப்பாக இருக்கிறீர்கள். இங்கு பெரியாரை ஏற்றுக் கொள்ளாதவர்கள்கூட பிரபாகரனை ஏற்றுக் கொள்கிறார்கள்; ஒரு ஹீரோவாக, வீரத்தின் அடையாளமாக, இனத்தின் விடுதலைக்காகப் போராடிய தலைவராக பக்கத்து மண்ணில் பிறந்த பிரபாகரன் பற்றி இங்குள்ள தமிழ் மக்களிடம் போய் சேர்ந்த அளவிற்கு, இந்த மண்ணில் தமிழர்களின் பல்வேறு விசயங்களுக்காக போராடிய பெரியாரை நமது தலைவர் என்று முழுமையாக கருதுகிற அளவிற்கு உணர்ச்சி வசப்படக்கூடிய நிலை ஏன் ஏற்படவில்லை?

**கொளத்தூர் மணி:** இரண்டையும் அச்சொட்டாக நாம் ஒப்பிட்டு பார்த்து விட முடியாது. அது இரண்டு தேசிய இனங்கள் மட்டுமே உள்ள ஒரு நாடு; அடக்கப்படுகின்ற தேசிய இனமும் ஒடுக்கிற தேசிய இனமும் வெளிப்படையாக தெரிகின்ற நாடு. ஆனால் இங்கு தமிழ் நாட்டைப் பொறுத்தவரை நம்மை ஒடுக்கிறவர்கள் யார் என்பதே தெரியவில்லை. இங்கு பிரதான எதிரி யார் ? நட்பு முரண் எது? பகை முரண் எது ? என்பது கூட வெளிப்படையாக தெரியாமல் இருக்கின்றது. இந்திய தேசியத்திற்கு எதிராக பேசுவதை விட அண்டை தேசிய இனங்கள் மீது பாய்கின்ற போக்கைத்தான் இங்கு அதிகமாக பார்க்கின்றோம். அது ஏதோ பாசிசம் போல இனத்தூய்மை - இனவாதம் பேசுகின்ற நிலைக்குக்கூடப் போய்விடுகிறது. ஆக இங்கு வெளிப்படையாக யார் ஒடுக்குகின்றார்கள் என்பது தெரியவில்லை. மொழி அடிப்படையில் பார்த்தாலும் இந்தி பேசுபவர்கள் ஒடுக்கிறார்கள் என்றும் சொல்லி விட முடியாது. தொடக்கத்தில் குஜராத்தியர்களாக இருக்கக்கூடிய, ராஜஸ்தானை சார்ந்த மார்வாடிகள், இவர்களின் நலன் மீதுதான் இந்திய தேசியம் எழுப்பப்பட்டது, கட்டப்பட்டது என்பது எல்லோரும் அறிந்தது தான். பரந்த சந்தை வேண்டும் என்று விரும்புகின்ற இந்த நாட்டின் பெரும் வணிகர்கள் தொடர்ந்து இந்திய தேசியத்தைப் பாதுகாக்கின்றார்கள். தங்கெளுக்கென்று நாடே இல்லாத பார்ப்பனர்கள் இந்திய தேசியம் என்று பேசுகிறார்கள். இந்த இரண்டிற்கும் எதிரான போக்குதான் நம்முடைய விடுதலைக்காக இருக்குமே தவிர, அப்படியே அச்சொட்டாக ஈழத்தில் நடப்பதைப் போல் இங்கு நடக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. அதே போல அங்கிருந்த இராணுவம், அங்கிருந்த உளவுத் துறை, அதனுடைய அளவு ஆற்றல், அதோடு ஒப்பிடுகின்றபோது இங்கு வேறு மாதிரி இருக்கின்றது. எனவே அதே போன்ற போராட்டத்தை இங்கு எடுத்துச் செல்வதற்கான வாய்ப்புக் குறைவாக இருந்தது. இன்னொன்று தமிழ்நாட்டில் தொடக்கக் காலத்திலிருந்து பெரியாரைப் பொறுத்தவரை இந்திய விடுதலைப் போராட்டத்தில் இருந்து இது பார்ப்பனர்கள் தங்களுடைய ஆதிக்கத்தை மீண்டும் மீட்டுக் கொள்வதற்கான முயற்சியாகத்தான் இந்திய விடுதலைப் போராட்டத்தைப் பார்த்தார். பெரியாரும் அம்பேத்கரும் மட்டும் தான் வேறுபட்டப் பார்வையைக் கொண்டவர்களாக இருந்தார்கள். அதுவே பல பேருக்குப் புரியவில்லை. அதையே பலபேர் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே இங்கு பல்வேறு சிக்கல்களுக்கு - செய்திகளுக்கு நாம் விளக்கம் கொடுக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். அத்தனைப் பேரையும் புரியவைத்து, சரி செய்து முன்னேறுவதற்கு அதை புரிந்து கொள்ளக் கூடிய அளவிற்கு கூட இங்குள்ளவர்களின் மனநிலை இல்லை.

(4 ஆம் பக்கம்)

## பேசுவது அவர்கள்; செயல்படுத்துவது பெரியார் தொண்டர்கள்

**ஊடகவியலாளர்:** திராவிடர் இயக்கம் என்பது தமிழக வரலாற்றில் எதிரிகளாலும் தொடர்ந்து பேசப்படுகிறது; அது நல்லவிதமாகவோ எதிர்மறையாகவோ. எந்த தமிழுக்காக தமிழ் இனத்திற்காக திராவிடர் இயக்கம் பாடுபட்டது என்று சொல்கிறீர்களோ அதே தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் திராவிடர் இயக்கம்தான் துரோகம் செய்தது என்று சமீப காலமாக திராவிடர் இயக்கங்கள் குறித்து வருகின்ற விமர்சனங்களை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?

**கொளத்தூர் மணி:** பலரும் பலவிதமாக பேசுகிறார்கள். ஒருவேளை, ஒரு சாதாரண ஆளோடு சண்டை போடுவதை விட, இந்த பயில்வானோடு மோதினேன் என்றால் பெருமையாக இருக்குமே என்று கருதிக் கொண்டு, தாங்கள் தலைவராக உயர வேண்டும் என்ற அவசர ஆசையில் செய்கிறார்களோ என்னவோ தெரியவில்லை. ஆனால் பொருளில்லாத வாதங்களை முன் வைக்கிறார்கள் என்பதுதான் என்னுடைய கருத்து. 'திராவிடம் – திராவிடர்' என்ற சொல் வட மொழி, அது தமிழ் இல்லை என்பதால் எதிர்க்கின்றோம் என்கிறார்கள். அப்படிப் பட்டவர்களிடம்... 'சமூக நீதி' என்று தானே சொல்கிறீர்கள் 'குமுக நயன்மை' என்று பேசுவதில்லையே? எனவே சமூக நீதியை நீங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடாது என்று நான் பல நேரங்களில் சொல்வதுண்டு. ஏறு தழுவு தலை 'ஜல்லிக்கட்டு' என்று பேசுகிறார்கள் தமிழ் சொல்லா அது? ஆக ஒரு சொல் இன்னொரு மொழியில் இருக்கின்றது என்பதற்காக அதை எதிர்ப்பதாக சொல்லிக் கொள்பவர்கள் தமிழ் நாட்டின் அனைத்து நன்மைகளும் திராவிடர் என்ற ஒரு சொல்லால் போய்விட்டது என்று பேசுகிறார்கள்; அதற்குள் என்ன இருக்கின்றது என்று பார்க்கவேண்டும். இராஜா என்று பெயர் வைப்பதனாலேயே அவன் அரசனாகி விடமாட்டான். திராவிடர் என்ற சொல்லுக்கு உள்ளடக்கமாக பார்ப்பனர் எதிர்ப்பு, பாலின சமத்துவம், ஜாதி சமத்துவம், பகுத்தறிவு எல்லாவற்றையும் சேர்த்து வைத்தார் பெரியார். இவர்கள் இவற்றில் ஏதோ ஒன்றை மட்டும் தனியாக பிரித்துப் பேசுவதாக நினைத்து பேசுகிறார்களே தவிர எல்லாவற்றையும் இணைத்து பேசாதவர்களாகத் தான் இருக்கிறார்கள். ஜாதி ஒழிப்பை பேசட்டும்; ஜாதி ஒழியவேண்டும் என்று தான் தமிழ்த் தேசிய பொதுவுடமை கட்சி (தமிழ்த் தேசிய பேரியக்கம்) பேசுகிறதே தவிர ஜாதியை ஒழிப்போம் என்று சொல்லவில்லை. ஜாதி எப்படி ஒழியும்? அதற்கான முயற்சி என்ன? தமிழர் என்று இணைய வேண்டுமானால் இணைவதற்கு தடை யானவற்றை அகற்ற வேண்டும்; அதற்கு என்ன முயற்சி என்று சொல்லவேண்டும். நீங்களெல்லாம் தமிழ்த் தேசியத்தை ஒழிக்கவேண்டும் என்பதற்காகவே இருக்கின்றீர்கள் என்று நம்மைப் பார்த்து சொல்கிறார்கள்; தமிழ்த் தேசியம் என்பதற்கு என்னவென்றே எங்களுக்கு விளக்கம் தெரியவில்லை. திராவிடர் இயக்கங்கள் செய்யாத எந்த புது செயல்களை இந்த தமிழ்த் தேசிய இயக்கத்தினர் செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இவர்கள் சொல்லவேண்டும். உதாரணமாக இங்கு இருக்கின்ற மைல்கற்களில் இந்தியில் எழுதப்பட்டதற்கு முதல் எதிர்ப்பு உடுமலைப் பேட்டையில் இருந்து வந்தது. அதை அப்போதைய பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் தான் முன்னெடுத்தார்கள். அது அகற்றப்பட்ட பின்னால், நாடாளுமன்றத்தில் டி.ஆர்.பாலு பேசிய பின்னால் தான் இங்கு தமிழ்த் தேசியவாதிகள் பேசினார்கள். ஈழச் சிக்கலை பேசுகிறார்கள் சரி, ஈழத் தமிழர்களை கொல்ல ஆயுதம் போகிறதே என்று தடுத்தவர்கள் யார்? கோவை இராமகிருஷ்ணன் தலைமையில், பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள், ம.தி.மு.க தோழர்கள் தான் தடுத்து கைது ஆனார்கள். இந்த தமிழ் தேசியவாதிகளுக்கு ஒருவேளை அப்போது செய்தி தெரியாமல் இருந்திருக்கலாம்; அடுத்தேனும் அப்படிப்பட்ட ஒரு நிகழ்ச்சியை, வீரியமானப் போராட்டத்தை நிகழ்த்தினார்களா என்று சொல்லட்டும். தமிழ்த் தேசியத்திற்காக பேசுபவர்கள் திராவிடர் இயக்கத்தை விட கூடுதலாக இதைச் செய்கிறோம் என்று ஒரு செய்தி வரட்டும். அது கூட வேண்டாம், ஈழப் போராளிகளுக்கு ஆதரவு கொடுத்தற்காக சிறை சென்றவர்களின் பட்டியல் எடுங்கள்; அல்லது தமிழ்வழிக் கல்விக்காக நடத்தப்படும் தாய்த் தமிழ் பள்ளிகளை நடத்துபவர்களின் பட்டியலை எடுக்கட்டும், எல்லாவற்றிலுமே தமிழ்த் தேசிய வாதிகளின் பங்கு குறைவாகத் தான் இருக்கும். நாங்களும் தமிழ்த் தேசிய வாதிகள் தான்; ஆனால் அவர்கள் எங்களை அப்படி ஏற்றுக்கொள் வதில்லை. இவர்கள் தமிழ்த் தேசியத்தை பேசுகிறார்கள், அதற்காக செயல்படுபவர்களாக பெரியார் இயக்கத்தினர் இருந்திருக்கிறார்கள்; இருக்கிறார்கள் என்பது தான் எனது கருத்து.

**பேட்டியில் கொளத்தூர் மணி**

# பொது சிவில் சட்டம் முதலில் அனைத்து இந்துக்களுக்கும் வரட்டும்!

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜாதியத்திற்குள் பலபேர் இருக்கிறார்கள்; பழைய நிலையில் இருந்து தங்களை மாற்றிக் கொள்வதற்கு விரைந்து முன்வராதவர்களாக பலர் இருக்கிறார்கள் இது தான் இந்த நிலைக்கு காரணம் என்று நான் கருதுகின்றேன்.

*ஊடகவியலாளர்:* ஈழப் பிரச்சனையை பொறுத்த வரை இன்னும் பலர் வைக்கின்ற ஒரு முக்கியமான விமர்சனம் என்னவென்றால் தமிழகத்தை விட அதிக அளவில் ஈழத்தில் ஜாதிய மனநிலை பழைமைவாத மனநிலை இருக்கின்றது; இங்கிருப்பதைப் போல் ஒரு பெரியாரிய வீச்சோ, இடது சாரி சிந்தனையோ அங்கு மிகவும் குறைவு என்று சொல்கிறார்கள். எனவே அந்த போராட்டம் பின் தங்கியதற்கு இதுவும் ஒரு காரணமாக இருக்கலாமா?

*கொளத்தூர் மணி:* அப்படியும் சொல்ல முடியாது. அங்கு பார்ப்பனர்களின் ஆதிக்கம் இல்லை; சைவர்களின் ஆதிக்கம் தான் அங்கு இருந்திருக்கிறது. அவர்கள் எண்ணிக்கையிலும் அதிகமானவர்களாக இருந்திருக்கிறார்கள். புலிகள் மேலோங்கி இருந்த காலத்தில் மட்டும் தான் அவர்கள் அடங்கி இருந்தார்கள், ஒழிந்து விட்டார்கள் என்று சொல்லிவிட முடியாது. மீண்டும் அவர்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. வெளிநாட்டுத் தமிழர்கள் ஈழத்துக்கு திரும்பும் போது ஜாதி உணர்வோடு தான் திரும்புவார்கள் என்ற நிலை இருக்கத்தான் செய்கின்றது. ஆனால் ஆயுதம் என்பது அவர்களை அமைதியாக இருக்கச் செய்தது அவ்வளவு தானே தவிர அவர்கள் எல்லோரும் மாறிவிட்டார்கள் என்று சொல்லமுடியாது. அங்கும் இடதுசாரி சிந்தனை இருக்கத்தான் செய்கிறது; பெரியாரியம் என்பது உயர் மட்டத்தில் இல்லை என்பது உண்மைதான். இனி வரும் காலத்தில்தான் அப்படி ஒரு மறுமலர்ச்சி வருமா என்று நாம் பார்க்கப் போகின்றோம்.

*ஊடகவியலாளர்:* இங்கு பாரதிய ஜனதா ஆட்சிக்கு வந்த பின்பு பொது சிவில் சட்டம் என்பதை தொடர்ந்து சொல்கிறார்கள்; நீங்களெல்லாம் தலைவராக ஏற்றுக்கொண்டுள்ள அம்பேத்கரே பொது சிவில் சட்டம் சரி என்று சொல்லியுள்ளார் ஆனால் இங்குள்ள பெரியாரிஸ்ட், அம்பேத்கரிஸ்ட் எல்லாம் அந்த உண்மையைச் சொல்வதில்லை என்று பா.ஜ.க. தரப்பினர் சொல்கிறார்கள். பெரியாரும்கூட பொது சிவில் சட்டத்தை ஓரிடத்தில் ஆதரித்ததாக சொல்லப்படுகின்றது; பெரியார் அம்பேத்கர் சொல்லும் வரையறையும் இவர்கள் சொல்லும் வரையறையும் ஒன்றா?

*கொளத்தூர் மணி:* எல்லோருக்கும் சமஉரிமை, ஒரே சிவில் சட்டம் வேண்டும் என்பது வரவேற்கத் தக்கது தான். ஆனால் அது வருவதற்கு முன்னால் மத சுதந்திரம் என்று வழங்கப்பட்டுள்ள 25, 26 பிரிவுகளை அகற்றிவிட்ட பின்னால் வருமேயானால் வரவேற்கலாம், பாராட்டலாம். ஆனால் மத சுதந்திரமும் இருக்கவேண்டும் எல்லோருக்கும் ஒரே சிவில் சட்டம் வரவேண்டும் என்பது பிற மதத்தினருக்காக பேசுகிறார்கள். பொது சிவில் சட்டம் வருவதற்கு முன்பு இந்துக்களுக்குள் ஒரு பொதுவான சிவில் சட்டத்தைக் கொண்டு வருவதற்கு இவர்கள் தயாராக இருக்கிறார்களா என்று சொல்லவேண்டும். அனைத்து இந்துக்களுக்கும் சமஉரிமை வேண்டும் என்று கேட்பார்களா அல்லது அதை ஏற்றுக் கொள்வார்களா என்று சொல்லவேண்டும். ஆனால் அதைச் சொல்ல மாட்டார்கள். அர்ச்சகராக நாங்கள் மட்டும்தான் இருப்போம் என்று போராட்டம் நடத்துவார்கள்; அதற்காக வழக்குப் போடுவார்கள்; அதற்கு உச்ச நீதிமன்றம் வரைப் போவார்கள். இவர்கள் முதலில் இந்துக்களுக்கு என்று ஒரு சமச்சீரான சட்டடத்தை கொண்டு வரட்டும்; அதற்கான குரலை முதலில் ஒலிக்கட்டும்; பொது சிவில் சட்டத்திற்காக நாங்களும் பேச வருகிறோம்.

*ஊடகவியலாளர்:* ஆக இவர்கள் கேட்பது இந்துக்களுக்கான சம உரிமை இல்லை என்கிறீர்களா?

*கொளத்தூர் மணி:* இவர்கள் இந்துக்களுக்கான சம உரிமை பற்றி எப்போதும் பேசுவதில்லை. இல்லையென்றால் அனைத்து ஜாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை வேண்டும் என்று நாங்கள் கேட்கவேண்டியதில்லை. இந்துக்கள் உரிமை என்றால் தாழ்த்தப்பட்டவரும் இந்து தான், பிற்படுத்தப்பட்டவரும் இந்துதான். ஆக சூத்திர இந்துவும், பஞ்சம இந்துவும் அர்ச்சகராக முடியவில்லை என்றால் இந்துக்களுக்கான அமைப்பு இல்லை இது; இது பார்ப்பனர்களுக்கான அமைப்பு; இதை இந்துக்களுக்கான அமைப்பாக பொய்யாக காட்டிக் கொண்டிருக்கிறார்கள் என்பதுதானே அவர்கள் நிலை; நம்மவர்கள்தான் புரிந்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.

**இந்து அமைப்புகள் பார்ப்பனர்களுக்காகவே!**

*ஊடகவியலாளர்:* நீங்கள் சொல்வதைப் பார்த்தால் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இந்துக்களுக்கான உரிமைக்காக அதிகம் பேசுகின்றீர்கள்; ஆனால் இந்துத்துவத்திற்கு எதிராக இருக்கின்றீர்கள். ஆனால் இந்துத்துவா அமைப்புகள் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இந்துக்களாக பேசுவதில்லை; அப்படியானால் இந்துக்கள் உரிமை என்பதற்கான அவர்களின் வரையறை தான் என்ன?

*கொளத்தூர் மணி:* மக்கள் தான் புரிந்துகொள்ள வேண்டும். கோவில் நுழைவுக்காக நாத்திகர்களான நாங்கள் தான் பேசுகின்றோம். தாழ்த்தப்பட்ட மக்களை கோவிலில் விடாத இடங்களில் போராடுகிறோம். அனைத்துச் சாதியினருக்கும் அர்ச்சகர் உரிமை வேண்டும் என்று நாங்கள் பேசுகின்றோம். இந்த இரண்டையுமே அவர்கள் பேசுவதில்லை. குறிப்பாக தமிழ்நாட்டு இந்து அமைப்புகள் பேசுவதே இல்லை. நான் கேரளாவில் இருக்கும் ஆர்.எஸ்.எஸ் அமைப்பினரை சந்தித்திருக்கிறேன்; அவர்களைப் பொறுத்தவரை பிறப்பின் அடிப்படையில் இல்லை, குணத்தின் அடிப்படையில் தான் வர்ணங்கள் என்று சொல்கிறார்கள். ஆனால் இங்கு இருப்பவர்கள் அந்த வாதத்தை வைப்பதோ, அதைப் பற்றி பேசுவதோ கிடையாது. கேரளாவில் தாழ்த்தப்பட்டவரை அர்ச்சகராக்கி அதற்கான தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தில் வந்த போது அங்குள்ள இந்து அமைப்புகள் தீர்ப்பை வரவேற்றன. ஆனால் தமிழ்நாட்டில் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகர் ஆகக்கூடாது என்று இங்குள்ளவர்கள் வழக்குப் போடுகிறார்கள். வழக்குப் போடுபவர் தனி நபராக இருக்கட்டும்; அவர்களை ஏன் இந்து அமைப்புகள் கண்டிக்கவில்லை? எனவே இந்து அமைப்புகள் பார்ப்பனர்களுக்கான அமைப்பு தான்; பொய்யாக இவர்கள் அனைத்து இந்துக்களுக்குமானது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; நம்மவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இந்துக்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கு என்று போராடினார்கள்; இந்துவாக இருக்கும் பிற்படுத்தப்பட்டவர்களுக்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டு கொண்டுதான் இருக்கிறது. பார்ப்பனர்களுக்கு மட்டும்தான் வழங்கப்படவில்லை; பார்ப்பனர்களுக்கும் கல்வி உதவித் தொகை வேண்டும் என்று கேட்க முடியாமல், இந்துக்களுக்கு கல்வி உதவி தொகை வேண்டும் என்று பேசுகிறார்கள். நம்மவர்களான தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சகோதரர்கள் பார்ப்பனர்களோடு நின்று 'இந்துக்களுக்கும் கல்வி உதவித் தொகை வழங்கு' என்று முழக்கமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். நம்மவர்களுக்கு நாம் புரிய வைக்க முடியவில்லை அல்லது பார்ப்பனர்கள் நம்மவர்களை நன்கு ஏமாற்றி வைத்திருக்கிறார்கள் என்றுதான் இதனை சொல்ல முடியும்.

*ஊடகவியலாளர்:* அப்படியானால் 'இந்துக்களுக்கான உரிமை' என்று இவர்கள் கேட்பது குறிப்பிட்ட ஒரு சமூகத்திற்கு மட்டும் தானா?

*கொளத்தூர் மணி:* ஆம். அவர்கள் கேட்பது அவர்களின் பாதுகாப்புக்காக அவர்களின் உரிமைக்காகவேதான் பேசுகிறார்கள். அவர்களின் மேலாண்மை சிதையாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று கருதுகிறார்கள். எந்த பேஷ்வாக்களிடம் இருந்து ஆட்சி ஆங்கிலேயர்களால் பிடுங்கப்பட்டதோ, அவர்கள் கைக்கு மீண்டும் ஆட்சி வரவேண்டும் என்பது தான் ஆர்.எஸ்.எஸ் இன் கோரிக்கை - உணர்வு. ஆனால் எல்லோரையும் அவர்கள் பிடித்துக்கொள்கிறார்கள்; ஏன்? பி.ஜே.பி.யில் இஸ்லாமியர்கள் கூட இருக்கிறார்கள். பி.ஜே.பி.இல் சேர்ந்த பின்னால் இஸ்லாமியர் சிறுபான்மையினர் ஆக மாட்டார்கள் என்று அந்த இஸ்லாமியர்களும்கூட பேசுவதை நாம் பார்க்கின்றோம்.

*ஊடகவியலாளர்:* அம்பேத்கர் பற்றி இந்துத்துவா அமைப்புகள் தொடர் திரிபுகளை செய்வதாக சுட்டிக்காட்டி, அம்பேத்கர் ஆர்.எஸ்.எஸ் க்கான தலைவர் அல்ல, எங்களுக்கான தலைவர் என்று

(5 ஆம் பக்கம்)

## 'மாதொரு பாகனு'ம் மனு சாஸ்திரமும்

**ஊடகவியலாளர்:** நீங்கள் இருக்கும் கொங்கு மண்டலம் சார்ந்த செய்தி இது; 'மாதொருபாகன்' நாவல் குறித்து உங்கள் அமைப்பின் பார்வை என்ன?

**கொளத்தூர் மணி:** ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னால் நிலவிய செய்திகளை அவர் பதிவு செய்திருக்கின்றார்; அதைப் பலரும் சொல்கிறார்கள். (ஊடகவியலாளர்: அப்படி இருந்தது உண்மையா?) அப்படி இருந்ததாக அண்மையில் கூட வயதான ஒருவர் என்னிடம் சொல்லியிருக்கின்றார். அதை தவறு சொல்கின்ற இவர்களிடம் நான் வைக்கின்ற கேள்வி ஒன்று இருக்கின்றது; ஒட்டு மொத்த பார்ப்பனரல்லாத தமிழ் சமூகத்தினர் அனைவரையும் சூத்திரன் ஙி வைப்பாட்டி மகன் என்று சொல்கிறானே ! எத்தனை பேருக்குக் கோபம் வந்திருக்கின்றது? குழந்தை இல்லாதவள் ஏழு தலைமுறைக்கு உட்பட்ட பங்காளியோடு தொடர்புகொண்டு குழந்தை பெற்று கொள்ளலாம் என்று மனுசாஸ்திரத்தில் சொல்லியிருக்கின்றானே எத்தனை பேர் இது குறித்துப் பேசியிருக்கின்றார்கள்? சில சுயநல சக்திகள் நான்கு ஆண்டுகளுக்கு முன்பு எழுதியதை எடுத்து வந்து இப்போது போராடுகிறார்கள்; அதுமட்டு மல்லாமல் போராட்டத்திற்கு அரசு துறைகளும் ஆதரவாக இருந்திருக்கின்றன. கோரிக்கையே இல்லாமல் நடத்தப்பட்ட இந்த போராட்டத்தில் நூலை எரித்தார்கள், முழு அடைப்பு துண்டறிக்கையை நான் பார்த்தேன், துண்டறிக்கை யில் ஒரு கோரிக்கையும் இல்லை; தொடர்பு எண் இல்லை; அச்சகத்தின் பெயர் இல்லை ஆனாலும் காவல் துறை அனுமதிக்கின்றது.

**ஊடகவியலாளர்:** அரசு, நாவல் ஆசிரியருக்கு எதிரான நிலைப்பாடு எடுப்பதற்கான காரணம் என்னவாக நீங்கள் கருதுகிறீர்கள்?

**கொளத்தூர் மணி:** அரசு அல்ல; அங்கிருக்கின்ற அதிகாரிகள். அங்கிருக்கும் அதிகாரிகளும் அதே ஜாதியைச் சார்ந்தவர்கள். எனவே தான் பரமக்குடி தாக்குதலிலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளாக நாங்கள் வைக்கின்ற கோரிக்கை என்னவென்றால், அரசு அதிகாரிகள் குறிப்பாக காவல் துறை அதிகாரிகள் அந்தந்த பகுதி ஆதிக்க ஜாதியைச் சார்ந்தவர்களாக இருக்க அனுமதிக்கக் கூடாது; இதே காரணத்தைச் சொல்லி தாழ்த்தப்பட்ட அதிகாரிகளை மாற்றக் கூடாது என்பது தான்.

**பேட்டியில் கொளத்தூர் மணி**

# கோட்சேவுக்கு சிலை வைப்பது நீதிமன்ற அவமதிப்பு

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லி வருகிறீர்கள்; பெரியாரை இராமசாமி நாய்க்கர் என்று வெளிப்படையாக விமர்சிக்கும் ஆர்.எஸ்.எஸ் நண்பர்கள் இடதுசாரி சிந்தனை என்ற தத்துவமே ஆபத்து, வன்முறை என்று விமர்சிக்கும் ஆர்.எஸ்.எஸ் நண்பர்கள், அம்பேத்கரை மட்டும் அவ்வப்போது எங்கள் தலைவர் என்று சொல்லிக் கொள்வதை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?

**கொளத்தூர் மணி:** அதற்குள் ஒரு சதி இருக்கின்றது. நான் ஏற்கனவே சொன்னதைப் போல இது பார்ப்பனர்களுக்கான அமைப்பு. மற்றவர்கள் மீது ஏவி விடுவதற்கு, ஏவல் ஆட்கள் இவர்களுக்கு எப்போதும் வேண்டும். எனவே போராடுகிற சக்தியுள்ள அல்லது ஆயுதம் ஏந்தக் கூடியவர்கள் அல்லது உடல் பலம் உள்ளவர்கள் இவர்களுக்கு வேண்டும்; பொய்யாக சொல்லி, பிற்படுத்தப் பட்டவர்களை மட்டும் எதிரிகளாகக் காட்டி தாழ்த்தப்பட்ட மக்களை கைவசப்படுத்தி வைக்கிறார்கள். பழங்குடி மக்களிடம் போய் வேரூன்றி அவர்களை தங்கள் கைவசப்படுத்தி விடுகிறார்கள். அம்பேத்கருக்கு எதிராக பேசி விடுவார்களேயானால் அவர்களெல்லாம் எதிராகப் போய்விடுவார்கள். அம்பேத்கர் இந்துயிசத்தின் தத்துவம், இந்துமதப் புதிர்கள் போன்ற நூல்களை எழுதியுள்ளார்; இராமனை கிருஷ்ணனை விளாசித் தள்ளியுள்ளார்; மனுதர்மத்திற்கு எதிராக எழுதினார், ஆய்வு செய்தார்; மனுசாஸ்திரத்தை எரித்தார்; இவ்வளவும் செய்தவரை தெரியாமல் இவர்கள் பேசுவதாக சொல்லமுடியாது, தெரிந்தே பேசுகிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களை தங்கள் கைபிடிக்குள் வைத்திருக்க வேண்டும் என்பதற்காக அம்பேத்கரை எதிர்க்காமல் இருக்கிறார்கள். வெளிப்படையாக எதிர்க்காமல் இருக்கிறார்கள் அவ்வளவுதான்; உள்ளுக்குள் எதிரான கருத்துகள் இருக்கத்தான் செய்யும்.

**ஊடகவியலாளர்:** அம்பேத்கரை ஏற்றுக்கொள்வது ஒரு உத்தி என்கிறீர்களா?

**கொளத்தூர் மணி:** நிச்சயமாக உத்தி தான். சில அம்பேத்கரிஸ்டுகளே பி.ஜே.பி யில் சேரக்கூடிய நிலையில் இப்படி பேசுகிறார்கள். அம்பேத்கரை பொறுத்தவரை இந்துத்துவாவிற்கு எதிராக இருந்திருக்கிறார். இந்து மதம் என்பது நமக்கான உரிமையை எப்போதும் கொடுக்காது என்பதில் தெளிவாக இருந்திருக்கிறார்; எச்சரிக்கையாக இருக்கச் சொல்லி மக்களுக்கு சொல்லியிருக் கிறார்.

**ஊடகவியலாளர்:** தமிழகத்தில் 31 இடங்களில் கோட்சே சிலை வைப்பதாகவும், காந்தியை ஏன் கோட்சே சுட்டுக்கொன்றார்? அதன் நியாயங்கள் என்ன? என்பதை நாங்கள் அறிக்கையாக கோட்சேவின் வாக்குமூலத்தை வெளியிடப் போகின்றோம் என்று சொல்கிறார்கள். காந்தியை கொன்றவர் இந்துத்துவாவாதி என்று இதுவரை உங்களைப் போன்றவர்கள் பேசி வந்தீர்கள்; ஆனால் இப்போது அவர்களே நாங்கள் தான் காந்தியை கொன்றோம், அதற்கான காரணத்தை வெளியிட்டு, நாங்கள் வெளிப்படையாக பேசுவோம் என்று சொல்லக் கூடியதை எந்த விதமான மாற்றமாக நீங்கள் கருதுகிறீர்கள்?

**கொளத்தூர் மணி:** ஆட்சிக்கு வந்துவிட்ட ஆணவ மாகத்தான் தெரிகிறதே தவிர, வேறொன்றும் இல்லை. கோட்சே வாக்குமூலத்தை வெளி யிடட்டும். அவர்கள் எதையும் காட்டாமல்தான் பேசுவார்கள். ரிக் வேதத்தை என்னவென்றே காட்டாமல் வேதத்தில் எல்லாம் இருப்பதாக சொல்வார்கள்; ரிக் வேதத்தை படித்தால் ஒன்றும் இருக்காது. "டேய் மாப்ள தண்ணி வாங்கி தர்றன், கறி வாங்கி தர்றன் வா அவன அடிக்கலாம்" என்பதைப் போலத்தான் சமஸ்கிருதத்தில் எழுதி வைத்திருக்கின்றான். கருப்பர்கள் வருகிறார்கள் இவர்களை தாக்குவதற்கு இந்திரனே வா, உனக்கு சோமபானம் வைத்திருக்கின்றேன், மாமிசம் வைத்திருக்கின்றேன் (ஊடகவியலாளர் : கருப்பர்கள் என்று குறிப்பிடுவது தமிழர் களையா?) ஆம் தஸ்யூக்கள் என்று தமிழர்களைத் தான் சொல்கிறார்கள். இந்தியா முழுவதும் ஒரு காலத்தில் பரவியிருந்தவர்கள் தமிழர்கள் என்று அம்பேத்கர் சொல்வார். இந்தியா முழுவதும் பரவியிருந்த இந்நாட்டு மக்களை அல்லது வேறு வரலாற்று ஆசிரியர்கள் சிலர் சொல்வதைப்போல இவர்களுக்கு முன்பு நீண்ட காலங்களுக்கு முன்பாக வந்து அமர்ந்தவர்களைத் தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அதைப் போலத்தான் கோட்சேவின் வாக்குமூலத்தை படிக்கட்டும். அதில் 'நான் மட்டும் தான் குற்றவாளி, ஆப்தே கூட குற்றவாளி இல்லை' என்று தான் சொல்கின்றான். சாவர்கர் உட்பட யாருக்கும் எந்த தொடர்பும் இல்லை என்று சொல்கின்றான். முற்றும் முழுதாக கையில் சிக்கிக் கொண்ட இவன் மறுக்க முடியாது; வேறு வழியில்லை, நாம் எப்படியும் தண்டிக்கப்பட போகிறோம்; ஒரு வீரப் பெருமை யோடு சாகலாம் என்பதற்காக அவன் சொன்னது தான் அது; ஆம் இதற்காகக் கொன்றேன் என்று சொல்கிறான். காந்தி உண்ணாவிரதம் இருந்ததை சொல்கிறான். இஸ்லாமியர்களுக்காக இருந்தார், பாகிஸ்தானுக்கு பணம் கொடுக்கச் சொன்னார் என்ற காரணத்தை அதில் சொல்லியிருக்கிறான். 1944 ஆம் ஆண்டே கத்தி எடுத்துபோய் காந்தியை கொலை செய்ய முயற்சித்தவன் இவன்தான். இதற்காக 1944 ஆம் ஆண்டு நாதுராம் கோட்சே கைது செய்யப்பட்டிருக்கிறான். அப்போது காந்தி பாகிஸ்தானுக்கு பணம் கொடுக்கச் சொல்ல வில்லையே! ஆனாலும் இவர்கள் ஏதேனும் ஒரு காரணத்தைச் சொல்லவேண்டும் என்பதற்காக சொல்கிறார்கள். அவர்கள் வெளியிடட்டும் அதைப் பற்றி பேசுவதற்கு நமக்கு வசதியாக இருக்கும் (ஊடகவியலாளர் : வெளியிட வேண்டும் என்பதற்காக காத்திருக்கிறீர்கள்) இவர்கள் இப்போது ஒன்றும் வெளியிடப் போவதில்லை; ஏற்கனவே வெளியிடப்பட்டு, அது இருந்து கொண்டு தான் இருக்கிறது; 1979 ஆம் ஆண்டே மொரார்ஜி தேசாய் இருந்தபோதே வெளியிட்டு விட்டார்கள். 1993 இல் வெளிப் படையாகவே பேசப்பட்டது எழுதப்பட்டது. 'நான் ஏன் கொலை செய்தேன்' என்று கோபால் கோட்சே புத்தகம் எழுதினார். புதிதாக ஒன்றும் வெளியிட போவதில்லை அதேபோல கோட் சேவுக்கு சிலை வைப்பதாக சொல்வதும் புதிதல்ல. காந்தியை நான் தேசப்பிதா என்று ஏற்றுக் கொள்ள மேட்டேன் என்று நாடாளுமன்றத்தில் அத்வானி சொல்லியிருக்கிறார்; கோட்சே ஒரு தேசபக்தர் என்று 2010 க்கு முன்பே தேர்தல் பிரசாரத்தின் போது சிவசேனா தலைவர் பால்தாக்ரே சொல்லியிருக்கிறார். இப்போது வெளிப்படையாக பலர் சொல்கிறார்கள்; இப்போதுதான் இந்து மகா சபையின் தீர்மானமாக போட்டு, மீரட்டில் சிலை வைக்கப்போவதாக சொன்னார்கள்; இப்போது அதற்கும் அந்த அரசு தடை விதித்துவிட்டது. சமூக அமைதியைக் குலைக்கிறார்கள் என்று வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. உச்ச நீதி மன்றத்தில் தண்டனை கொடுக்கப்பட்டு மேல் முறையீட்டில் உறுதி செய்யப்பட்டு மரண தண்டனை நிறைவேற்றப்பட்ட குற்றவாளிக்காக இவர்கள் பேசுவது என்பது முதலில் நீதிமன்ற அவமதிப்பாக நான் பார்க்கின்றேன். இந்த நாட்டின் பெரும்பாலான மக்கள் தேசப்பிதா என்று ஏற்றுக்கொண்ட காந்தியை, அனைத்து அரசு அலுவலகங்களிலும் வைக்கப்பட

(6 ஆம் பக்கம்)

## மோதிக் கொண்ட சைவமும் வைணவமும் ஒரே மதமா?

**ஊடகவியலாளர்:** மதமாற்றம் குறித்து வந்த பல கேள்விகளுக்கு தொடர்ந்து பதிலளித்தே வந்திருக்கிறீர்கள்; இந்து மதத்திற்கு திரும்பும் கிறிஸ்துவ – இஸ்லாமியர்களை எந்த ஜாதியில் சேர்த்துக் கொள்வீர்கள்? என்று உங்களைப் போன்ற பெரியாரிஸ்டுகள் கேட்ட கேள்விக்கு, பி.ஜே.பி.யினர் தற்போது ஒரு பதில் சொல் கிறார்கள்; எல்லோரும் தாய் மதத்திற்குத் திரும்புங்கள், ஜாதி தெரியாத இஸ்லாமியர்களை நேரடியாக பிராமண ஜாதியில் சேர்த்துக் கொள்கிறோம் என்று இராமகோபாலன் கூட சொல்ல ஆரம்பித்துவிட்டார்; இதை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?

**கொளத்தூர் மணி:** உமாசங்கர் மதமாற்றத்திற்காக பேசுகிறார் என்கிறார்களே இதற்கு என்ன நாம் சொல்லப் போகிறோம் என்பது எங்களுக்கு தெரியவில்லை. மதம் மாற்றம் என்று சொன்னால் 'தாய் மதம் திரும்புதல்' (கர் வாபஸி) என்ற புதிய சொல்லை சொல்கிறார்கள்; இது அப்போது ஆரிய சமாஜமே கொண்டுவந்தது தான். ஒரு ஆயிரத்திற்கும் குறைவான ஆண்டுகளுக்கு முன்னால் நின்றசீர் நெடுமாறன் என்ற சமணரை சைவராக்கினார்கள். தர்மசேனன் என்ற சமணனை இவர்கள் திருநாவுக்கரசர் ஆக்கி னார்கள். அப்படியானால் சைவர் களெல்லாம் மீண்டும் தாய் மதமான சமண, பௌத்த மதத்திற்குப் போவார்களா என்று தெரியவில்லை. அல்லது பழந்தமிழர்களுக்கு மதமே கிடையாது என்று சொல்கிறார்கள்; ஆக இவர்கள் எங்கே போவது? 1800 க்கு பின்னால் – 1900 க்கு பின்னால் என்று ஏதேனும் வரம்பு வைத்திருக் கிறார்களா என்று தெரியவில்லை. மதம் மாறுவது என்பது ஒவ்வொருவரின் தனிப்பட்ட விருப்பம்; 18 வயது நிரம்பிய ஒருவருக்கு வாக்களிக்கும் உரிமை இருக்கின்றது; வாக்குகளை சேகரிக்கும் உரிமை கட்சிகளுக்கு இருக்கிறது. அதே போல தங்கள் மதத்திற்கு ஆள் சேர்ப்பதற்காக அழைக்கின்றார்கள்; போகின்றார்கள்; அதை ஏன் இவர்கள் தடுக் கின்றார்கள். மதம் மாற்றுவதற்கு வேறு யாரும் பேசக்கூடாது, நாங்கள் மட்டும் மாற்றுவோம் என்று பேசிக் கொண்டிருக் கிறார்கள். பார்ப்பன ஜாதியில் சேர்த்துக் கொள்கிற நிலைமை வராது; வந்தால் என்ன செய்யப் போகிறார்கள் என்பது அப்போது தெரியும். ஒருவேளை சேர்த்துக் கொள்வ தென்றால் நஜ்மா ஹெப்துல்லாவை, முக்தர் அப்பாஸ் நக்வி ஆகியோரை முதலில் பார்ப்பனர்களாக சேர்த்துக் கொள்ளட்டும்; மகிழ்ச்சி நமக்கு. தாய் மதம் திரும்புவதற்கு அவர்கள் கட்சியில் இருப்பவர்களை முதலில் கேட்டுப் பார்க்கட்டும்; அவர்களெல்லாம் முன்னுதாரணமாக இருந்தால் பல பேர் வர வாய்ப்பிருக்கின்றது. அம்பேத்கர் சொன்னார்... 'பௌத்த இந்தியா மீது இந்து படையெடுப்பு நடந்தது; இந்து இந்தியா மீது முகலாயர் படை யெடுப்பு நடந்தது; அதன் மீது ஆங்கிலேய – ஐரோப்பிய படையெடுப்பு நடந்தது என்று. தமிழ்நாட்டில் இந்து மதம் எப்போதிலிருந்து இருந்தது?

சைவர்கள் – வைணவர்கள் சண்டை போட்டதை கல்கிகூட எழுதியிருக்கிறார். சைவ மதம் தனியாக இருந்தது; வைணவ மதம் தனியாக இருந்தது. ஒரு காகம் கோவில் மேல் உள்ள சிறுகல்லைத் தள்ளி தனது மூக்கில் இரத்தம் வந்தபோதுகூட 'ஆஹா வைணவக் கோவிலை இடிக்கிறாயா! மகிழ்ச்சி' என்று பேசிய சைவனைத் தான் கல்கி தனது நாவலில் காட்டுகிறார். ஆக ஒருவருக்கொருவர் மோதி கொண்டிருந்த சைவனும் வைணவனும் எப்போது இந்து ஆனார்கள்? கல்கி காலத்தில்கூட இரண்டு மதங்களாக இருந்ததைத் தானே எழுதுகிறார். அப்படி பிரித்தால் யார் பெரும்பான்மை மதம் என்பது தெரியும். இவர்கள் தங்களுக்கு வசதியானதை, தாங்கள் ஆட்சிக்கு வந்துவிட்டோம் என்ற ஆணவத்தோடு செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். இதை எதிர் கொள்ள வேண்டிய ஆற்றலையும் நோக்கத்தையும் நாம் இணைத்து கொள்ளவேண்டும் அல்லது ஒன்றிணைந்து போராட வேண்டும்.

**பேட்டியில் கொளத்தூர் மணி**

# தமிழில் புதுமை இலக்கியங்களுக்கு பரிசுதர முன் வந்தவர் பெரியார்!

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று வலியுறுத்தப்படுகிற படத்திற்குச் சொந்தகாரரான காந்தியை, நம்முடைய பணத்தாள்கள் அனைத்திலும் பதியப்பட்டிருக்கும் காந்தியை...

*ஊடகவியலாளர்:* பணத்தாளில் இருந்து காந்தி படத்தை நீக்க வேண்டும் என்று கோரிக்கை வைக்கிறார்களே ?

*கொளத்தூர் மணி:* ஆம் பேச தொடங்கிவிட்டார்கள். மீண்டும் ஆட்சிக்கு வருவோமோ மாட்டோமோ, இப்போதே எல்லாம் செய்துவிட வேண்டும் என்ற வேகத்தில் இருக்கிறார்கள். இந்த நிலையில் இவர்கள் ஆட்சி ஐந்து ஆண்டு காலம் இருக்குமோ அல்லது அதற்கு முன்னால் போகுமோ தெரியாது; இருப்பதற்குள் முடித்து விட வேண்டும் என்ற துடிப்பை நாம் பார்க்க முடிகின்றது. அவர்கள் தொடர்ந்து பொய் பேசுகிறார்கள்; பொய்யை ஆராய்வதற்கு மக்களுக்கு நேரமில்லை; வாரம் ஒரு பொய் வந்து கொண்டிருக்கிறது. இவர்கள் இப்படி துணிச்சலாக பேசுவதை மக்களுக்கு விளக்கவேண்டிய கடமை நமக்கு இருக்கின்றது. கோட்சே யார்? அவருக்கு பின்னணியாக இருந்த ஆர்.எஸ்.எஸ்.காரர்கள் யார்? இந்து மகா சபை என்ன? என்பதை நாம் பேச வேண்டிய தேவை இருக்கின்றது. எனவே இதை வாய்ப்பாக நாம் பயன்படுத்திக் கொள்வோம்.

*ஊடகவியலாளர்:* இதை இந்து மகா சபை சொல்கிறது, இதை பால்தாக்ரே சொல்கிறார், ஆனால் இதை மோடி சொல்லவில்லையே? என்று பி.ஜே.பி யினர் சொல்கிறார்கள்?

*கொளத்தூர் மணி:* மோடி இந்த நாட்டின் தலைவர்; தேர்தல் நேரங்களில் பேசாத பேச்சையெல்லாம் (அனைத்து செய்திகளையும்) பேசிகொண்டிருந்தவர். இப்போது இதை பற்றி பேசவில்லை என்பதே அவர் அவற்றை ஏற்றுக்கொண்டார் என்பதற்கான அடையாளம் என்று சொல்லுகின்றோம். கோட்சே தேசபக்தன் என சாக்ஷி மகராஜ் என்கின்ற பி.ஜே.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் பேசுகிறார்; அந்த நாடாளுமன்றத்தின் தலைமை அமைச்சராக இருப்பவர் மறுப்போ அல்லது அது அவரின் தனிப்பட்ட கருத்து என்றோ சொல்லவேண்டும் ஆனால் சொல்லவில்லை. காந்தியை மறக்கடிப்பதற்காகத் தான் அந்த நாளில் தூய்மை பாரதம் என்று ஏதோ சொன்னார்கள். நமக்கெல்லாம் அம்பேத்கர் நினைவு நாளில் (டிச-6 பாபர் மசூதி இடிப்பு தினம் என்பதால்) அம்பேத்கர் நினைவு நாள் கூட்டம் நடத்தவே அனுமதி கிடைப்பதில்லை. ஆனால் காந்தி இறந்த அதே ஜனவரி 30 ஆம் நாளில் சிலை வைக்கிறோம் என்கிறார்கள். திருச்சியில் விஷ்வ ஹிந்து பரிசத் மாநாட்டை அதே ஜனவரி 30 ஆம் தேதியில் என அறிவிக்கிறார்கள் என்றால் இவர்களின் ஆணவத்தையும் தமிழக அரசின் கேவலமான செயல்பாடுகளையும் நாம் புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. பிரபாகரன் தேடப்படும் குற்றவாளி தானே தவிர அவர் மீதான விசாரணை முடியவில்லை; விசாரணை முடிந்து, குற்றவாளியாக உறுதி செய்யப்பட்ட பின்னால் பிரபாகரன் படம் வைக்கக் கூடாது என்றால் அதில் பொருள் இருக்கலாம். ஆனால் இப்போதே பிரபாகரன் படம் வைத்தால் அகற்றுகிறார்கள், வீட்டில் யாரேனும் நாள் காட்டி வைத்திருந்தாலும் தேடிப் போய் பார்த்து வழக்குப் போடுகிறார்கள். இவராவது ராஜீவ் காந்தி ஆனால் ஒரிஜனல் காந்தியை இந்த நாட்டின் தந்தையைக் கொன்ற கொலைகாரனுக்கு சிலை வைக்கின்றோம் என்கிறார்கள். காங்கிரஸ்காரர்கள் கூட ஏன் பேசாமல் இருக்கிறார்கள் என்று தெரியவில்லை; இந்த நாட்டின் 'தேச பக்தர்கள்' எல்லாம் எங்கே போய் விட்டார்கள் என்றும் தெரியவில்லை. மீண்டும் திராவிடர் இயக்கங்கள் தான் இவற்றைப் பேசி வருகின்றன.

*ஊடகவியலாளர்:* தமிழகத்தில் சமீபத்தில் இன்னொரு முக்கிய பிரச்சனையாக உமாசங்கர் ஐ.ஏ.எஸ் மதப் பிரச்சாரம் செய்கிறார் என்று இந்து அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன; தமிழக தலைமைச் செயலாளர் மதப் பிரச்சாரம் செய்யக்கூடாது என்று சுற்றறிக்கை அனுப்பியுள்ளர்; 24 மணி நேரமும் மக்களைப் பற்றி சிந்திக்கவேண்டிய ஒரு ஐ.ஏ.எஸ் அதிகாரி மதப் பிரச்சாரம் செய்வது தவறு என்று இந்து அமைப்புகள் சொல்லும் இந்தப் பிரச்சனையை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?

*கொளத்தூர் மணி:* ஒரு அரசு அதிகாரி தனது பணிக் காலத்தில் ஒரு மதத்திற்கு ஆதரவாக காட்டிக் கொள்வது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது; அது கூடாது என்று தான் கருதுகின்றோம். அதேவேளையில் கோவில் கும்பாபிஷேகத்தில், சங்கராச்சாரி தரிசனத்தில் கலந்துகொள்கின்ற ஐ.ஏ.எஸ் அதிகாரிகளை, நீதிபதிகளை இந்த நடுநிலையாளர்கள் ஏன் கண்டிக்கவில்லை என்ற கேள்வி எனக்கு வருகிறது. உமாசங்கர் கிறிஸ்துவ பிரச்சாரம் செய்வது தவறு என்கின்ற போது, இவர்கள் கோவிலுக்குப் போகிறார்கள், இராமாயணப் பிரசங்கத்தில் கலந்து கொள்கிறார்கள் ஏன் யாரும் அதைப்பற்றி பேசுவதில்லை? இந்த நாட்டில் எந்த அரசு அதிகாரியும் அரசு சார்ந்தவரும் அல்லது நீதிபதியோ யாரும் எந்த ஒரு மதத்திற்கு ஆதரவானவராகவும் தன்னை வெளிப்படுத்திக் கொள்ளக் கூடாது. அவர்களின் மத நம்பிக்கையை வீட்டிற்குள் வைத்துக் கொள்ளட்டும்; வெளியில் காட்டக் கூடாது என்பது எல்லோருக்கும் சமமாக இருக்க வேண்டுமே தவிர உமாசங்கருக்காக மட்டும் பேசக் கூடாது என்பது என்னுடைய கருத்து.

*ஊடகவியலாளர்:* என்னவிருந்தாலும் தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று பெரியார் சொல்லியிருக்கிறாரே; அப்படியானால் பெரியாருக்கு நம் மொழி குறித்த பார்வை இல்லையென்று தான் பொருள் என்று ஒரு வாதம் முன் வைக்கப்படுகின்றதே?

*கொளத்தூர் மணி:* தினத்தந்தியில் செய்தி பார்த்துவிட்டு பேசுபவர்களைப் போல் பேசுகிறார்கள்; பெரியாரின் எழுத்துக்களை ஆழ்ந்து படித்தவர்களுக்கு தெரியும். தமிழ் புலவர்கள் மீது எனக்குள்ள கோபமெல்லாம் இந்த மொழியை அறிவியல் மொழி ஆக்கவில்லையே என்பது தான் என்று பெரியார் சொல்லியுள்ளார். இன்னும் சொல்லப் போனால் தமிழில் புதுமை இலக்கியங்களைப் படைத்து தருபவர்களுக்கு நான் பரிசு தருகிறேன் என்று பெரியார் அறிவித்துள்ளார். தமிழுக்காக பேசும் எந்த தலைவர்களும் இப்படி அறிவித்தாக நான் அறியவில்லை. தமிழர்களுக்கு நேற்று என்று பேசாமல் நாளைய தமிழகத்துக்கான செய்திகளை எழுதி வாருங்கள், இவ்வளவு பரிசு தருவேன், இவ்வளவு பிரதிகள் இலவசமாக அச்சிட்டு தருவேன் என்று அறிவித்தவர் பெரியார். அதே போல இந்த தமிழ் என்பதற்கான சிக்கல்கள் வருகின்ற போதெல்லாம், தமிழர்களுக்கான சிக்கல்கள் வருகிற போதெல்லாம் அதை எதிர்த்தார் இந்தி வந்த போதும் அதை அப்படிக் கருதித் தான் எதிர்த்தார். இன்னும் கேவலம் என்னவென்றால் அரசியல் தெரியாதவர்கள் பேசினால் கூட ஏற்றுக் கொள்ளலாம்; அரசியல் தெரிந்தவர்கள் கூட 'பெரியார் பெட்ரோல் டின் வைத்துக்கொண்டு இந்தியை எதிர்த்துப் போராடுபவர்கள் மீது ஊற்றி எரிக்கச் சொன்னார் என்று காங்கிரஸ்காரர் இங்கு இதே நிகழ்ச்சியில் பேசியதைக் கேட்டேன்; அவர் அறியாமல் பேசுகிறார். அரசியல் தெரிந்தவராக நாம் இதுநாள்வரை நம்பிக் கொண்டிருந்தவரும் எழுதுகிறார். குலக்கல்வி திட்டத்தின் போது பெரியார் பேசியதை இதோடு இணைத்து ஏதாவது பெரியார் மீது எழுதிவிட முடியும், எழுதி விடலாம், எழுதிவிட்டால் எல்லோரும் நம்மை உற்று கவனிப்பார்கள் என்ற உளவியல் சிக்கலாகத்தான் நான் இதைப் பார்க்கின்றேன்.

*ஊடகவியலாளர்:* பெரியார் கூட தன்னுடைய தலைவராக அம்பேத்கரை சொல்லியுள்ளார் !

*கொளத்தூர் மணி:* ஆம், அம்பேத்கரை ஏற்றுக் கொள்ளுங்கள், என்னுடைய தலைவராக அவரைத் தான் ஏற்றுக்கொண்டிருக்கிறேன் என்று பெரியார் பேசியிருகிறார். ஆக அவர்களுக்குள் ஒத்த சிந்தனை ஒத்த போக்கு இருந்தது. பலமுறை இருவரும் ஒரே நேரங்களில் ஒரே குரலை எழுப்பியுள்ளார்கள். ஆனால் இந்தத் தலைவர்கள் ஏன் இப்படி பேசுகிறார்கள் என்பது புரியவில்லை; தெரிந்தும் பேசுகிறார்களா? தெரியாமல் பேசுகிறார்கள் என்பதும் புரியவில்லை. தமிழ்த் தேசியவாதிகள் சிலர் தெரிந்தும் பேசுகிறார்கள்; தெரியாமல் பேசும் பல

(7 ஆம் பக்கம்)

## முன்னாள் அதிகாரி பத்மநாபன் வெளியிட்ட தகவல்

**ஊடகவியலாளர்:** சமீபத்தில் ஜெயமோகன் கூட எழுதினார்; திராவிடர் இயக்கத்தினால் பலன் பெற்றவர்கள் இடைநிலை ஜாதியினர் மட்டும் தான்; பிராமணர்களையும் தலித்துகளையும் ஒதுக்கி வைத்தார்கள்; இடைநிலை ஜாதி ஆதிக்கம் பெறுவதற்கு மட்டும்தான் திராவிடர் இயக்கம் பயன்பட்டது; தாழ்த்தப்பட்டவர் களுக்கு திராவிடர் இயக்கம் ஒன்றும் செய்ய வில்லை என்று ஒரு வாதம் தொடர்ந்து வந்து கொண்டே இருப்பதை நீங்கள் எப்படி பார்க்கின்றீர்கள்?

**கொளத்தூர் மணி:** இதில் ஓரளவுக்கு உண்மை இருப்பதாக நான் புரிந்துகொள்கிறேன். அது என்னவென்றால் இடைநிலை ஜாதியினர் தங்கள் இழிவு நீங்கியவுடன் பெரியார் இயக்கத்தைவிட்டு தள்ளிப் போய்விட்டார்கள். தொடக்க காலத்தில் பெரியார் காங்கிரஸ்காரராக இருந்த போதிலிருந்தே ஜாதிக்கு எதிராகப் பேசியதற்கு வரலாற்றுப் பதிவுகள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் அனைத்து இடங்களுக்கும் தாழ்த்தப் பட்டவர்கள் வந்துவிட்டார்கள் ஆனால் இன்னும் உயர்நீதிமன்றத்தில் நீதிபதியாக வரமுடியவில்லையே என்று ஏன் பெரியாருக்கு மட்டும்தான் தோன்ற வேண்டுமா? தாழ்த்தப்பட்ட தலைவர்களால் இப்படி ஒரு குரல் எழுப்பப்பட்டதா? பெரியார் சொல்லி நீதிபதி வரதராஜன் அப்போதுதான் நியமனம் பெறுகிறார். பறையர் பட்டம் போகாமல் சூத்திரப் பட்டம் போய்விடும் என்று கருதுவீர்களே யானால் நீங்கள் வடிகட்டிய முட்டாள்கள் ஆவீர்கள் என்று பெரியார் சொன்னார். பெரியாருடைய சிந்தனை சரியாகத்தான் இருந்தது. ஆக ஒரு இயக்கத்தைப் பயன்படுத்தி பலன் பெற்றவர்களாக யாரோ இருந்தாலும், அந்த இயக்கத்திற்குத் தத்துவம் கொடுத்தத் தலைவரின் சிந்தனை எவ்வாறு இருந்தது என்றுதான் பார்க்கவேண்டும்.

எல்லா நேரங்களிலும் பெரியார் அப்படி சரியாக இருந்தார் என்பதற்கு ஒரு செய்தியை சொல்லவேண்டும். இந்த தமிழ்நாட்டில் தலைமைச் செயலாளராக இருந்த பத்மநாபன் (ஆளுநராகவும் இருந்து ஓய்வு பெற்றவர்) அவர்கள், ஒருமுறை அவருடைய மாணவப் பருவ சிந்தனைகளை பகிர்ந்துகொள்ளும் போது சொல்கிறார் "தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேறு வதற்கு என்ன செய்யலாம்? என்பதற்காக இளைஞர்கள் நாங்கள் ஒரு குழுவாக சென்று அம்பேத்கரைச் சந்தித்தோம்; அவர் எங்களைக் கடிந்து கொண்டார்; தமிழ்நாட்டில் இராமசாமிப் பெரியார் இருக்கும்போது என்னிடம் எதற்கு வந்தீர்கள்? போய் அவரிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்று சொன்னார்" என்று. ஆக அம்பேத்கர் பெரியாரைப் புரிந்து வைத்திருந்தார்; அந்தப் புரிதல் இந்தத் தலைவர்களுக்கு இல்லையே என்பது வருத்தம் தான்.

**பேட்டியில் கொளத்தூர் மணி**

# ரிக்வேதம், மகாபாரதத்தையும் எரிப்பார்களா?

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

*புதியவர்கள் இருக்கின்றார்கள்; ஏன் இந்த போக்கு என்று புரிந்து கொள்ள முடியவில்லை. உதாரணமாக 'திராவிடர் கழகம்' என்ற பெயர் மாற்றம் குறித்து பெரியாரிடம் சத்தியமூர்த்தி தொலைபேசியில் சொன்னதாக சொன்னார்கள்; சத்தியமூர்த்தி 1943 இல் இறந்துவிட்டார், 1944 இல் எப்படி பேசமுடியும் என்று விடுதலை இராசேந்திரன் பதில் எழுதினார் உடனே இராஜாஜி என்றார்கள்; ஆனால் 'திராவிடர் கழகம்' பெயர் மாற்றம் குறித்து ஆண்டு முழுவதும் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள் குடிஅரசு பதிவில் இருப்பதை சுட்டிக்காட்டி நாம் பல முறை எழுதிய பின்னரும், மீண்டும் மீண்டும் அதே பொய்யைப் பேசிக் கொண்டே இருக்கிறார்கள். ஆக இவர்களிடம் விளக்கமளித்து என்ன பயன் விளைவிக்கும் என்று எங்களுக்குப் புரியவில்லை; அவர்களுக்குப் புரிந்துகொள்கின்ற அறிவாற்றல் இல்லை என்றும் சொல்ல முடியாது; இவர்கள் தெரிந்தே செய்கிறார்கள் என்று பேசாமல் அமைதியாக விட்டுவிட வேண்டியது தானா என்றுகூட கருதுகிறோம்; ஆனாலும் தொடர்ந்து விளக்கங்களை அளித்துக் கொண்டுதான் வந்திருக்கிறோம்.*

### இளைஞர்களிடம் போகவில்லை

*ஊடகவியலாளர்: திராவிடர் இயக்கம் என்றால், ஜாதி ஒழிப்பு, பெண் விடுதலை, மொழி உணர்ச்சி போன்ற பல்வேறு விசயங்கள் பாரம்பரியமாக இருப்பதாக சொல்கின்றீர்கள்; இன்றைய சராசரி இளைஞர்களிடம் திராவிடர் இயக்கம் குறித்த பார்வை நேர்மறையாக இருக்கின்றதா? இந்த அமைப்பினால் வந்தோம் என்ற உணர்வு இருக்கின்றதா? இதை நீங்கள் எப்படிப் பார்க்கின்றீர்கள்?*

*கொளத்தூர் மணி: மிகக் குறைவாக தான் இருக்கின்றது.*

*ஊடகவியலாளர்: அதற்கு என்ன காரணமென்று நினைக்கின்றீர்கள்?*

*கொளத்தூர் மணி: திராவிடர் இயக்கத்தின் குறையாகத்தான் சொல்லவேண்டும். நாம் போதிய அளவு அவர்களிடம் செய்திகளை எடுத்துச் செல்லவில்லை. ஊடகங்களும், பாடத்திட்டமும் தான் மாணவர்களிடையே, இளைஞர்களிடையே செய்திகளை எடுத்துச் செல்ல முடியும். ஊடகங்கள் இதைச் செய்வதில்லை; எனவே பாடத்திட்டத்தில் கொண்டு வந்திருக்க வேண்டும். குறைந்தது இட ஒதுக்கீடு பற்றி மட்டுமாவது பாடத் திட்டத்தில் கொண்டு வந்திருக்கவேண்டும்; இதுவரை அப்படிப்பட்ட முயற்சி ஏதும் இல்லை. எல்லா இடங்களிலும் இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் பி.ஜே.பி கூட கடந்த முறை, தமிழகத்தில் ஆதரிக்கிறோம் என்று சொன்னார்கள்; இருந்தும் ஏன் பாடத்திட்டத்தில் வரவில்லை? நம்மவர்கள் அக்கறை இல்லாதவர்களாக இருக்கின்றார்கள் அல்லது ஆட்சியில் இருப்பவர்களை விட அதிகாரிகளாக இருப்பவர்கள் கூடுதல் செல்வாக்கு செலுத்துகிறார்கள் என்றுதான் நான் புரிந்து கொள்கிறேன். போதிய அளவு நாம் எடுத்துச் செல்லவில்லை என்றாலும் மேல்நிலைப் பள்ளி கல்லூரி மட்டத்தில் இருக்கும் மாணவர்களில் பலர் இப்போது புதிதாக எல்லா இடங்களிலும் எங்கள் அமைப்புகளை நோக்கி வருவதையும் நாங்கள் பார்க்கின்றோம். தனியார் - சுயநிதிக் கல்லூரிகளில் பெற்றோர்களால் பல இலட்சம் பணம் கொடுக்கப்பட்டு இடம் வாங்கி தந்திருக்கிறார்கள் என்ற நிலை இருக்கும் போது போராட்டத்திற்கு வருவதற்கு மாணவர்களுக்குத் தயக்கம் இருக்கின்றது; ஆனால் பலர் இவை குறித்த விவாதத்திற்குள் இப்போது வருகிறார்கள். இதற்கான பெரும் பங்கு தமிழ்த் தேசியவாதிகளையே சாரும்.*

*ஊடகவியலாளர்: அந்த திருச்செங்கோடு பகுதியில் ஒரு குறிப்பிட்ட சமூகம் அடர்த்தியாக இருக்கின்றது; அந்த சமூகத்தைச் சார்ந்த இயக்கங்கள் அதிக அளவில் 'மாதொரு பாகன்' நாவலுக்கு எதிர்ப்பு காட்டுகின்றார்கள். தற்போதும் உள்ள திருச்செங்கோடு, கோவில் தேரோட்டம், தெரு, பகுதி முதலியவற்றை அப்படியே குறிப்பிட்டு, ஒரு நூறு வருடத்திற்கு இங்கு பெண்கள் எந்த ஆணோடும் சென்று குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்ற மரபு இருந்தது என்று சொல்லும் போது, இப்போ திருக்கும் இளைஞர்களுக்கு இது அவமானமாக இருக்கின்றது; எனவே தான் பொதுமக்கள் வெகுண்டெழுந்து போராட்டம் நடத்துகின்றார்கள் என்று சொல்லப்படுகின்றதே?*

*கொளத்தூர் மணி: உதாரணமாக, எனது நண்பர் பற்றியோ, ஒரு தோழியைப் பற்றியோ இவள் ஒழுக்கம் கெட்டவள், இவளோடு தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டாம் என்று ஒருவர் எனக்கு கடிதம் எழுதுகிறார் என்று வைத்துக் கொள்வோம். இதற்காக என்ன செய்ய வேண்டும்? தன்னை திருத்திக் கொள்ள வேண்டும் அல்லது தவறான செய்தி என மறுக்க வேண்டும் அல்லது அமைதியாக விட்டுவிட வேண்டுமே தவிர, அதை பத்தாயிரம் படி எடுத்து இப்படி எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கின்றது என்று பரப்பினால் இதில் அவமானப்படுத்தப்படுவது யார்? விரும்பி காசு கொடுத்து நூலை வாங்கி படித்தவர்களுக்கு மட்டும் தெரிந்திருந்த செய்தியை இவர்கள் பத்தாயிரம் இருபதாயிரம் படி என்று எடுத்து பரப்பியுள்ளார்கள் என்றால் யார் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்? படி எடுத்துக் கொண்டு அதிகம் இழிவுபடுத்தியவர்கள் மீது தானே நடவடிக்கை எடுக்க வேண்டும்?*

*ஊடகவியலாளர்: இவர்கள் சொல்லும் பண்பாட்டு பாதுகாப்பு என்பது உண்மை இல்லை என்கிறீர்களா?*

*கொளத்தூர் மணி: அப்படி இருந்திருந்திருந்தால் பல்லாயிரம் படி எடுத்துக் கொடுப்பார்களா? எட்கர் தர்ஸ்டன் 1909 இல் 'தென்னிந்திய குடிகளும் குலங்களும்' என்று எழுதியுள்ளார்; அதில் கொங்கு வேளாளர் பற்றி என்ன எழுதியுள்ளார் என்பதை இவர்கள் படித்துப் பார்க்கட்டும். அப்படியானால் அந்த நூலை எரிக்கவேண்டும்; சூத்திரன் என்று சொல்லுகின்ற மனுசாஸ்திரத்தை எரிக்கவேண்டும்; குழந்தை இல்லை என்றால் யாருடனும் சென்று குழந்தைப் பெற்றுக்கொள்ளலாம் என்று சொல்லுகின்ற ரிக் வேதம், மகாபாரதம் உள்ளிட்ட அனைத்து நூல்களையும் சேர்த்து எரிக்கவேண்டும். அதை விட்டு விட்டு இந்த நூலுக்கும் மட்டும், அதுவும் நான்கு ஆண்டுகளுக்கு பின்னால் இப்படி ஒரு பிரச்சனை திடீரென வருகிறது என்றால் யாரோ ஒரு சுயநலமி தூண்டிவிட்டிருக்கின்றார். நான் கேள்விப்பட்ட வரை அந்த ஊர்க் கல்வி நிறுவனங்கள் மீது இவர் கடுமையான விமர்சனம் செய்து எழுதிய கட்டுரைகள் தான் காரணம் என்று அறிகின்றேன். அதே சமுதாயத்தில் தோன்றியவர்கள், எதிர்ப்பு அறிக்கை விட்டிருக்கிறார்கள்; அங்கிருக்கும் மருத்துவர் ஒருவர் எதிர்ப்பு அறிக்கை விட்டிருக்கிறார். அவர் என்னிடம் சொன்னார் "அப்படி ஒரு தெரு இருக்கின்றது; தேவடியாள் தெரு என்பதை மட்டும் தேரடித் தெரு பெயர் மாற்றம் செய்யப்பட்டிருக்கிறதே தவிர அப்படி இருக்கத் தான் செய்கிறது; இன்னும் மூன்று பேர் அங்கு இருக்கின்றார்கள்; சில தினங்களுக்கு முன்பு அவர்களை அழைத்துப் பேசினேன்" என்று. இதற்குள் பெரிய அரசியல் இருப்பதாகத்தான் புரிந்து கொள்கிறேன். காலூன்றுவதற்கு எதை வேண்டுமானலும் செய்ய லாம் என்ற நோக்கத்தில், அந்தப் பகுதிப் பெண் களைக் கேவலப்படுத்தி யவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்தியவர்கள் தான் என்பது எனது கருத்து.*

(நிறைவு)

**பொது சிவில் சட்டம் கட்டுரை – அடுத்த இதழில்**

## பெரியார் இயக்கங்கள் ஒருங்கிணைந்து போராடுவதை வரவேற்கிறோம்

**ஊடகவியலாளர்:** *இது கருஞ்சட்டைகள் ஒன்றிணையும் நேரம் என்று பேராசிரியர் சு.ப.வீ ஒரு பேட்டியில் சொல்லியிருக்கிறார்; கொள்கைரீதியாக உங்களுக்கும் திராவிடர் கழகத்திற்கும் எந்த விதமான வேறுபாடும் கிடையாது; பல அபாயங்களை சந்திக்க வேண்டி உள்ள தற்போதைய சூழலில் திராவிடர் இயக்கங்கள் ஒன்றிணைவதற்கான திட்டம் அல்லது நிர்பந்தம் இருக்கின்றதா?*

**கொளத்தூர் மணி :** *கொள்கை வேறுபாட்டால் எங்களுக்குள் பிரிவு ஏற்படவில்லை; நடைமுறை சிக்கல்களால் வந்தது; கொள்கையில் ஒன்றுபட்டுதான் இருக்கின்றோம். எனவே ஒருங்கிணைந்து போராடுவதில் தவறு இல்லை. ஒரு மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் எங்கள் அமைப்பும், கோவை இராமகிருஷ்ணன் அமைப்பும் தனித்தனியாக பிரிந்தோம். ஈழ விடுதலை உள்ளிட்ட பல சிக்கல்களில் இணைந்து நின்றுப் போராடிக் கொண்டுதான் இருக்கின்றோம். அண்மையில் ஈரோட்டில் நடைபெற்ற கோட்சே சிலை எதிர்ப்பு மாநாட்டில், காங்கிரஸ், கம்யூனிஸ்ட் உட்பட பல அமைப்புகளோடு கலந்துகொண்டோம். அப்படி இருக்கும்போது பெரியாரை ஏற்றுக்கொண்ட இயக்கங்களோடு கலந்துகொள்வதற்கு தடை ஏதும் இல்லை. காலப்போக்கில் அப்படி ஏற்படக் கூடியக் கூடிய ஒன்றாகத்தான் இருக்கும் என்று நான் நம்புகின்றேன். அப்படி ஒரு நிலை வரலாம் மி வரவேண்டும் என்றும் நான் விரும்புகின்றேன். அப்படிபட்ட இணைப்பு தேவையான ஒன்று தான்; அமைப்பு ஒன்றாக இணைய வாய்ப்பில்லை என்றாலும் கூட்டமைப்பாக செயல்பட தடை ஏதும் இருக்காது; காலம் தான் அதைத் தீர்மானிக்க வேண்டும்.*

**ஊடகவியலாளர்:** *இதே நேர்முகம் நிகழ்ச்சியில் திராவிடர் கழகத் தலைவரிடம் இதே கேள்வியை கேட்ட போது... 'இப்போது நாங்கள் யாரும் யாரையும் விமர்சிப்பது கிடையாது; ஆனால் எதிரிகளைக் கூட நாங்கள் பயன்படுத்திக் கொள்வோமே தவிர ஒரு போதும் எதிரிகளுக்கு எங்கள் பிளவு சாதகமாக இருக்காது' என்பதைப் போன்ற ஒரு ஃபேவரான பதிலைத் தான் சொல்லியிருக்கிறார்; பாடலாசிரியர் அறிவுமதியும் இதே கோரிக்கையை வைத்தார்; சு.ப.வீ.யும் சொன்னதால் இப்படி ஒரு கேள்வியை தங்கள் முன் வைத்தேன்.*

**கொளத்தூர் மணி :** *2000 ஆம் ஆண்டில் நாங்கள் தனியாகப் பிரிந்து அமைப்பு தொடங்கிய போதே, மேடைகளில் பிற பெரியார் இயக்கங்களை விமர்சிக்கக் கூடாது என்ற ஒப்பந்தத்தோடுதான் இணைந்தோம். இடையில் 'குடிஅரசு' தொடர்பான ஒரு சிக்கலின் போது மட்டும் பேசப்பட்டதே தவிர மற்ற எந்த நேரங்களிலும் நாங்கள் பேசியதில்லை. மற்ற இயக்கங்களோடு எல்லாம் இணைந்து செயல்படும் போது இவர்களோடு இணைந்து நிற்பதில் தடை இருக்க முடியாது; அது கருதிப் பார்க்கவேண்டிய ஒன்று தான்.*

**பேட்டியில் கொளத்தூர் மணி**

DATE OF PUBLICATION 26.02.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# ‘காவேரி–மீத்தேன்’ இயக்கங்களில் கழகத் தோழர்கள் பங்கேற்பு: கைது



18-02-2015 புதன் கிழமை காலை 11.00 மணி அளவில், சேலம் 5 ரோட்டில், காவேரி ஆற்றின் குறுக்கே அணை கட்ட முயற்சி செய்யும் கர்நாடக அரசை கண்டித்தும் அம்முயற்சியை தடுக்கத் தவறும் மத்திய அரசை கண்டித்தும் மத்திய அரசு அலுவலகம் முன் முற்றுகை போராட்டம் நடைபெற்றது. காவேரி பாதுகாப்பு இயக்கம் சார்பில் நடைபெற்ற இந்த ஆர்பாட்டத்திற்கு ம.தி.மு.க பொறுப்பாளர் தாமரைகண்ணன் தலைமை ஏற்றார்.

திராவிடர் விடுதலைக் கழகம் உள்ளிட்ட சுமார் 400 தோழர்கள் கைது செய்யப்பட்டனர். அனைவரும் சாமிநாதபுரம் சி.எஸ்.ஆர் மண்டபத்தில் அடைக்கப்பட்டு மாலை விடுவிக்கப்பட்டனர். போராட்டம் குறித்து கழக மாவட்ட தலைவர் தோழர் க.சக்திவேல் உரையாற்றினார். மேற்கு மாவட்ட செயலாளர் தோழர் கோவிந்தராசு கொள்கைப் பாடல் பாடினார்.

### மயிலாடுதுறையில்

அதே நாளில், மயிலாடுதுறையில் ‘பி.எஸ்.என்.எல்.’ அலுவலகம் முன் முற்றுகைப் போராட்டம், ம.தி.மு.க. பொருளாளர் மருத்துவர் மாசிலாமணி தலைமையில் நடந்தது. 500க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மகேஷ், இளையராஜா, விஜி, சங்கர், ரமேஷ், ராஜா, நடராசன், செந்தில், ஜெய்சங்கர், யுவராஜ் உள்ளிட்ட தோழர்கள் பங்கேற்று கைதானார்கள்.

மீதேன் எதிர்ப்பு கூட்டியக்கத்தின் சார்பில் இயக்க ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் ஜெயராமன், சாக்கோட்டை இளங்கோவன், பொறியாளர் சந்திர சேகர், நாகை, தஞ்சைப் பகுதியில் ஊர் ஊராகச் சென்று மக்களை சந்தித்து தொடர் பரப்புரை இயக்கம் 10 நாள்கள் நடத்தினர். பரப்புரை இயக்க்ததில் திராவிடர் விடுதலைக் கழக பொறுப்பாளர்கள் இளையராஜா, மகேஷ், தோழர்கள் நான்கு நாள்கள் பங்கேற்றனர். பிப்.20ஆம் தேதி கல்லணையில் நடந்த நிறைவு நிகழ்விலும் தோழர்கள் இளையராஜா, மகேஷ், விஜி, சங்கர் ஆகியோர் பங்கேற்றனர்.

## ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்துக்கு பாராட்டு!

என்கவுன்டர் கொலை வழக்கில் பா.ஜ.க. தலைவர் அமித்ஷா விடுவிக்கப் பட்டுள்ளதன் பின்னணியில், சிறப்பு புலனாய்வுக் குழுவும் சிறப்பு நீதிமன்றமும் அதற்காக எல்லை மீறி முறைகேடாக செயல்பட்டதை ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்தில் படித்த போது அதிர்ந்து போனேன். இவ்வளவு அப்பட்டமான முறைகேடுகளை ஊடகங்கள் கட்டுப்பாடாக இருட்டடித்துவிட்ட நிலையில் ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ மட்டுமே எப்படியோ ‘தோண்டி எடுத்து’ விரிவான பதிவுகளை செய்திருப்பது பாராட்டுக்குரியது.

**– தமிழ் இனியன், பெரியார் அம்பேத்கர் கழகம், குடந்தை**

## சமூக நீதிக்குப் போராடும் வழக்கறிஞர்களுக்கு கழகம் ஆதரவு

சென்னை உயர்நீதி மன்ற நீதிபதிகள் நியமனத்தில் சமூக நீதியை கடைபிடிக்க வலியுறுத்தி சென்னையில் உண்ணாவிரத போராட்டம் நடத்தும் வழக்கறிஞர்களை சந்தித்து 18.02.15 அன்று மாலை திராவிடர் விடுதலைக் கழக பொதுச்செயலாளர் விடுதலை இராஜேந்திரன் ஆதரவு தெரிவித்தார். போராட்டத்தின் கோரிக்கைகளை ஆதரித்து உரையாற்றினார்.

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

# தமிழ்நாடு மாணவர் கழகம் : காதலர் நாள் வாழ்த்துக்கள்



தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பில் காதலர் தின வாழ்த்து சுவரொட்டிகள் ஈரோடு, சித்தோடு, கோரி, பவானி, குமாரபாளையம், மேட்டூர், காவலாண்டியூர், கொளத்தூர், நங்கவள்ளி பகுதகளில் ஒட்டப்பட்டன. காதலர் தின வாழ்த்து துண்டறிக்கைகளை ஈரோடு, மேட்டூர் ஆர்.எஸ். பகுதிகளில் தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பில் வழங்கப்பட்டது.

# வேனில் – அரவிந்தன் வாழ்க்கை ஒப்பந்த விழா



சீரிய பெரியாரியலாளரும் பெரியார் இயக்கத்தோடு நெருக்கமாக பயணித்து வருபவரும் சுங்கத் துறை முன்னாள் அதிகாரியுமான குகா எனும் குகானந்தன், சுங்கத் துறை முன்னாள் அதிகாரி தமிழ் ஒளி ஆகியோரின் மகள் பொறியாளர் கு. வேனில், ஆசிரியர் கு.அரவிந்தன் (திருவாளர்கள் குணசேகரன்-மீனா ஆகியோரின் மகன்) வாழ்க்கை ஒப்பந்த நிகழ்வு, சென்னை கீழ்க்கட்டளை ஜெயச்சந்திரன் மகாலில் 18.1.2015 காலை 10 மணியளவில் சிறப்புடன் நடந்தது. திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்தார். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பேராசிரியர் அரசு, மதுரை வரதராசன் உள்ளிட்ட பலரும் வாழ்த்திப் பேசினார். கழகத் தோழர்கள் நண்பர்கள் ஏராளமாக திரண்டு வந்திருந்தனர். அனைவருக்கும் பெரியார் சிந்தனைகளடங்கிய நூல் பரிசாக வழங்கப்பட்டது.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 26th February 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN